بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 10

இதழ் 26 & 27

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1446 துல்ஹஜ் 29 - 7 முஹர்ரம் 1447 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1404
இஹ்ஸான் 26 - 03 வஃபா ★ ஜீன் 26- ஜீலை 03 - 2025


## அல்லாஹ்வின் கட்டளை

اَلۡحَجُّ اَشۡہُرٌ مَّعۡلُوۡمٰتٌ ۚ فَمَنۡ فَرَضَ فِیۡہِنَّ الۡحَجَّ فَلَا رَفَثَ وَلَا فُسُوۡقَ ۙ وَلَا جِدَالَ فِی الۡحَجِّ

பொருள்
ஹஜ்ஜின் மாதங்கள் நன்கு தெரிந்தவையே. ஆகவே, அம்மாதங்களில் ஹஜ்ஜு செய்ய உறுதி எடுத்துக் கொள்பவர் ஹஜ்ஜில் பாலுணர்வு பற்றிய பேச்சும், எவ்வித வரம்பு மீறுதலும், எவ்வித சச்ரவும் கூடாது (என்பதை நினைவில் கொள்ள வேண்டும்).

(அல்பக்கரா: 198)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எந்த நபர் இந்தக் காலத்திலும் மாநபி (ஸல்) அவர்களை பின்பற்றுகின்றாரோ அவர் சந்தேகத்திற்கு இடமின்றி கல்லறையிலிருந்து எழுப்பப்படுகின்றார். மேலும், ஓர் ஆன்மிக வாழ்க்கை அவருக்கு வழங்கப்படுகின்றது. கற்பனையாக மட்டுமல்லாமல் அதன் சரியான, உண்மையான தாக்கங்கள் வெளிப்படுகின்றன. மேலும், வானங்களின் உதவிகளும், வானங்களின் அருள்களும், பரிசுத்த ஆவியின் வழக்கத்திற்கு மாற்றமான உதவிகளும் அவரோடு இருக்கின்றன**

**(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்களின் பொன்மொழி)**

மாற்றப்பட்டும், திரித்துக் கூறப்பட்டும் இருக்கின்ற கிறிஸ்தவர்களின் கைகளில் உள்ள அந்த சுவிசேஷங்களை மௌனமாக இருந்து கொண்டு, நானே மறுமை வாழ்வும், ஜீவனுமாக இருக்கின்றேன் என்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் நிச்சயமாக வாதம் செய்துள்ளார்கள் என்ற இந்த சொற்றொடரை சரியானது என்று புரிந்து கொண்டாலும் கூட அதனால் எதுவும் கிடைக்காது. ஏனெனில், தன்னகத்தே ஆதாரத்தைக் கொண்டிராத எந்தவொரு வாதமும் எவருடைய சிறப்பிற்கும் காரணமாக இருக்க முடியாது. ஒரு மனிதன் ஒரு விஷயம் தொடர்பாக வாதம் எதுவும் செய்யவில்லை; ஆனால், அந்த விஷயத்தை அவர் செய்து காட்டினால் பின்னர் வாதம் செய்து விட்டு அதற்கான ஆதாரத்தை தருவதிலிருந்தும் தோல்வியடைந்திருக்கின்ற வேறொரு மனிதரை விட, (முதலாம் நபராகிய) அவர் பன்மடங்கு சிறந்தவராக இருக்கின்றார்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் வாதம் தொடர்பாக மற்றவர்களோடு தொடர்புடைய விஷயங்கள் ஒருபுறம் இருக்கட்டும்! அவர்களுடைய சீடர்களின் நிலையைப் பார்க்கும்போது, ஆட்சேபனை செய்பவரின் பார்வையில் அது கடும் ஆட்சேபனைக்கு தகுதியுடையதாக இருக்கின்றது என்பதற்கு சுவிசேஷங்கள் சுயமே சாட்சியம் பகர்கின்றன. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தமது சீடர்களை மனயிச்சைகளின் கல்லறைகளிலேயே விட்டுவிட்டார்கள் என்பது நிரூபணமாகின்றது. ஆனால், நாம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் இந்த வாதத்தையும், ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் வாதத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த வாதத்திற்கும் அந்த வாதத்திற்குமிடையில் இருள்கள் மற்றும் ஒளியின் வித்தியாசம் தென்படுகின்றது.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் வாதமானது ஆதாரமற்றதாகவும், ஒரு குறுகிய இருள் நிறைந்த குழியில் வீழ்ந்து கிடப்பதாகவும் இருக்கின்றது. அது தன்னகத்தே எந்த ஒளியையும் கொண்டிருக்கவில்லை. ஆனால், நமது மாநபி (ஸல்) அவர்களின் வாதம் சூரியனைப் போன்று ஒளிர்கின்றது. மாநபி (ஸல்) அவர்களின் நிரந்தர வாழ்வு மற்றும் புகழுக்குரிய அந்த பெருந்தகையின் நிரந்தரமான அருட்கள் நீடித்துக் கொண்டிருக்கின்றன என்பதற்கு இதுவும் மகத்தான சான்றாக இருக்கின்றது. அதாவது எந்த நபர் இந்தக் காலத்திலும் மாநபி (ஸல்) அவர்களை பின்பற்றுகின்றாரோ அவர் சந்தேகத்திற்கு இடமின்றி கல்லறையிலிருந்து எழுப்பப்படுகின்றார். மேலும், ஓர் ஆன்மிக வாழ்க்கை அவருக்கு வழங்கப்படுகின்றது. கற்பனையாக மட்டுமல்லாமல் அதன் சரியான, உண்மையான தாக்கங்கள் வெளிப்படுகின்றன. மேலும், வானங்களின் உதவிகளும், வானங்களின் அருள்களும், பரிசுத்த ஆவியின் வழக்கத்திற்கு மாற்றமான உதவிகளும் அவரோடு இருக்கின்றன. மேலும், அவர் உலகில் உள்ள எல்லா மனிதர்களை விடவும் ஒரு தனிச் சிறப்பு பெற்ற மனிதராக ஆகிவிடுகின்றார். எதுவரை என்றால், மேலான இறைவன் அவரோடு உரையாடுகின்றான். தனது சிறப்பான இரகசியங்களை அவரிடம் வெளிப்படுத்துகின்றான். மேலும் தன்னைப் பற்றிய உண்மைகளையும்,ஞானங்களையும் அவருக்கு திறந்து கொடுக்கின்றான். மேலும், தனது உண்மைகளையும், தனது அருள்களின் மின்னுகின்ற அடையாளங்களையும் அவரிடம் வெளிப்படுத்துகின்றான். மேலும், தனது உதவிகளை அவர் மீது இறக்குகின்றான். மேலும், தனது அருள்களை அவருடன் வைத்து விடுகின்றான். மேலும்,தனது படைத்து பரிபாலிக்கும் பண்பின் கண்ணாடியாக அவரை ஆக்கிவிடுகின்றான். மேலும், அவரது நாவிலிருந்து ஞானம் மிக்க விஷயங்கள் வெளிவருகின்றன. மேலும், அவருடைய உள்ளத்திலிருந்து நுட்பமான கருத்துகளின் நீரூற்று வெளிப்படுகின்றது. மேலும், மறைவான இரகசியங்கள் அவருக்கு வெளிப்படுத்தப்படுகின்றன. மேலான இறைவன் ஒரு மகத்தான தோற்றத்தை அவருக்கு காட்டுகின்றான். மேலும், அவருக்கு மிகவும் அருகில் சென்று விடுகின்றான். மேலும் அவர் தனது பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதிலும், தனது ஏற்புடைமையிலும் இறை ஞானத்தின் கதவுகள் தமக்கு திறந்து கொடுக்கப்படுவதிலும், மறைவான இரகசியங்களை அறிந்து கொள்வதிலும், அருள்கள் இறக்கப்படுவதிலும் அனைவரையும் விட மேலான நிலையிலும், எல்லாரையும் மிகைத்தும் நிற்கின்றார்.

எனவே இந்த எளியவனும் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டு இதே விஷயங்கள் தொடர்பாகவும், இந்த அத்தாட்சிகளை நிறைவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் பல்லாயிரக்கணக்கான பதிவுத் தபால்களை ஆசியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் உள்ள பிரசித்தி பெற்ற எதிரிகளுக்கு அனுப்பி வைத்திருந்தேன். இந்த ஆன்மிக வாழ்வானது காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களை பின்பற்றாமல் வேறு ஏதாவது வழியில் கிடைக்கின்றது என்று எவராவது வாதம் செய்வதாக இருந்தால், அவர் இந்த எளியவனோடு போட்டி போட்டு பார்க்கட்டும்! அவ்வாறில்லையென்றால் அவர் உண்மையைத் தேடுபவராக மாறி, ஒரு தரப்பில் வெளிப்படுகின்ற அருள்களையும், அடையாளங்களையும் பார்ப்பதற்கு முன்வரட்டும்! ஆனால், எவருமே உண்மையுடனும், நல்லெண்ணத்துடனும் இதன் பக்கம் திரும்பவில்லை. தாமே ஒதுங்கி செல்வதன் மூலம் அவர்கள் அனைவரும் இருள்களில் வீழ்ந்து கிடக்கின்றனர் என்பதை நிரூபித்து விட்டனர். தற்காலத்தில் நமது சக மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்ற சகோதரர்களான முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்பவர்களும் கூட இந்த ஒளியை மறுக்கின்றனர். அதை அவர்கள் ஏற்றுக் கொள்வதும் இல்லை; மேலும், உண்மையான உள்ளத்துடன் சோதித்துப் பார்ப்பதற்காக வருவதும் இல்லை. காஃபிர் என்று கூறுவதில் முழுமையாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த எல்லா விஷயங்களுக்கும் அசல் காரணம்

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம்...

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**சில ஸரிய்யாக்களின் பின்னணியில் ஸீரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

ஜமாஅத்தின் சான்றோராகவும், மாபெரும் அறிஞராகவும் கிலாஃபத்தின் மீது அர்ப்பணிப்பு கொண்டவராகவும் ஒப்பிட இயலாத மார்க்கத் தொண்டராகவும் கிலாஃபத்தின் வலிமை மிக்க உதவியாளராகவும் மதிப்பிற்குரிய மர்ஹூம் ஸய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் நாஸிர் அவர்கள் திகழ்ந்தார்கள்

ஸய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் நாஸிர் அவர்கள் எழுந்து நின்றார்கள். அங்கேயே ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம், நான் வாழ்வை அர்ப்பணிக்கிறேன் என்று கூறினார்கள். அதைக் கண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு மிகவும் உணர்ச்சிப்பூர்வமான நிலை ஏற்பட்டது. அன்னார் (ரலி) அதை மிகவும் பாராட்டினார்கள். அப்போது மர்ஹூம் ஸய்யது மஹ்மூத் அஹ்மத் நாஸிர் ஸாஹிப் அவர்களின் வயது 14 ஆக இருந்தது

அவர்களின் தொழுகைகளை நான் பள்ளிவாசலில் கண்டுள்ளேன். ஓரமாக உருக்கத்துடன் பணிவுடன் தொழுவார்கள். வீட்டில் தொழக் கூடிய தொழுகைகளும் இவ்வாறானதாக இருந்திருக்கும். அதை நாம் அறியோம். ஆனால், வெளியில் தொழுகை நேரத்தில் தொழக் கூடிய தொழுகை ஒரு வினோதமான நிலையைக் கொண்டதாக இருந்தது. ஓர் இயல்பான, பகட்டு இல்லாத தொடர்பு இருந்தது. மக்களுக்கு முன்னால் அதை வெளிப்படுத்தக் கூடாது என்று நினைப்பார்கள். ஆனாலும், சில சமயங்களில் வெளிப்பட்டு விடும். மக்கள் அதை குறிப்பெடுத்துக் கொள்வார்கள் (ஸய்யது குலாம் அஹ்மத் ஃபரக் ஸாஹிப்)

கபர் எனும் ஒரு சொல்லை பிடித்துக் கொள்ளுங்கள்; அதன்படி செயல்படுங்கள் என்று மர்ஹூம் கூறி இருக்கிறார்கள். கபர் என்பதன் விளக்கம் - கஃப் என்பது குர்ஆனையும், பே என்பது புஹாரீ ஹதீஸையும், ரே என்பது ரூஹானீ கஸாயீனையும் குறிக்கும் (மர்ஹூம் ஸய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் நாஸிர்)

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 16 மே 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஹிஜ்ரத் மாதம் 16 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

இன்றும் படையெடுப்புகள் பற்றிய குறிப்பை எடுத்துக் கூறுவேன். என்னிடம் இருக்கக் கூடிய தொகுப்பில் மக்கா வெற்றிக்கு முன்பு நிகழ்ந்த படையெடுப்புகள் பற்றிய குறிப்புகள் உள்ளன; சுருக்கமான குறிப்புகள்தான்; அதற்குப் பிறகு வேறொரு கருத்தை எடுத்துரைப்பேன்.

கஸிரா எனுமிடத்தை நோக்கி அனுப்பி வைக்கப்பட்ட அபூ கதாதா அன்ஸாரி (ரலி) அவர்கள் படையெடுப்பைப் பற்றிய குறிப்பு காண கிடைக்கிறது. இந்த படையெடுப்புக்கு அமீராக அபூ கதாதா (ரலி) அவர்கள் இருந்தார்கள். கஸிரா எனுமிடம் மதீனாவின் வடகிழக்கில் பனூ முஹாரிபுடைய பிரதேசத்தில் கணக்கிடப்படுகிறது. இது நஜதுடன் இணைந்து இருக்கின்ற திஹாமாவுடைய பகுதியாகவும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இங்கு பனூ ஃகத்ஃபானுடைய ஒரு கிளைக் கோத்திரம் குடியிருந்தது. பனூ ஃகத்ஃபான் இஸ்லாத்தின் எதிர்ப்பில் தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு சந்தர்ப்பத்தையும் அவர்கள் கை நழுவ விட்டதில்லை. நஜது பகுதியில் கஸிரா எனுமிடத்தில் வசித்து வந்த பனூ ஃகத்ஃபான் மதீனத்து ஆட்சிக்கெதிராக குழப்பத்தை பரப்புவதில் மூழ்கி இருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ ஹஸ்ரத் அஸ்லமீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஸூராகா பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் மகளுடன் நான் திருமணம் செய்தேன். அவர்கள் பத்ர் போரில் ஷஹீதாகி இருந்தார்கள். எனக்கு உலகில் அவர்களின் பொருட்களில் இருந்து எதுவெல்லாம் கிடைத்ததோ அதில் இவளுடைய அந்தஸ்தை விட அதிக நேசத்திற்குரியதாக எதுவும் இருக்கவில்லை. நான் இவளுக்கு மஹராக 200 திர்ஹமை நிர்ணயித்திருந்தேன். என்னிடம் கொடுப்பதற்கு எதுவுமே இருக்கவில்லை. அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே இந்த மஹ்ரை செலுத்துவார்கள் என்று நான் கூறிக் கொண்டேன். பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் நான் சென்றேன். அன்னாரிடம் இதைக் குறித்து பேசினேன். எவ்வளவு மஹர் நிர்ணயம் செய்துள்ளீர் என்று அன்னார் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! 200 திர்ஹம் நிர்ணயித்துள்ளேன். அதை செலுத்துவதில் எனக்கு உதவி செய்யுங்கள் என்றேன். அதற்கு, உமக்கு கொடுத்து உதவி செய்வதற்கு இப்பொழுது என்னிடம் எந்த பொருளும் இல்லை; ஆனால், அபூ கதாதா (ரலி) அவர்களுடன் சில நபர்களை ஒரு படையெடுப்புக்காக அனுப்பலாம் என்று நான் எண்ணம் கொண்டுள்ளேன். நீங்கள் அதில் புறப்பட விரும்புகிறீர்களா? உங்களுடைய மனைவிக்கு கொடுக்க வேண்டிய மஹரை போர்ச் செல்வமாக அல்லாஹ் உங்களுக்கு வழங்கி விடுவான் என நான் நம்புகிறேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அதற்கு, நான் சரி! என்றேன். பிறகு நாங்கள் புறப்பட்டோம்; நாங்கள் மொத்தம் 16 பேர் இருந்தோம்; ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி) அவர்கள் எங்களுடைய அமீராக இருந்தார்கள்; பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களை நஜத் இருந்த திசையில் கத்ஃபான் கோத்திரத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள்; நாங்கள் இரவில் பயணம் செய்வோம்; பகலில் ஒளிந்து கொள்வோம்.

திடீரென்று தாக்குதல் நடத்துங்கள்; பெண்களையும், குழந்தைகளையும் கொலை செய்யக் கூடாது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். பிறகு நாங்கள் புறப்பட்டோம்; எந்த அளவுக்கு என்றால், ஃகத்ஃபானின் ஒரு பகுதியை சென்றடைந்து விட்டோம்.

இருள் பரவிய பிறகு அபூ கதாதா (ரலி) அவர்கள் எங்களுக்கு முன்னால் சொற்பொழிவு ஆற்றினார்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சும்படி வலியுறுத்தினார்கள். இரண்டிரண்டு நபர்களைக் கொண்ட ஜோடியை ஏற்படுத்தினார்கள். ஒவ்வொரு நபரும் தமது தோழரை விட்டு பிரிய கூடாது; எந்த அளவுக்கு என்றால், அவர் ஷஹீதாகி இருக்க வேண்டும் அல்லது அவரைப் பற்றிய செய்தியை கொண்டு வர வேண்டும். ஒருவரிடம் அவருடைய தோழரை குறித்து நான் விசாரிக்கும் போது தெரியாது என்று அவர் கூறக் கூடிய நிலையில் என்னிடம் வர வேண்டாம். கண்டிப்பாக சேர்ந்து இருக்க வேண்டும். நான் தக்பீர் முழக்கமிடும்போது நீங்களும் தாக்குதல் நடத்துங்கள். எதிரியை விரட்டிச் செல்வதில் வெகு தொலைவில் சென்று விட வேண்டாம். அதிகமாக விரட்டிச் செல்ல வேண்டாம். எதிரி ஓடிவிட்டால் விட்டு விடுங்கள் என்றார்கள்.

ஆகவே நாங்கள் அங்கிருந்து மக்களை சுற்றி வளைத்தோம். ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி) அவர்கள் உரையிலிருந்து தம் வாளை வெளியே எடுத்தார்கள். தக்பீர் முழக்கமிட்டார்கள். நாங்களும் எங்களுடைய வாள்களை உரையில் இருந்து வெளியே எடுத்தோம். அவர்களுடன் தக்பீர் முழக்கமிட்டோம். பிறகு அங்கிருந்தவர்கள் மீது நாங்கள் தாக்குதல் நடத்தினோம். அப்போது நான் உயரமான ஒரு மனிதனைக் கண்டேன். உருவிய வாளை கையில் ஏந்தியவாறு மெதுவாக சென்று கொண்டிருந்தான். முஸ்லிம்களே! சொர்க்கத்தின் பக்கம் வாருங்கள்! என்று கூறிக் கொண்டிருந்தான். அவன் நிராகரிப்பவனாக இருந்தான். இளக்காரமாக அவ்வாறு கூறிக் கொண்டிருந்தான். உங்களுக்கு சொர்க்கம் வேண்டும்தானே. சொர்க்கத்தின் பக்கம் வாருங்கள்! என்று கூறிக் கொண்டிருந்தான். சொர்க்கம்! சொர்க்கம்! என்று கூறி எங்களை ஏளனம் செய்து கொண்டிருந்தான். அவன் திரும்பி வருவான் என்று எனக்கு புரிந்து விட்டது. நான் அவனுக்கு

பின்னால் புறப்பட்டுச் சென்றேன். என்னுடைய தோழர் என்னிடம், வெகு தொலைவு சென்று விட வேண்டாம்; வெகு தொலைவு சென்று விடக் கூடாது என்று நம்முடைய அமீர் நம்மை தடுத்துள்ளார் என்றார்.

எவ்வாறு இருப்பினும், அறிவிப்பாளர் கூறுகிறார்: நான் அவனை சென்றடைந்தேன். வெளியே தெரிந்து கொண்டிருந்த அவனது இடுப்பு பகுதியில் அம்பை எறிந்தேன். முஸ்லிம்களே! சொர்க்கத்திற்கு அருகில் இருக்கிறீர்கள் என்று அவன் ஏளனமாகக் கூறிக் கொண்டிருந்தான். நான் மீண்டும் அவனை நோக்கி அம்பெய்து அவனை கொன்று விட்டேன். நான் அவனது வாளை எடுத்துக் கொண்டேன். நீர் எங்கே சென்று விட்டீர்? என்று எனது தோழர் என்னை அழைத்துக் கொண்டிருந்தார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அபூ கதாதாவிடம் நான் சென்றேன். அவர்கள் உம்மை குறித்து என்னிடம் கேட்டார்கள். நான் அவரிடம் கூறிவிட்டேன் என்றார்.

அமீர் என்னைப் பற்றி விசாரித்தாரா? என்று நான் கேட்டேன். அதற்கு, ஆம்! ;அவர் என் மீதும், உம் மீதும் கோபப்பட்டார் என்று அவர் கூறினார். முஸ்லிம்கள் போர்ச் செல்வங்களை ஒன்று திரட்டி விட்டார்கள். அவர்களின் தலைவர்களை கொன்று விட்டார்கள் என்றும் அவர் கூறினார். ஆகவே, நான் ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி) அவர்களிடத்தில் சென்றேன். அவர்கள் என்னை ஏசினார்கள். நான் அவர்களிடம், நான் ஒருவனைக் கொன்றேன். அவனுடைய விவகாரம் இவ்வாறானதாக இருந்தது; அவன் இவ்வாறெல்லாம் கூறிக் கொண்டிருந்தான் என்றேன். பிறகு நாங்கள் கால்நடைகளை ஓட்டி வந்தோம்; எங்களுடைய வாள்கள் சேனத்துடன் தொங்கிக் கொண்டிருந்தன. காலை விடிந்தபோது, என்னுடைய ஒட்டகத்திலிருந்து இரத்தம் சொட்டு சொட்டாக வழிந்து கொண்டிருந்தது. ஒரு பெண் மானைப் போன்று திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் அப்போது அழுது கொண்டிருந்தாள். நாள் அவளிடம் என்ன பார்க்கிறாய்? என்று கேட்டேன். நான் ஒருவரை தேடிக் கொண்டிருக்கிறேன். அவர் உயிரோடு இருந்தால் உங்களிடமிருந்து எங்களை காப்பாற்றி விடுவார் என்று கூறினாள். நான் கொன்ற அந்த நபரைப் பற்றித்தான் இவள் ஒருவேளை பேசுகிறாளோ என்ன? அவனுடைய வாள் சேனத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது என்று எனது உள்ளத்தில் நான் கூறிக் கொண்டிருந்தேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அந்த நபருடைய வாளின் உறை இதோ உள்ளது; என்று கூறினாள். அவளிடத்தில் அந்த வாளின் உரை இருந்தது. நீர் உண்மையாளர் என்றால், இதில் அந்த வாளை இட்டு பார்! என்று கூறினாள். நான் அந்த உரையில் வாளை இட்டபோது அது முழுமையாக சென்றது. அதைக் கண்டு அந்தப் பெண் அழ ஆரம்பித்தாள். பிறகு நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஒட்டகங்களையும், ஆடுகளையும் கொண்டு சென்றோம்.

ஸஹாபிகள் இந்த படையெடுப்புக்காக 5 இரவுகள் வெளியே இருந்தார்கள் என்றும், 200 ஒட்டகங்களையும், ஓராயிரம் ஆடுகளையும், பல கைதிகளையும் கொண்டு வந்தார்கள் என்றும், ஐந்தில் ஒரு பங்கு தனியாக பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு நபருடைய பங்கிலும் 12 ஒட்டகங்கள் வந்தன என்றும், ஓர் ஒட்டகம் 10 ஆடுகளுக்கு இணையாக பங்கிட்டு கொடுக்கப்பட்டது என்றும் ஓர் அறிவிப்பில் வருகிறது. இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில், இந்த படையெடுப்பில் இருநூறு ஒட்டகங்களும், 2000 ஆடுகளும் பல கைதிகளும் போர்ச் செல்வமாக கிடைத்தன என்று வருகிறது.

பிறகு இஸம் எனும் பள்ளத்தாக்கை நோக்கி அனுப்பி வைக்கப்பட்ட ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி) அவர்களின் படையெடுப்பை பற்றிய குறிப்பு காணக் கிடைக்கிறது. இந்த படையெடுப்பு ரமலான் மாதம் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு அதாவது கி.பி 630 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நிகழ்ந்தது. இஸம், மதீனாவில் இருந்து 36 மைல் தொலைவில் கிழக்கு திசையில் நஜது பகுதியில் இருந்த ஒரு பள்ளத்தாக்கு ஆகும். அங்கு ஃகத்ஃபானுடைய கிளைக்கோத்திரமான பனூ அஷ்ஜஃ குடியிருந்தார்கள். இந்த படையெடுப்புக்கான காரணம் என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொள்வதற்காக மக்காவை நோக்கி புறப்பட எண்ணம் கொண்டபோது, அபூ கதாதா (ரலி) அவர்களை இஸம் எனும் பள்ளத்தாக்கை நோக்கி அனுப்பி வைத்தார்கள். இது மதீனாவின் கிழக்கு திசையில் இருந்தது. மக்காவுக்கு தெற்கு திசையில் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் புறப்படுவது மக்காவை நோக்கி கிடையாது; மாறாக, இஸம் எனுமிடத்தை நோக்கி இருக்கும் என்று அதன் மூலம் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அன்னார் (ஸல்) அனுப்பி வைத்திருந்தார்கள்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில், இந்த படைக்கு தளபதியாக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ ஹத்ரத் (ரலி) அவர்கள் இருந்தார்கள் என்று வருகிறது.

ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி) அவர்களுடன் எட்டு ஸஹாபிகள் இருந்தார்கள். அவர்களுள் ஹஸ்ரத் முஹல்லிம் பின் ஜஸ்ஸாமா லைஸீ (ரலி) அவர்களும் ஒருவர் ஆவார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ ஹத்ரத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் இஸம் பள்ளத்தாக்கை சென்றடைந்தபோது, அங்கு ஆமிர் பின் அஸ்பத் அஷ்ஜயீ என்பவர் எங்களை கடந்து செல்லும்போது இஸ்லாமிய முறைப்படி ஸலாம் கூறினார். அதைக் கண்ட முஸ்லிம்கள் அவருக்கு எதிராக கையை ஓங்குவதை விட்டு விலகிக் கொண்டார்கள். ஏனெனில், அவர் இஸ்லாமிய முறைப்படி ஸலாம் கூறியிருந்தார். ஆகவே இஸ்லாமிய போதனையின் அடிப்படையில் அவருக்கு எதிராக கை ஓங்குவது தடுக்கப்பட்டிருந்தது. ஆனால், முஹல்லிம் அவர்களுக்கு அந்த நபருடன் ஏற்கனவே ஏதோ சண்டை இருந்தது. எனவே அவர்கள் ஆமிர் பின் அஸ்பத் மீது தாக்குதல் நடத்தி அவரை கொன்று விட்டார்கள். மேலும், அவருடைய பொருட்களையும் ஒட்டகத்தையும் கையகப்படுத்திக் கொண்டார்கள். **இவரைத் தவிர வேறு எந்தக் குழுவினருடனும் சண்டையிடவில்லை. அவர்கள் இணை வைப்பாளர்களின் கவனத்தை திசை திருப்புவதற்காகவே ஸஹாபிகள் அனுப்பப்பட்டிருந்தார்கள். ஆகவே ஸஹாபிகள் அங்கிருந்து திரும்பினார்கள்.** அந்த காலகட்டத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவை நோக்கி புறப்பட்டுச் சென்று விட்டார்கள் என்ற தகவல் இவர்களுக்கு கிடைத்தது. ஆகவே இவர்களும் அந்தப் பக்கமாக பயணம் செய்து வழியில் பெருமானார் (ஸல்) அவர்களை சந்தித்து விட்டார்கள். அன்னாரை சந்தித்தபோது, அந்த நபர் கொல்லப்பட்ட செய்தியையும் அனைத்து சம்பவங்களையும் எடுத்துக் கூறினார்கள். வரலாற்று நூலில் எழுதப்பட்டுள்ளதென்னவென்றால், அப்போது இந்த ஒரு வசனம் இறங்கியது:

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا ضَرَبْتُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ
فَتَبَيَّنُوْا وَلَا تَقُوْلُوْا لِمَنْ اَلْقٰٓى اِلَيْكُمُ
السَّلٰمَ لَسْتَ مُؤْمِنًا ۚ
تَبْتَغُوْنَ عَرَضَ الْحَيٰوةِ الدُّنْيَا ۖ
فَعِنْدَ اللّٰهِ مَغَانِمُ كَثِيْرَةٌ ۗ
كَذٰلِكَ كُنْتُمْ مِّنْ قَبْلُ فَمَنَّ اللّٰهُ عَلَيْكُمْ
فَتَبَيَّنُوْا ۗ
اِنَّ اللّٰهَ كَانَ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرًا

பொருள்: நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வின் வழியில் பயணம் செய்யும்போது, நன்றாக விசாரணை செய்து கொள்ளுங்கள். எவரும் உங்களுக்கு ஸலாம் கூறினால், (அவரிடம்) நீர் நம்பிக்கை கொண்டவர் இல்லை என்று கூறாதீர்கள். நீங்கள் உலக வாழ்க்கைக்கான பொருளை விரும்புகின்றீர்கள் என்றால், அல்லாஹ்விடமோ சிறந்த பொருள்கள் மிகுதியாக உள்ளன. முன்னர் நீங்கள் அவ்வாறே இருந்தீர்கள். பின்னர் அல்லாஹ் உங்கள் மீது அருள் புரிந்தான். எனவே நீங்கள் நன்கு விசாரணை செய்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்து கொண்டிருப்பதை நன்கு அறிபவனாவான்.

அதாவது யாராவது ஸலாம் கூறினால், அவருடன் சண்டையிடக் கூடாது; அவர் மீது கடுமை காட்டக் கூடாது . அவரைக் கொல்லக் கூடாது. அல்லது அவருக்கு தண்டனை வழங்கக் கூடாது என்று தடை செய்யப்பட்டது.

ஏற்கனவே நான் கூறியது போன்று, இந்த படையெடுப்பு ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு நிகழ்ந்தது. ஆனால் சூரா நிஸாவுடைய இந்த வசனத்தைக் குறித்து ஸீரத் இப்னு கஸீருடைய அறிவிப்பில் எழுதப்பட்டுள்ளதாவது, சூரா நிஸாவை குறித்து அதிகமான கருத்து ஒற்றுமை என்னவென்றால், இது ஹிஜ்ரத்துடைய மூன்றாவது மற்றும் ஐந்தாவது வருடங்களுக்கு இடையில் இறங்கியது. இந்த சம்பவத்தை குறித்து தெரிய வந்தபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த வசனத்தை ஓதி விருப்பமின்மையை வெளிப்படுத்தி இருக்கலாம். எவ்வாறு இருப்பினும், இந்த வசனத்தின் மூலமாக அன்னார் (ஸல்) இதை தடை செய்தார்கள். இன்ஷா அல்லாஹ். இதற்குப் பிறகு இனி வரக் கூடிய காலத்தில் மக்கா வெற்றியை பற்றிய குறிப்பு ஆரம்பிக்கும் என்று நம்புகிறேன்.

இப்போது நான் ஜமாஅத்தின் சான்றோர், மாபெரும் அறிஞர், **கிலாஃபத்தின் மீது அர்ப்பணிப்பு கொண்டவர்** மற்றும் ஒப்பிட இயலாத மார்க்கத் தொண்டரைப் பற்றி எடுத்துக் கூறுவேன். அவர்கள் கடந்த நாள்களில் மரணமடைந்து விட்டார்கள். அதேபோன்று, அர்ப்பணிப்புள்ள, தூய அஹ்மதி ஒருவரைக் குறித்தும் எடுத்துக் கூறுவேன். அவர்கள் இந்நாட்களில் சிறைவாசம் அனுபவித்து வந்தார்கள். அங்கேயே மரணமடைந்து இருக்கின்றார்கள். சாட்சியங்களின்

அடிப்படையில் இவர்கள் ஷஹாதத் எனும் அந்தஸ்தையே பெறுகிறார்கள். எவ்வாறு இருப்பினும், முதல் நற்குறிப்பு மதிப்பிற்குரிய ஸய்யிது மீர் மஹ்மூத் நாஸிர் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் ஹஸ்ரத் ஸய்யிது மீர் முஹம்மது இஸ்ஹாக் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகன் ஆவார்கள். இவர்கள் கடந்த நாட்களில் 96 வயதில் மரணமடைந்து இருக்கின்றார்கள்.

اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْن

மர்ஹூம் அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் நுஸ்ரத் பேகம் ஸாஹிபா (ரலி) அவர்களின் சகோதரருடைய மகன் ஆவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மர்யம் ஸித்தீகா ஸாஹிபா ஆகியோரின் மருமகன் ஆவார்கள். ஏற்கனவே கூறப்பட்டது போன்று, ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகன் ஆவார்கள். மர்ஹூமுடைய தாயாருடைய பெயர் ஸாலிஹா பேகம் என்பதாகும். மர்ஹூம் அவர்கள் ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகன் வழிப் பேரனாவார்கள். மர்ஹூமுடைய தாயார் ஸாலிஹா ஸாஹிபா அவர்கள் ஹஸ்ரத் பீர் மன்ஸூர் முஹம்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகள் ஆவார்கள். ஹஸ்ரத் பீர் மன்ஸூர் முஹம்மத் ஸாஹிப் அவர்கள் ஹஸ்ரத் சூஃபி அஹ்மத் ஜான் அவர்களின் மகன் ஆவார்கள். மர்ஹூம் ஸய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் ஸாஹிப் அவர்கள் ஆரம்பக் கல்வியை காதியானில் கற்றார்கள். பிறகு பஞ்சாப் யூனிவர்சிட்டியில் பி.ஏ முடித்தார்கள். மார்ச் 1944 இல் தம் தந்தை ஹஸ்ரத் ஸய்யது மீர் முஹம்மது இஸ்ஹாக் ஸாஹிப் அவர்கள் மரணமடைந்த நாளில் வாழ்வை அர்ப்பணித்தார்கள். மர்ஹூமுடைய மகன் முஹம்மது அஹ்மத் அவர்கள் எனக்கு எழுதியிருப்பது என்னவெனில், மார்ச் 17-ம் நாள் மிக முக்கியத்துவம் வாய்ந்த நாள் என்று மர்ஹூம் கூறிவந்தார்கள். தங்களுக்கு இந்த நாள் முக்கியத்துவம் வாய்ந்த நாளாக ஏன் உள்ளது? என்று கேட்டபோது, அந்நாளில் எனது தந்தை மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அந்த நாள் முழுவதும் எங்கள் வீட்டிலேயே இருந்தார்கள். ஒரு சுருக்கமான சொற்பொழிவையும் நிகழ்த்தினார்கள். அதில் மீர் ஸாஹிபுடைய மார்க்கத் தொண்டுகளை குறித்தும், அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க தொண்டுகளைக் குறித்தும், அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க ஆன்மாவைக் குறித்தும், அறிவு ஞானம் போன்றவற்றைக் குறித்தும் எடுத்துக் கூறினார்கள். மர்ஹூம் கூறுகிறார்கள்:

அதைக் கேட்டு நான் எழுந்து நின்றேன். அங்கேயே ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம், நான் வாழ்வை அர்ப்பணிக்கிறேன் என்று கூறினேன். அதைக் கண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு மிகவும் உணர்ச்சிப்பூர்வமான நிலை ஏற்பட்டது. அன்னார் (ரலி) அதை மிகவும் பாராட்டினார்கள். அப்போது மர்ஹூம் ஸய்யது மஹ்மூத் அஹ்மத் நாஸிர் ஸாஹிப் அவர்களின் வயது 14 ஆக இருந்தது. பிறகு அந்த உறுதிமொழியை எந்த அளவுக்கு நிறைவேற்றினார்கள் என்றால், அதைப் போன்ற உதாரணங்கள் குறைவாகத்தான் காணக் கிடைக்கின்றன.

மர்ஹூமுடைய ஜமாஅத் தொண்டுகள் என்னவென்றால், 1954 முதல் 57 வரை இங்கு இங்கிலாந்தில் முபல்லிஃக் ஆக பணியாற்றினார்கள். அந்த காலகட்டத்தில் SOAS அதாவது school of oreintal and African studies - இல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப கல்வியும் கற்றார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடனே சேர்ந்து கல்வி கற்றுள்ளார்கள். சிறிது காலம் லண்டன் மிஷனுடைய செகரட்டரியாக கடமையாற்றினார்கள். 1957 முதல் 59 வரை வகாலத் திவானில் ரிசர்வ் முபல்லிஃக் ஆக இருந்துள்ளார்கள். 1960 இல் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்கள். 1978 வரை இந்த கடமையை நிறைவேற்றியுள்ளார்கள். 1978 முதல் 82 வரை அமெரிக்காவில் முபல்லிஃக் ஆக இருந்துள்ளார்கள். 1982 முதல் 86 வரை ஸ்பெயினில் தொண்டாற்றக் கூடிய நல்வாய்ப்பை பெற்றுள்ளார்கள். 86 முதல் 89 வரை வகீலுத் தஸ்னீஃப் ஆக பணியாற்றி இருக்கின்றார்கள். 86 முதல் 2010 வரை ரப்வா ஜாமிஆ அஹ்மதிய்யாவின் பிரின்ஸிபலாக தொண்டாற்றியுள்ளார்கள். அந்த காலகட்டத்தில் 1994 முதல் ஜூலை 2001 வரை வகீலுத் தஃலீமாகவும் இருந்துள்ளார்கள். அதே போன்று ரிசர்ச் செல் உடைய இன்சார்ஜ் ஆகவும் இருந்துள்ளார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சிலுவை சம்பவம் குறித்த ஆய்வு குழுவின் இன்சார்ஜ் ஆக இருந்துள்ளார்கள். 2005 இல் நூர் ஃபவுண்டேஷன் ஏற்படுத்தப்பட்டபோது, அதனுடைய சத்ர் ஆக நியமிக்கப்பட்டு இறுதி வரை அதே தொண்டில் பணியாற்றி இருக்கிறார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 3 ஜூன் 1962 இல் மஜ்லிஸே இஃப்தாவுடைய (அதாவது மார்க்கத் தீர்ப்பு கொடுக்கும் சபையின்) உறுப்பினராக இவர்களை நியமித்தார்கள். நவம்பர் 1972 வரை மர்ஹூம் அதனுடைய உறுப்பினராக இருந்துள்ளார்கள். அதற்குப் பிறகு டிசம்பர் 1989 இல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் மீண்டும் இவர்களை உறுப்பினராக நியமித்தார்கள். இறுதி மூச்சு வரை அதில் இருந்தார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யாவிலும் பல்வேறு வகையில் தொண்டாற்றும் நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது. முஹ்தமீம் ஆகவும், நாயிப் சத்ர் ஆகவும் இருந்துள்ளார்கள். கல்வி மைதானத்திலும் பரந்த அளவில் பெரும் தொண்டாற்றி இருக்கிறார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் திருக்குர்ஆன் மொழியாக்க பணியில் மர்ஹூம் அவர்கள் பெரும் ஒத்துழைப்பு வழங்கி இருக்கிறார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள இதை குறிப்பிட்டு எழுதி இருக்கின்றார்கள்:

நன்றியை தெரிவித்துள்ளார்கள். அந்த பணியில் உதவியாளர்களாக இருந்த ரப்வாவைச் சார்ந்த நபர்களைப் பற்றி குறிப்பிடும்போது, அதாவது சூஃபி பஷாரதுர் ரஹ்மான் ஸாஹிப், மவ்லானா அபுல் முனீர் நூருல் ஹக் ஸாஹிப், ஸய்யத் அப்துல் ஹய் ஸாஹிப், மவ்லானா தோஸ்த் முஹம்மது ஜமீலுர் ரஹ்மான் ரஃபீக் ஸாஹிப் ஆகியோருக்கு தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அதில் மீர் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களையும் இணைத்துள்ளார்கள். அல்லாஹ்வின் அருளால் தொடர்ச்சியாக இம்மக்கள் என்னுடன் இணைந்திருந்தார்கள் என்று கூறி இவர்களுக்கு நன்றியை தெரிவித்துள்ளார்கள்.

ஸிஹா ஸித்தா எனும் ஆறு ஹதீஸ் நூல்களை முழுமையாக உருதுவில் மொழியாக்கம் செய்த பிறகு முஸ்னத் அஹ்மத் ஹன்பலுடைய மொழியாக்கம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. அதேபோன்று ஸஹீஹ் முஸ்லிமுடைய விளக்க உரையும் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. ஷமாயிலே திர்மிதியை மொழியாக்கம் செய்துள்ளார்கள். பைபிளை குறித்து நிறைய அறிவுப்பூர்வமான கட்டுரைகளை எழுதி இருக்கின்றார்கள். அவை பல்வேறு பத்திரிகைகளிலும்,. இதழ்களிலும் வெளியாகி இருக்கின்றன. பைபிளில் உபாகமம் மற்றும் இஞ்சீலில் மூன்று அதிகாரங்களுக்கு விளக்கவுரை எழுதி இருக்கின்றார்கள். அதேபோன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய கஃபன் குறித்தும், ஈஸா களிம்பு குறித்தும், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஹிஜ்ரத் குறித்தும் மிக உயர்தரமான ஆய்வுகளையும், மேற்கொண்டுள்ளார்கள். அச்சடிக்கப்பட்டும், அச்சடிக்கப்படாமலும் உள்ள நூல்கள் மற்றும் உள்ளடக்கங்களின் விபரம் என்னவென்றால், ஸீரத்துன் நபி (ஸல்) كَانَ خُلُقُهُ الْقُرْآن என்ற நூலின் மூன்று தொகுதிகள் உள்ளன. நம்முடைய அன்பான தூதரின் அழகிய விஷயங்கள் எனும் நூல், 365 நாள் எனும் ஒரு சிறு நூல், தொழுகைக்குப் பிறகு தினந்தோறும் தர்ஸூக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விஷயங்கள் இதில் உள்ளன. பாலஸ்தீனத்தில் இருந்து காஷ்மீர் வரை என்னும் நூல். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் எழுத்துக்களின் ஒளியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை என்ற நூலை தொகுத்திருக்கின்றார்கள். இது அச்சடிக்கப்படாதது ஆகும்.

ஸஹீஹ் புகாரியில் இருந்து தர்பிய்யத் ரீதியிலான தலைப்புகளை தேர்ந்தெடுத்து எழுதி இருக்கின்றார்கள். அதேபோன்று முந்தைய போப் ஒருமுறை ஒரு கேள்வியை எழுப்பிய போது, அதற்கும் மறுப்பு தெரிவித்து இவர்கள் பதில் எழுதி இருக்கின்றார்கள். அதேபோன்று ஸ்பெயினில் பஷாரத் பள்ளிவாசல் உடைய அடிக்கல் விழாவின்போது, மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் எந்த அடிக்கல்லை வைத்து துஆ செய்தார்களோ அந்தக் கல்லையும் மர்ஹூம் அவர்கள் பிடித்திருந்தார்கள். அதேபோன்று அந்த பள்ளிவாசல் திறக்கப்படும் சந்தர்ப்பத்திலும் இவர்களுக்கும் இவர்களது மனைவிக்கும் தொண்டாற்றக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. அதை குறித்து நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களும் எடுத்துரைத்திருக்கின்றார்கள்.

1955 இல் ஆண்டு மாநாட்டின் துவக்கத்தின் போது, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எட்டு நிக்காஹ்வை நடத்தி வைத்தார்கள். அதில் மீர் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் நிக்காஹ்வும் ஒன்று. ஹஸ்ரத் இரண்டாவது

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தமது மகள் அமத்துல் மதீன் ஸாஹிபாவுடன் இவர்களின் நிக்காஹ்வை நடத்தினார்கள். அதில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறும்போது, பொதுவாக டிசம்பர் 29 அன்றுதான் நிக்காஹ் நடத்தப்படுகின்றன. ஆனால், இன்று நடத்தப்படுகின்ற இந்த நிக்காஹ்களில் சில விதிவிலக்கானவையாக இருக்கின்றன. ஒன்று, எனது மகள் அமத்துல் மதீனுடைய நிக்காஹ் ஆகும். மீர் முஹம்மது இஸ்ஹாக் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகனாகிய ஸய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடன் பேசி முடிக்கப்பட்டுள்ளது என்றார்கள். பிறகு, அதன் விபரங்களை எடுத்துரைக்கும்போது, மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் தற்போது லண்டனில் பி.ஏ படித்துக் கொண்டிருக்கிறார். அல்லாஹ் நலமுடன் வைத்திருப்பான் என்றால், அடுத்த வருடம் மே மாதத்தில் அவர் திரும்பி வந்து விடுவார் என்று நம்புகிறேன். நான் என்னுடைய மூன்று பிள்ளைகளுக்கும் - அதாவது, அன்னார் 3 பிள்ளைகள் என்று கூறியது, ஒன்று மீர் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் ஆவார்கள். இவர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மருமகனாவார்கள். அவர்களின் பெயரை எடுத்துக் கூறினார்கள். பிறகு, மீர் தாவூத் அஹ்மத் எனும் மருமகனுடைய பெயரை எடுத்துக் கூறினார்கள். பிறகு, ஹஸ்ரத் உம்மே தாஹிர் ஸாஹிபா அவர்களின் மகனாகிய நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் தாஹிர் அஹ்மத் (ரஹி) அவர்களைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். இந்த மூன்று பிள்ளைகளையும் நான் அங்கு விட்டு வந்துள்ளேன். அவர்கள் கல்வி கற்க வேண்டும்; வருங்காலத்தில் ஜமாஅத்துக்கு தொண்டு செய்ய வேண்டும் என்பதற்காக ; ஆங்கிலத்தில் புலமை பெற வேண்டும் என்று அவர்களுக்கு வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மேற்கொண்டு கூறும்போது, இம்மூவரும் மௌலவி ஃபாஸிலாக உள்ளார்கள். இவர்களின் அரபி படிப்பும் மிக உயர்ந்ததாக உள்ளது. இவர்கள் ஆங்கில கல்வியும் மேலானதாக ஆகிவிடும். திருக்குர்ஆனுடைய மொழியாக்கம் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூல்களின் ஆங்கில மொழியாக்க பணி ஆகியவற்றில் இவர்கள் ஜமாஅத்துக்கு உதவியாளர்களாக ஆக முடியும். அதே போன்று ரிவ்யூ ஆஃப் ரிலிஜன்ஸூம் தேவை உடையதாக இருக்கின்றது. அதற்கு நல்ல தகுதி வாய்ந்த எடிட்டர் தேவைப்படுகிறார். இந்த நோக்கத்திற்காக நான் என் பிள்ளைகளை அங்கு விட்டு வந்துள்ளேன். நோய்வாய்ப்பட்டுள்ள இந்த காலகட்டத்தில், பலவீனமான நிலையில் 3 பிள்ளைகள் படிக்கின்ற செலவுகளை பொறுத்துக் கொள்வது - அதாவது இரண்டு மருமகன்கள் மற்றும் ஒரு மகன் ஆகியோருடைய கல்விச் செலவை பொறுத்துக் கொள்வது - கடினமானதாக உள்ளது. ஆனால், ஜமாஅத்தின் கஷ்டம் எனது கஷ்டத்தை விட பெரியதாகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஜமாஅத்திற்காக எல்லா வித தியாகமும் செய்ய வேண்டும் என்பதையும், அதற்காக தமது செல்வம், நேரம், தமது பிள்ளைகளை தியாகம் செய்ய வேண்டும் என்பதையும் எப்பொழுதும் கருத்தில் கொண்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் 1982-ல் மர்ஹூமுடைய மூத்த மகனுடைய நிக்காஹ்வை நடத்தி வைக்கும்போது அதில் ஹஸ்ரத் மீர் முஹம்மத் இஸ்ஹாக் ஸாஹிபின் சந்ததி என்ற வகையில் மர்ஹூம் ஸய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஹஸ்ரத் மீர் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள்:

அல்லாஹ் அவர்களின் துஆவை செவியேற்றான். அதாவது ஹஸ்ரத் மீர் முஹம்மத் இஸ்ஹாக் ஸாஹிப் அர்களின் துஆவை செவியேற்றான். தன்னுடன் அவர்கள் கொண்டுள்ள நேசத்தை கண்டு அல்லாஹ் அவர்களின் மூன்று பிள்ளைகளுக்கு வக்ஃப் செய்யக் கூடிய நற்பேறை வழங்கியுள்ளான். மூன்று பேருடைய இயல்பும் ஒருவர் மற்றவரை விட வேறுபட்டதாக இருந்தாலும் - ஒரு மனிதன் மற்றொரு மனிதனை விட்டு வேறுபட்டவனாக இருப்பதைப் போன்று இருந்தாலும் - நான் சிந்தித்து பார்த்த வரை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் சிந்தித்து பார்த்த வரை இந்த மூன்று பேரிடத்திலும் ஒரு விஷயம் பொதுவானதாக காணப்படுகிறது: அது என்னவென்னறால், இறைவன் எதையெல்லாம் வழங்கினானோ, எந்த அளவு வழங்கினானோ அதில் மனிதன் திருப்தி கொள்வது மட்டுமின்றி மகிழ்ச்சியுடன் திருப்தி கொள்வதுமாகும். ஸய்யது மீர் தாவூத் அஹ்மத் அவர்களின் இயல்பு வேறொன்றாக இருந்தாலும் அவர்களிடத்திலும் இந்த விஷயம் காணப்படுகின்றது. மீர் மஸூத் அஹ்மத் ஸாஹிப் தற்போது நீண்ட காலமாக டென்மார்க்கில் தப்லீஃக் பணியை மேற்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய இயல்பு வேறுபட்டதாக இருந்தாலும் அவரிடத்திலும் இந்த விஷயங்கள் காணப்படுகின்றன. அவருடைய தம்பி மீர் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் பிள்ளையுடைய நிக்காஹ்வை நான் அறிவிக்க இருக்கின்றேன். அவர்களின் இயல்பு வேறுட்டதாக இருந்தாலும், அவர்கள் வாழ்வை அர்ப்பணித்த நபராக இருக்கின்றார்கள். ஆனால், இந்த விஷயங்கள் அவர்கள் அனைவரிடத்திலும் பொதுவானதாக காணப்படுகிறது. அதாவது, மகிழ்ச்சியுடன் இருப்பது; ஜமாஅத் எதை வழங்கியதோ அதை ஏற்றுக் கொள்வது; எந்த ஒரு கோரிக்கையும் வைக்காமல் இருப்பது போன்றவை. இது இவர்களுடைய தந்தையிடமிருந்து முழு சந்ததிகளிடத்திலும் வம்சாவளியாக வந்துள்ளது. இறைவன் ஹஸ்ரத் மாமு ஜான் (ரலி) அவர்களின் சந்ததிகள் மீது பெரும் அருள் புரிந்துள்ளான். ஜமாஅத்துக்கு முன்னால் இவ்வாறான முன்மாதிரிகளும் இருக்கின்றன. எந்நிலையிலும் சிரித்தவாறு இருக்கும் மலர்ந்த முகங்களும் இருக்கின்றன. எல்லா நேரமும் இறைவனுக்கு நன்றி செலுத்தக் கூடிய அடியார்களாக ஆகியவாறு, இறைவனை புகழ்ந்து துதி பாடியவாறு, தம் வாழ்வின் நாட்களை கழிக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

பிறகு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள், இவர்களின் அடுத்த தலைமுறையும் இவ்விஷயங்களை பெறக் கூடியவர்களாக இருப்பதற்காக துஆ செய்யுங்கள் என்று அவர்களுக்காக துஆ செய்தவாறு கூறினார்கள்.

கவிதையின் மீதும் மர்ஹூம் அவர்களுக்கு ஆர்வம் இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கவிதைகள் மற்றும் கலாமே மஹ்மூத் உடைய கவிதைகளை மனனமாக அறிவார்கள். அது மட்டும் இன்றி, மர்ஹூம் அவர்களும் சில கவிதைகளை எழுதி இருக்கின்றார்கள். பிறகு, ஒருமுறை மர்ஹூம் அவர்கள் ஜாமிஆவுக்கு வர விரும்புகின்றவர்களுக்கு அதாவது, இது வரை ஜாமிஆவில் சேராத, முரப்பியாக ஆக விருப்பம் கொண்டவர்களுக்கு ஓர் அறிவுரையை வழங்கினார்கள்:

ஒரு செயல் திட்டத்தை அவர்களிடம் எடுத்து வைத்தார்கள். அது மிகவும் நல்ல செயல் திட்டமாக உள்ளது. முரப்பிமார்கள் அதை கருத்தில் கொள்ள வேண்டும். எந்த அளவுக்கு என்றால், ஜாமிஆவுக்கு வர விரும்புகின்ற அல்லது வந்துவிட்ட ஒவ்வொருவரும் அதை தமது கருத்தில் கொள்ள வேண்டும்.

முதல் விஷயமாக அன்னார் எழுதியுள்ளது என்னவென்றால், தினந்தோறும் காலை 3 மணிக்கு எழுந்து உளூ செய்து - பாகிஸ்தான் நேரப்படி இந்த நேரம் தான் தஹஜ்ஜத்துடைய நேரமாக இருக்கிறது- தஹஜ்ஜுத் தொழ வேண்டும். தினந்தோறும் ஐவேளை தொழுகையை பள்ளிவாசலுக்கு சென்று ஜமாஅத்தாக தொழ வேண்டும். அங்கு ரப்வாவில் வசிப்பவர்களுக்கு அறிவுரை வழங்கும்போது, மஸ்ஜித் முபாரக்கில் குறைந்தது ஒரு தொழுகையாவது தொழ வேண்டும் என்றார்கள். பிறகு, தினமும் இறை விருப்பத்திற்காகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நேசத்திற்காகவும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நேசத்திற்காகவும், கிலாஃபத்துடைய நேசத்திற்காகவும் துஆ கேட்க வேண்டும்.

ஐந்தாவது விஷயம் என்னவென்றால், இறைவனை புகழ்வது, தரூத் ஷரீஃப் மற்றும் இஸ்திஃக்ஃபார் செய்வது ஆகியவற்றை தம் வழக்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஆறாவது விஷயம், ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சமூகத்தில் நேசம் மற்றும் கொள்கை பிடிப்பின் உணர்வுடன் துஆவுக்கு விண்ணப்பித்தவாறு கடிதம் எழுதி வர வேண்டும். ஏழாவது விஷயம், தம்முடைய தற்போதைய கடமைகள் மற்றும் பொறுப்புகளை அழகிய முறையில் நிறைவேற்ற வேண்டும். எட்டாவது விஷயம், தம்முடைய பெற்றோர்களுக்கு தொண்டாற்ற வேண்டும். அவர்கள் தொலைவில் வசிக்கிறார்கள் என்றால் துஆக்களில் அவர்களை நினைவு கூர வேண்டும். ஒன்பதாவது விஷயம், திருக்குர்ஆனுடைய சொல்லுக்கு சொல் மொழியாக்கத்தையும், வாக்கிய முறையிலான மொழியாக்கத்தையும் கற்றுக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். பத்தாவது விஷயம், ரூஹானீ கஸாயினை குறைந்தது மூன்று தடவை படித்திருக்க வேண்டும். 11-வது விஷயம், தினமும் அல்ஃபஸ்ல் பத்திரிகை மற்றும் ஒரு பொதுவான பத்திரிகையை வாசிக்க வேண்டும். தினமும் குறைந்தபட்சம் படைப்பினங்களுக்கு தொண்டு செய்யக் கூடிய ஒரு வேலையாவது செய்திருக்க வேண்டும்.

மர்ஹூமுடைய மகன் ஸய்யது குலாம் அஹ்மத் ஃபரக் தம் தந்தையை பற்றி எழுதுகிறார்: தந்தைக்கு அல்லாஹ்வுடன்

இருந்த நேசம் எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், அதன் வெளிப்பாடு தொழுகைகள் மற்றும் திக்ரே இலாஹியில் தென்படும்.

அவர்களின் தொழுகைகளை நான் பள்ளிவாசலில் கண்டுள்ளேன். ஓரமாக உருக்கத்துடன் பணிவுடன் தொழுவார்கள். வீட்டில் தொழக் கூடிய தொழுகைகளும் இவ்வாறானதாக இருந்திருக்கும். அதை நாம் அறியோம். ஆனால், வெளியில் தொழுகை நேரத்தில் தொழக் கூடிய தொழுகை ஒரு வினோதமான நிலையைக் கொண்டதாக இருந்தது. ஓர் இயல்பான, பகட்டு இல்லாத தொடர்பு இருந்தது. மக்களுக்கு முன்னால் அதை வெளிப்படுத்தக் கூடாது என்று நினைப்பார்கள். ஆனாலும், சில சமயங்களில் வெளிப்பட்டு விடும். மக்கள் அதை குறிப்பெடுத்துக் கொள்வார்கள். உதாரணமாக மகன் கூறுகிறார்: தந்தையுடைய நோட்புக்கை கண்டுள்ளேன். அதில் ஒவ்வொரு நாளும் “அல்லாஹ்” என்று எழுதப்பட்டுள்ளதை காண முடிந்தது. அதைப் பற்றி ஆராய்ந்தபோது, தமது பேனாவில் மை நிரப்பும்போதெல்லாம் முதல் சொல்லாக அல்லாஹ் என்று எழுதக் கூடிய வழக்கத்தை கொண்டிருந்தார்கள். இவ்வாறு சில பக்கங்களில் அல்லது டைரிகளில் பல வரிகளில் “அல்லாஹ்” என்று மட்டுமே எழுதப்பட்டுள்ளது. தமது கடைசி காலத்தில் தமது அறையில் ஒரு வாக்கியத்தை எழுதியிருந்தார்கள். என் அல்லாஹ்வே! தி ஆமு என்று எழுதப்பட்டிருந்தது. இதன் பொருள் என்ன? என்று நான் கேட்டபோது, I LOVE YOU என்று இது இத்தாலி மொழியில் எழுதப்பட்டுள்ளது. ‘‘அல்லாஹ்வே! நான் உன்னை நேசிக்கின்றேன்’’ என்பது இதன் பொருளாகும் என்றார்கள்.

இறைவனை புகழ்ந்து அவர்கள் ஒரு கவிதை எழுதி இருக்கின்றார்கள். அதில் உள்ள கவிதை வரியில்,

இறைவா! உனது தரிசனமும், உனது உரையாடலும் எனக்கு எப்பொழுதும் கிடைத்து வர வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது.

நோய்வாய்ப்பட்ட நாட்களில் ஒரு முறை மர்ஹூமிற்கு appendix operation நடந்தது. அப்போது அஸ்ஸலாமு அலைக்கும் என்ற குரல் கேட்டது; அவர்கள் உடல் நலம் பெற்றார்கள்.

மர்ஹூமுடைய இறை வணக்கங்கள் தொழுகைகள் ஆகியவற்றின் தத்துவமும் இறை தொடர்புடன் சம்பந்தப்பட்டவையாக இருந்தன. அந்த இரண்டையும் தனித்தனியாக பிரிக்க இயலாது. தஹஜ்ஜுத் தொழுகையில் தாம் செய்யும் துஆவுக்கான வழிமுறையை பற்றி பலமுறை எடுத்துரைத்துள்ளார்கள். முதலில், இறைவனை புகழ்வதற்காகவும், இறைவனுடனான தொடர்பிற்காகவும் துஆ கேட்பேன் என்று கூறியுள்ளார்கள். ஒருமுறை என்னிடம், நான் தினமும் தஹஜ்ஜுத் தொழுகையில் எனது தந்தையின் சகோதரராகிய ஹஸ்ரத் டாக்டர் ஸய்யது மீர் முஹம்மத் இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய கவிதைகளை வாசிப்பேன் என்று கூறினார்கள். அந்த கவிதைகள் “தும்” அதாவது “நீ” என்ற தலைப்பில் எழுதப்பட்டிருந்தது. அதனுடைய முதல் கவிதை வரி.

வேதனையுடைய உள்ளத்திற்கு சிகிச்சை நீ ஆவாய்; எமது உள்ளம் விரும்புவதும் நீ ஆவாய்!

உனது விருப்பமாக நான் உள்ளேன்; எனது நோக்கம் நீ ஆவாய்! என்று ஆரம்பிக்கின்றது.

தஹஜ்ஜுத் தொழுகையில் துஆவிற்கான வழிமுறையை கூறியுள்ளார்கள். அதை சுருக்கமாக எடுத்துக் கூறுகிறேன். மர்ஹூமுடைய மகன் கூறுகிறார்: இறைவனை புகழ்தல், துரூது ஷரீஃப் ஓதுதல் ஆகியவற்றிற்கு பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) மற்றும் அன்னாருடைய குடும்பத்திற்காகவும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய கலீஃபாக்கள் மற்றும் அவர்களின் குடும்பத்திற்காகவும், பிறகு தனியாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்காகவும், அவர்களின் குடும்பத்திற்காகவும் பிறகு தம்முடைய தந்தை வழிப்பாட்டனார் ஹஸ்ரத் மீர் நவாப் நாஸிர் ஸாஹிப் அவர்களிடமிருந்து ஆரம்பித்து படிப்படியாக கீழே வருவார்கள். பிறகு, தம் சந்ததிகளுள் முதலாவதாக தம்முடைய மகளுக்காக துஆ செய்வார்கள். பிறகு மகன்களுக்காக துஆ செய்தார்கள்.

அடியார்களுக்கான உரிமையை செலுத்துவதற்கான உண்மையான வழிமுறையாக துஆவைத்தான் கருதி வந்தார்கள். கிலாஃபத்துடனான நேசம் நிரம்பி வழிந்தது. ஆனால், அனைவரையும் விட அதிகமாக அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நேசித்து வந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் வழிமுறையை பின்பற்ற முயற்சி செய்து வந்தார்கள். சின்ன சின்ன விஷயங்களிலும் அது வெளிப்பட்டது. மர்ஹூமுடைய மகன் கூறுகிறார்:

ஓரிரு முறை நிகழ்ந்த சம்பவம் என்னவென்றால், அன்னார் வசதியற்ற நாற்காலியில் அமர்ந்திருப்பார்கள். நான் இன்னொரு நாற்காலியில் வசதியாக அமர்ந்திருப்பேன். மர்ஹூமிற்காக நாற்காலியை காலி செய்து எழும்போது, அவர்கள் அதில் அமரமாட்டார்கள். ஒருவரை அவரது இடத்தை விட்டு எழச் செய்து அதில் தாம் அமர்வதை பெருமானார் (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள் என்று கூறினார்கள்.

நீங்கள் எனது மகனாக இருக்கலாம்; ஆனால், பிறருடைய நாற்காலியை அமரக் கூடிய இடத்தை அபகரித்து அதில் அமர்வது பெருமானார் (ஸல்) அவர்களின் வழக்கத்திற்கு எதிரானதாகும்; நான் அதில் அமர மாட்டேன் என்று கூறினார்கள். அதேபோன்று வழியில் செல்லும்போதும், வரும்போதும் ஸலாம் கூறுவதில் முந்திக் கொள்ள முயற்சி செய்வார்கள். ஜுமுஆ நாளில் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகும், அஸ்ர் தொழுகைக்குப் பிறகும் துஆவில் மூழ்கி இருப்பார்கள். அந்நேரத்தில் யாராவது சந்திக்க வருவதையும் விரும்ப மாட்டார்கள். ஏனெனில், இது துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நேரமாகும் என்று பெருமனார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் என்று கூறுவார்கள். மர்ஹூமுடைய மகன் கூறுகிறார்:

அந்த நேரங்களில் பிள்ளைகளாகிய நாங்களும் அவர்களிடம் செல்வதை விட்டு தவிர்ந்திருப்போம்.

பெருமானார் (ஸல்) அவர்களின் பிறந்த நாள், இறந்தநாள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பிறந்த நாள், இறந்த நாள் ஆகியவற்றில் மிகவும் கண்டிப்புடன் துரூது ஷரீஃப் அதிகமாக ஓத வேண்டும் என்று அறிவுரை செய்து வந்தார்கள். மர்ஹூம் அவர்களும்

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ

என்று அதிகமாக ஓதி வந்தார்கள்.

மகன் கூறுகிறார்:

ஒருமுறை நான் காதியான் சென்ற போது, என்னிடம் ஒரு துஆவை எழுதி கொடுத்து தாருல் மஸீஹுடைய ஒவ்வொரு அறைக்குள்ளும் சென்று முதலில் என் சார்பாக இந்த துஆவை ஓதுங்கள். அதேபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அருளுக்குரிய கபரிலும் சென்று துஆ செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். 1990-இல் மர்ஹூம் மீது ஒரு வழக்கு போடப்பட்டது. அது மஜ்லிஸே ஷூராவில் அன்னார் வெளிப்படுத்திய கருத்தின் அடிப்படையில் 298 C என்ற பிரிவில் வழக்கு பதியப்பட்டு இருந்தது. நீதிபதி மர்ஹூமிடம், நீங்கள் சொற்பொழிவில் பெருமானார் (ஸல்) அவர்கள் மற்றும் ஸஹாபிகளை அவமதித்துள்ளீர்கள் என்று கூறியபோது, அன்னார் மிக கடுமையாக அதை மறுத்தார்கள். நீங்கள் கூறுவது எனக்கு மிகுந்த துன்பத்தை கொடுக்கின்றது என்று நீதிபதிக்கு முன்னால் கூறினார்கள். மீர் மஹ்மூத் அஹ்மத் ஆகிய நீங்கள் விவாதத்தின்போது, பெருமானார் (ஸல்) மற்றும் ஸஹாபிகளை குறித்து அவமதிக்கும் சொற்களை பயன்படுத்தி உள்ளீர்கள் என்று நீதிபதி கூறியபோது, மர்ஹூம் அவர்கள் இது என் மீது சுமத்தப்பட்ட அவதூறு ஆகும். முழுக்க முழுக்க பொய்யாகும்; பொய்யாகும்; பொய்யாகும் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) மற்றும் ஸஹாபிகளை நான் உள்ளத்தால் மதிக்கின்றேன். அன்னாருடைய தூதுத்துவத்தின் மீது உறுதியான நம்பிக்கை வைத்திருக்கின்றேன் என்று கூறினார்கள். நான் ஸய்யது ஆவேன். பெருமானார் (ஸல்) அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவன் ஆவேன். பொய் கூறியவர் மீது சாபம் உண்டாகட்டும் என்று கூறினார்கள். நீதிபதிக்கு முன்னால் மிகத் துணிவுடன் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். இறுதி நோயின் நாட்களில் குறிப்பாக துஆக்களில் துரூது ஷரீஃபை மிக அதிகமாக ஓதி வந்தார்கள். நான் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அடிமை ஆவேன் என்ற சொற்களை மிக அதிகமாக கூறிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடனும், நேசத்தின் வெளிப்பாடு இருந்தது. அதுவும் தமதளவில் நிகரற்றதாக இருந்தது. மர்ஹூமுடைய மகன் கூறுகிறார்:

எனக்கு ஒரு விஷயம் நினைவில் இருக்கின்றது. அது என்னவென்றால், 1989-இல் ரப்வா அல்ஃபஸ்ல் தினசரி பத்திரிகையில் ஜமாஅத்துடைய நூற்றாண்டு நிகழ்ச்சிகளின் சந்தர்ப்பத்தின் போது, ஜமாஅத்தின் சான்றோர்களிடம் ஓர் இன்டர்வியூ எடுக்கப்பட்டது. அதில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மிகப் பெரும் அற்புதம் உயிருள்ள இறைவனிடம் மனிதனுக்கு மீண்டும் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தது என்று மட்டுமே மர்ஹூம்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

கூறினார்கள். அவர்கள் கூறியது இவ்வாறான சொற்கள்தான்;

நோய்வாய்ப்பட்டிருந்த நாட்களில் சில சமயம் காதியானுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டு விடும். ஆயத்தங்கள் இருக்கும்; நிகழ்ச்சி ரத்து ஆகிவிடும். ஆனால், காதியானுடன் ஒரு நேசம் இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மண்ணறையில் ஆஜராகக் கூடிய ஓர் ஆர்வம் இருந்தது. ஆகவே சிரமம் மேற்கொண்டு அவர்கள் பயணத்திற்காக புறப்பட்டு விடுவார்கள்.

மகன் கூறுகிறார்: நூல்கள் வாசிக்கும் பழக்கத்தை குறித்து எழுதப்பட்டுள்ளதென்னவென்றால், திருக்குர்ஆன், புஹாரீ, ரூஹானீ கஸாயின் ஆகியவற்றை படிப்பதை தம் வாழ்வின் அன்றாட வழக்கமாக வைத்திருந்தார்கள். எங்களுக்கும் அதை வலியுறுத்தி வந்தார்கள். சந்திக்க வரக்கூடியவர்களிடமும் நூல்கள் வாசிப்பதை குறித்து வலியுறுத்துவார்கள். 1990-ல் அவர்கள் மீது வழக்கு பதியப்பட்ட போது, ஓர் இரவை சென்யூட் எனும் ஊரின் சிறையில் கழித்துள்ளார்கள். அவர்களை சந்திக்க சென்றபோது எனக்கு வாளி, குவளை மற்றும் பராஹீனே அஹ்மதிய்யா ஆகியவற்றை கொண்டு வா! என்று கூறினார்கள். அப்போது, மியா(ன்) குர்ஷீத் அஹ்மத் ஸாஹிப் அவர்களும் உடன் இருந்தார்கள். இவ்வளவு நெருக்கடியான சிறையில் இந்த வெப்பத்தில் இந்த அளவு கஷ்டமான நூலை நீங்கள் எப்படி படிப்பீர்கள்? என்று அவர்கள் கேட்டபோது, எனக்கு அது ஒன்றும் கஷ்டம் கிடையாது; நான் அந்த நூலை முன்பும் ஐந்து முறை படித்துள்ளேன் என்று கூறினார்கள். எவ்வாறு இருப்பினும், அங்கு சிறிய இடமாக இருந்தது; கோடை காலமாக இருந்ததால் அந்த ஒரு நாளையும் கூட அவர்கள் மிக துன்பத்தில் கழித்தார்கள். ஏனெனில், தூய இயல்பை கொண்டவராக இருந்தார்கள். இயல்பில் தூய்மை இருந்தது. ஆனால், அந்த சந்தர்ப்பத்திலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூலை வாசிக்க வேண்டும் என்ற கவலை இருந்தது. மார்க்க அறிவைப் பொறுத்த வரை, இஸ்லாம் மட்டுமின்றி யூத மார்க்கம், கிறிஸ்தவ மார்க்கம் போன்றவற்றையும் ஆராய்ந்து வந்தார்கள். அதில் புலமை பெற்று இருந்தார்கள். மார்க்கங்களுக்கு இடையிலான ஒப்பீட்டில் அவர்களுக்கு குறிப்பான திறமை இருந்தது. சடங்கு ரீதியிலான ஃபிக்காஹ்-வைக் கண்டு விரக்தி அடைந்திருந்தார்கள். திருக்குர்ஆன், பெருமானார் (ஸல்) அவர்களின் சுன்னத், ஸஹீஹான ஹதீஸ்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) மற்றும் அன்னாருடைய கலீஃபாக்களின் நூல்களில் இருந்து வழிகாட்டல் பெற வேண்டும் என்று எப்போதும் அறிவுறுத்தி வந்தார்கள்.

உலக அறிவை பொருத்த வரை குறிப்பாக விஞ்ஞானம் தொடர்பான விஷயங்களை படித்து வந்தார்கள்; வரலாற்றை ஆராய்ந்து வந்தார்கள். அதே போன்று பொழுதுப் போக்கிற்காக ஹைக்கிங் பற்றியும் அதிகமான நூல்களை வாசித்து வந்தார்கள். ஆங்கில கவிஞர்களின் நூல்களையும், அதே போன்று உருது கவிஞர்களின் நூல்களையும் வாசித்து வந்தார்கள். பல கவிஞர்களின் கவிதைகள் மனனமாக அவர்களுக்கு தெரியும். தமது ஐபேடில் கவிஞர்களின் கவிதைகளை கேட்டு வந்தார்கள். மொழியை கற்றுக் கொள்ளக் கூடிய திறமையும் இருந்தது. உருது, அரபி, ஆங்கிலம் மட்டுமின்றி ஸ்பானிஷ், இத்தாலியன், இப்ரானீ ஆகிய மொழிகளிலும் குறிப்பான புலமை ஏற்பட்டிருந்தது. இத்தாலி நிகழ்ச்சியை டிவி மற்றும் ஐபேடில் தொடர்ச்சியாக கண்டு வந்தார்கள். அதற்கான காரணம், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஒரு காலத்தில் இத்தாலி மொழியை கற்றுக் கொள்ளுமாறு கூறியிருந்தார்கள். ஹுஸுர் (ரலி) அவர்கள் மர்ஹூம் அவர்களை இத்தாலிக்கு அனுப்புவார்கள் என்ற விஷயத்தையும் வெளிப்படுத்தி இருந்தார்கள். மொழியை கற்றுக் கொள்ளுங்கள் என்று அன்னார் (ரலி) கூறியிருந்தார்கள். ஆகவே நான் கற்றுக் கொண்டு வருகிறேன். அந்த கட்டளை ரத்து செய்யப்படவில்லை. என்னை பொருத்த வரை இந்த கட்டளை இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஆகவே நான் கற்றுக் கொண்டிருப்பேன் என்று கூறினார்கள். குறிப்பான ஆர்வத்துடன் பொருள் தியாகம் செய்து வந்தார்கள். அதே போன்று அவர்களுக்கு கிடைத்த சொத்துகளில் இருந்து உடனடியாக அதற்கான ஹிஸ்ஸா ஜாயிதாதை அதாவது சொத்துக்கான வஸிய்யத் சந்தா பங்கை செலுத்தி விட்டார்கள்.

தற்போது பிரின்ஸிபலாக இருக்கும் முபஷ்ஷீர் அயாஸ் ஸாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்:

மீர் ஸாஹிப் அவர்கள் மிகவும் அப்பழுக்கற்ற தூய வாழ்வை வாழ்ந்துள்ளார்கள். மிகவும் சிறந்த, அதே நேரம் தன்னடக்கம் கொண்டவராகவும் பணிவான இயல்பை கொண்டவராகவும், போதுமென்ற மனமுடையவராகவும், இறை நம்பிக்கையின் ஓர் உயரிய முன்மாதிரியாகவும் இருந்தார்கள். அறிவு ஞானத்தின் ஒரு கடலாக இருந்தார்கள். மிகப் பெரும் அறிஞராக இருந்தார்கள்.

இந்த விஷயங்கள் அனைத்தும் சரியானது ஆகும்.

திருக்குர்ஆன் விளக்கவுரையாளராகவும் இருந்தார்கள்; ஹதீஸ் வல்லுனராகவும் இருந்தார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் திருக்குர்ஆனுடைய மொழியாக்கத்துடன் முழுமையாக ஸிஹாஹ் ஸித்தா உடைய உருது மொழியாக்கத்தையும் செய்யக் கூடிய நல்வாய்ப்பை பெற்ற முதல் நற்பேறு பெற்ற ஆலிமாக இருந்தார்கள். மீர் ஸாஹிபுடைய வாழ்வு இறை வணக்கமாக இருந்தது. வேலை மற்றும் வேலை மட்டுமே செய்தார்கள். விடுமுறை என்ற சொல் மர்ஹூமுடைய அகராதியிலேயே இருக்கவில்லை. மர்ஹூம் அவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி கிலாஃபத்தை வெளிப்படுத்தும் தோற்றமாக திகழ்ந்தார்கள்.

கிலாஃபத்துக்கு கட்டுப்பட்டு, கிலாஃபத்தை நேசித்து நமக்கு அதை காட்டியுள்ளார்கள். புரிய வைத்துள்ளார்கள். கிலாஃபத்துக்கு மதிப்பளித்தல் என்றால் என்ன? என்பதை தம் செயல் மூலமாக சுட்டி காட்டி இருக்கின்றார்கள். ஒருமுறை நோய்வாய்ப்பட்டு இருந்தார்கள். சைக்கிளில் குறித்த நேரத்திற்கு 7:20 -க்கு ஜாமிஆ ஆரம்பித்து விடும். 7:20 -க்கு சென்றடைந்து விடுவார்கள். இரண்டு, மூன்று முறை சைக்கிளில் இருந்து விழுந்து விட்டார்கள். உடல்நிலை சரியில்லாமல் இருந்தது.

தாங்கள் 10 மணி வரை காத்திருந்து பிறகு ஜாமிஆவுக்கு செல்லுங்கள். பத்து மணிக்கு சென்றால் போதும் என்று நான் கூறியிருந்தேன். அதையும் அவர்கள் கட்டளையாக கருதிக் கொண்டார்கள். பிறகு பத்து மணிக்கு தான் அலுவலகத்திற்கு செல்வார்கள். எந்த அளவுக்கு என்றால், முபஷ்ஷிர் அயாஸ் ஸாஹிப் அவர்கள் இதை எழுதியுள்ளார்கள்:

ஒருநாள் 10 மணிக்கு முன்பு வராந்தாவில் அவர்கள் உலாவிக் கொண்டிருந்தார்கள். நான் கொஞ்ச நேரம் வரை அவர்களுக்காக காத்திருந்து பிறகு அவர்களிடம் சென்று நீங்கள் வெளியே நடந்து கொண்டிருக்கின்றீர்களே, உள்ளே வரலாமே என்று கேட்டபோது, இப்பொழுது 10 மணி ஆகவில்லை. கலீஃபத்துல் மஸீஹுடைய கட்டளை 10 மணிக்கு அலுவலகம் செல்ல வேண்டும் என்று எனக்கு இருக்கின்றது. ஆகவே 10 மணிக்குதான் நான் அலுவலகத்திற்குள் செல்வேன் என்று கூறினார்கள். அவர்களுடைய கட்டுப்படுதல் ஒரு முன்னுதாரணமான கட்டுப்படுதலாக இருந்தது. மக்களுககு அவர்கள் ஒரு முன்மாதிரியாக இருந்தார்கள். அதிகாரிகளுக்கும் கீழே வேலை செய்யக் கூடியவர்களுக்கும் (முன்மாதிரியாக இருந்தார்கள்).

தன்வீர் நாஸிர் ஸாஹிப் முரப்பி காதியான் கூறுகிறார்: மர்ஹூமுடைய ஒரு நினைவு எப்போதும் எனது உள்ளத்தில் இருக்கிறது. அது என்னவென்றால், ஒருநாள் காதியானில் மஸ்ஜிது முபாரக்கில் நான் அமர்ந்து இருந்தபோது மீர் ஸாஹிப் அவர்கள் பள்ளிவாசலுடைய முதல் ஸஃப்பில் உலாவிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இவ்வாறு இங்குமங்கும் நடந்தவாறு துஆக்களை ஓதிக் கொண்டிருப்பதை கண்டபோது அது மிகவும் நன்றாக இருந்தது. நான் அதைக் கண்டு இன்புற்றுக் கொண்டிருந்தேன். கொஞ்ச நேரத்திற்கு பிறகு எனக்கு தைரியம் வந்த பிறகு நான் முன்னால் சென்று மர்ஹூமிடம், தாங்கள் பள்ளிவாசலுடைய முதல் ஸஃப்பில் நடந்து கொண்டிருக்கின்றீர்களே? அதற்கான காரணம் என்ன? என்று கேட்டேன். அதற்கு மர்ஹூம் அவர்கள், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த இடத்தில் இங்குமங்கும் நடந்ததை நான் கண்டுள்ளேன்; நானும் அவர்களின் அடிச்சுவட்டை பின்பற்றியவாறு உலாவிக் கொண்டிருக்கின்றேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மீது அன்னாருக்கு வினோதமான நேசம் இருந்தது.

ஃபிரோஸ் ஆலம் ஸாஹிப் எழுதுகிறார்கள்: ஜாமிஆவில் இரண்டாவது அல்லது மூன்றாம் ஆண்டில் நான் படிக்கும்போது இவர்கள் பிரின்ஸிபலாக வந்தார்கள். எங்களுடைய நற்பேறு என்னவென்றால், மர்ஹூம் அவர்கள் கல்வியை விட பல மடங்கு அதிகம் தம்முடைய முன்னுதாரணமான ஆளுமையின் மூலமாக செயல்படக் கூடிய ஆலிம் என்ற வகையில் எங்களுக்கு தர்பிய்யத் வழங்கினார்கள். நான் அவர்களின் தர்ஸ் போன்றவற்றை இயன்ற அளவு கேட்பேன்; அவற்றின்படி செயல்படுவதற்கு முயற்சி செய்வேன். அவர்கள் எங்களுக்கு மார்க்கங்களுக்கு இடையிலான ஒப்பீடு பற்றி பாடம் எடுத்தார்கள். பெரும்பாலும் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தம் நூலில் எடுத்து வைத்த சான்றுகளை எங்களை எழுத வைப்பார்கள்; புரிய வைப்பார்கள். ஒருமுறை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் அற்புதத்தை குறித்து எங்களுக்கு பாடம் எடுத்துக்

கொண்டிருந்தார்கள். அது எனக்கு நினைவில் உள்ளது. திடீரென கேள்வி கேட்கும் தொனியில் இன்றும் அற்புதங்கள் வெளிப்படுகின்றனவா? என்று கேட்டார்கள். பிறகு தமது ஓர் அனுபவத்தை கூறினார்கள்: ஒருமுறை மாநாட்டின் நாட்களில் அவர்கள் டியூட்டியில் இருக்கும்போது உணவு மிக குறைவாகத்தான் இருந்தது. திடீரென்று அதிகமான அளவில் விருந்தினர்கள் வந்து விட்டார்கள். கொஞ்சமாக வந்திருந்த உணவை விநியோகம் செய்ய ஆரம்பித்தார்கள். அல்லாஹ் அதில் அருளை வழங்கிக் கொண்டே சென்றான். அனைவரும் சாப்பிட்டார்கள்; எவ்வித குறைபாடும் உணரப்படவில்லை.

மர்ஹூமுடைய மகன் வழி பேரன் ஹாஷிர் அஹ்மது முரப்பி ஆவார். அவர் எழுதுகிறார்: அல்லாஹ்வுடன் பெரும் நேசம் இருந்தது. அல்லாஹ்வுடன் கொண்டிருந்த நேசத்தின் தாக்கத்தை ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் - அவர் பெரியவராக இருந்தாலும் சிறியவராக இருந்தாலும் ஒரு வினோதமான தாக்கத்தை விட்டுச் சென்றுள்ளார்கள். முறையாக தஹஜ்ஜுத் தொழுவார்கள். தொழுகைகளை பேணக் கூடியவர்களாக இருந்தார்கள்.

இப்பொழுது மர்ஹூமுடைய பேரன் முரப்பியாகிவிட்டார். தனது பாட்டனாருடைய அடிச்சுவட்டை பின்பற்றி செல்வதற்கு அவர் முயற்சி செய்ய வேண்டும்.

அவர் கூறுகிறார்: திருக்குர்ஆனுடன் இருந்த நேசம் எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், அதுபோன்ற நேசத்தை ஒருபோதும் கண்டதில்லை. ஃபஜ்ருக்கு பிறகு மிக நீண்ட நேரம் திலாவத் செய்வார்கள். நான் சிறுவனாக இருந்தபோது, அவர்களுடைய வீட்டில் கொஞ்ச காலம் இருக்கக் கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. தஹஜ்ஜுத் தொழுத பிறகு ஃபஜ்ர் தொழுகைக்காக என்னை எழுப்புவார்கள். பிறகு நீண்ட நேரம் திலாவத் செய்வார்கள். மிகவும் அக்கறையுடனும், நேசத்துடனும் பாடம் நடத்துவார்கள். அது என் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நான் கனடாவின் ஜாமிஆவில் சேர்ந்த பிறகு நான் அன்னாரை சந்திக்கும்போதெல்லாம் என்னிடம் திருக்குர்ஆனுடைய மொழியாக்கம் மற்றும் விளக்க உரையை தனித்தனியாக பாடம் எடுக்கிறார்களா? அல்லது சேர்த்து பாடம் எடுக்கிறார்களா? என்று கேட்பார்கள். தனித்தனியாக பாடம் எடுக்கிறார்கள் என்று நான் கூறுவேன். அதைக் கேட்டு மகிழ்ச்சியடைவார்கள். அவ்வாறுதான் இருக்க வேண்டும். மக்களுக்கு திருக்குர்ஆன் விளக்க உரை தெரியும்; ஆனால் மொழியாக்கம் தெரிவதில்லை என்பார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மீது கொண்ட நேசம் எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், ரூஹானீ கஸாயினுடைய பித்தராக இருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூல்களை பலமுறை தாம் படித்திருப்பதாகவும், ஒவ்வொரு முறையும் தமக்கு புதிய கருத்து வெளிப்படுவதாகவும் என்னிடம் பலமுறை கூறியிருக்கின்றார்கள். ரூஹானீ கஸாயினை படித்தால் உங்களுக்கு திருக்குர்ஆன், ஹதீஸ், வாழ்க்கை வரலாறு அனைத்தும் புரிந்து விடும் என்று என்னிடம் கூறிவந்தார்கள்.

இந்த விஷயத்தை அவர்கள் என்னிடமும் ஒருமுறை கூறியிருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அனைத்து நூல்களையும் மூன்று முறை கண்டிப்பாக நான் படித்திருப்பேன். சில நூல்களை மூன்று முறைக்கும் அதிகமாக படித்திருப்பேன் என்று கூறி வந்தார்கள். ஆனால் தன்னடக்கத்தின் சிகரமாக இருந்தார்கள். ஒருபோதும் தம் கல்வியறிவை வெளிப்படுத்தியது கிடையாது.

தொடர்ந்து கூறுகிறார்: ஒருமுறை வீட்டில் குத்பா கேட்டுக் கொண்டிருந்தோம். மின்சாரம் போய்விட்டது. பாகிஸ்தான் ரப்வாவில் பெரும்பாலும் மின்சாரம் தடைபட்டு விடுகின்றது. டி.வி அணைந்து விட்டது. நான் சிறுவனாக இருந்தேன். நான் எழுந்து செல்ல முற்பட்டபோது, மர்ஹூம் அவர்கள் என்னிடம், உட்காருங்கள்; எப்போது மின்சாரம் வரும் என்று உங்களுக்கு தெரியுமா? கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் குத்பா மீண்டும் ஆரம்பாகிவிடலாம்; நீங்கள் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சொற்களை தவற விட்டுவிடக் கூடும் என்று கூறினார்கள். நான் எழுந்து சென்றதை அன்னார் பொறுத்துக் கொள்ளவில்லை. உட்காருங்கள்; துஆக்கள் செய்து கொண்டிருங்கள் ; செல்வதற்கு அனுமதி இல்லை என்று கூறிவிட்டார்கள். அதிலும் பெரும் அருள் இருந்தது.

ஒருமுறை ஒரு நிகழ்ச்சியில் என்னுடைய சொற்பொழிவு இருந்தது. அவர்களுக்கு அதைப் பற்றிய தகவல் கிடைக்காததால் அதைக் கேட்க முடியவில்லை. எம்.டி.ஏ வை வைத்தபோது, அந்த நிகழ்ச்சி முடிந்து போய் இருந்தது. ஒரு காதிமை அழைத்தார்கள். அவர் ஐ பேடில் அந்நிகழ்ச்சியை வைப்பதற்கு முயற்சி செய்தார். ஆனால், வேறு ஒரு மொழியாக்கம் அதில் வந்து கொண்டிருந்தது. ஆனால், அதையும் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பிறகு நான் அங்கு சென்றபோது உருதுவில் அவர்களுக்கு வைத்துக் கொடுத்தேன். அதைக் கண்டு பெரும் மகிழ்ச்சி அடைந்தார்கள்; மிகவும் நன்றி கூறினார்கள். நீ எனக்கு மிகப் பெரும் உதவியை செய்துள்ளாய்; என் மீது பேருபகாரம் செய்துள்ளாய் என்று கூறினார்கள்.

குழந்தைகளுக்கும் நன்றி கூறக் கூடியவர்களாக இருந்தார்கள்.

ரிவ்யூ ஆஃப் ரிலிஜன்ஸ் இன் எடிட்டர் ஆமிர் ஸஃபீர் ஸாஹிப் கூறுகிறார்: கிலாஃபத்துக்கு கட்டுப்படுவதில் வினோதமான அசாதாரணமான ஒரு முன்மாதிரியை காட்டியுள்ளார்கள். நானும் அதை கண்டுள்ளேன்.

நான் ஆமிர் ஸாஹிபிடம், ரிவ்யூ ஆஃப் ரிலிஜியன்ஸ் -க்காக ஜமாஅத்தின் ஆலிம்களிடம் கட்டுரை எழுதுமாறு கூறுங்கள் என்றவாறு சில ஆலிம்களுடைய பெயர்களையும் நான் எடுத்துரைத்திருந்தேன். அவர்களுள் மீர் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் பெயரும் இருந்தது. அவர் கூறுகிறார்:

அப்பொழுது அவர்கள் பாகிஸ்தானில் இருந்தார்கள். இரவு 10, 11 மணி ஆக இருந்தது. அவர்கள் தூங்கி இருப்பார்களோ என்னவோ என்று யோசித்தேன். தூங்கியிருக்க மாட்டார்கள் என்று அவர்களின் உறவினர்கள் கூறினர். ஆகவே நான் ஃபோன் செய்த போது, அவர்களின் மனைவி ஃபோனை எடுத்தார்கள். நான் அவர்களிடம் பேச வேண்டும் என்று கூறியபோது, அவர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். ஆனால், அப்போது மீர் ஸாஹிப் விழித்து விட்டார்கள். ஃபோன் ஒலிக்கும் சத்தத்தைக் கேட்டோ அல்லது பேசக் கூடிய குரலைக் கேட்டோ அன்னார் கண்விழித்து விட்டார்கள். அவர்களிடம் நான் ரிவ்யூ ஆஃப் ரிலிஜன்ஸ் -க்காக இன்ன தலைப்பில் கட்டுரை எழுதுமாறு கலீஃபத்துல் மஸீஹ் கூறியிருக்கின்றார்கள் என்று நான் கூறினேன். எனக்கு இப்போது புரியவில்லை. காலையில் கூறுகிறேன் என்று அவர்கள் கூறினார்கள்.

எவ்வாறு இருப்பினும், அடுத்த நாள் மீர் ஸாஹிப் அவர்கள் 15 பக்கங்களுக்கு ஒரு கட்டுரை எழுதி என்னிடம் அனுப்பி வைத்தார்கள். இதை ஆமிர் ஸஃபீர் ஸாஹிபிடம் கொடுத்து விடுங்கள் என்று அனுப்பி வைத்தார்கள். இரவில் ஒருவருடைய ஃபோன் வந்தது. அதில் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வழிகாட்டலை ஒருவர் எடுத்துரைத்து நீங்கள் இந்த கட்டுரையை எழுதுங்கள் என்று கூறியிருந்தார். ஆகவே நான் எழுதி அனுப்பியுள்ளேன். அதன் முதல் பகுதியை உங்களுக்கு அனுப்பி வைத்துள்ளேன். இது 15 பக்கங்கள் ஆகும். இனியும் அனுப்பி வைத்துக் கொண்டிருப்பேன் என்று கூறினார்கள்.

ஆகவே இந்த அளவு அவர்கள் கட்டுப்படக் கூடியவர்களாக இருந்தார்கள். நேரத்தை பேணுவதைக் குறித்து நான் முன்பே கூறியிருந்தேன். 10 மணி ஆகாத வரை தாம் அலுவலகத்திற்குள் செல்ல மாட்டேன் என்று அவர்கள் உள்ளே செல்லவில்லை.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் கஃபனை குறித்து மர்ஹூம் அவர்களுடைய நிகழ்ச்சி இருக்கும் போது, இங்கு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் கண்காட்சி வைக்கப்படும்போது, அவர்களும் ஒவ்வொரு வருடமும் கலந்து கொள்வார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் போதனையின் ஒளியில் அனைத்து விஷயங்களையும் எடுத்து வைப்பார்கள். ஆமிர் ஸஃபீர் ஸாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்:

முரப்பிமார்கள் ஏதேனும் அறிவார்ந்த தலைப்பில் ஆராயும் போது அசலை விட்டுவிட்டு அதாவது ஜமாஅத்தின் அம்சத்தை விட்டு விட்டு உலக சான்றுகளின் பக்கம் அதிக கவனம் செலுத்துவார்கள். ஆனால், மர்ஹூமுடைய வழிமுறையோ , முதலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் எழுத்துக்களையும், நிலைபாட்டையும் முழுமையாக புரிந்து கொள்வார்கள். பிறகு தான் ஜமாஅத் அல்லாத அல்லது மதச்சார்பற்ற அம்சங்களை பார்ப்பார்கள். இதற்கு மாற்றமாக நடந்து கொள்ள மாட்டார்கள். மீர் ஸாஹிப் அவர்கள் மிகவும் நம்பிக்கையுடன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் கஃபன் தொடர்பாக ஆராயும் உலகின் பெரும் பெரும் ஆராய்ச்சியாளர்களுக்கு முன்னால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கொள்கையை எடுத்து வைப்பார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் இருந்து உயிருடன் தப்பித்த சம்பவங்களை எடுத்துரைப்பார்கள். ரிவியூ ஆஃப் ரிலிஜன்ஸ் உடைய டீம் நீண்ட காலமாக பல்வேறு கோணங்களிலும், அம்சங்களிலும் இதை ஆராய்வதில் ஈடுபட்டுள்ளது. அவர்களுடைய முயற்சி என்னவாக இருந்தது? என்றால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் கஃபனைக் குறித்து அனைத்து விஞ்ஞான, வரலாற்று ரீதியிலான அம்சங்களை எடுத்து வைத்து ஜமாஅத்தின் கொள்கைக்கு வலு சேர்க்க வேண்டும் என்பதாக இருந்தது.

ஆனால், மீர் ஸாஹிப் அவர்களின் நுட்பமான செயல்முறை இதற்கு முற்றிலும் மாற்றமாக இருந்தது. அவர்கள் கூறியது என்னவெனில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஈஸா களிம்பின் மீது அழுத்தம் கொடுத்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நுட்பமான கண்ணோட்டங்களை அடிப்படையாகக் கருத வேண்டும் என்பது ஆகும். ஈஸா களிம்புதான் சிலுவை சம்பவத்தை புரிவதற்கான திறவுகோல் என்று அவர்கள் மீண்டும், மீண்டும் இந்த நிலைபாட்டை எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்கள்.

ரிவியூ ஆஃப் ரிலிஜன்ஸ் உடைய முயற்சிகளினால் ஜமாஅத்தின் நல்லொழுக்க ரீதியான தாக்கம் உறுதியானது; ஆய்வாளர்களுடன் தொடர்பு உறுதியானது. ஆனால் அறிவார்ந்த மட்டத்தில் பார்க்கும்போது தீர்ப்பை தரும் தாக்கம் ஏற்படவில்லை. அவர்கள் கூறுகிறார்கள்: ஆனால், மீர் ஸாஹிப் அவர்களின் அணுகுமுறை இறுதியில் தம் தாக்கத்தை வெளிப்படுத்தியது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் கஃபனை குறித்து தற்போது ஆராய்ந்து வரும் மிக பிரசித்தி பெற்ற போட்டோ கிராஃபரும், ஆய்வாளருமான Barrie Schwortz என்பவர் ஈஸா களிம்பை கொண்டு உங்களது நிலைப்பாட்டை நீங்கள் நிரூபித்து விட்டால் இயேசு சிலுவையில் இருந்து தப்பித்து விட்டார் என்பதை ஏற்றுக் கொள்வதை தவிர வேறு வழி கிடையாது என்று சுயமே ஒப்புக் கொண்டுள்ளார்.

மர்ஹூமுடைய எண்ணற்ற சம்பவங்களை மக்கள் எழுதியுள்ளனர். இன்னும் பல சம்பவங்கள் இருக்கின்றன. பிள்ளைகள் சார்பாகவும், முரப்பிமார்கள் சார்பாகவும் உள்ளன. அனைத்தையும் எடுத்துரைப்பது கடினமாகும். ஒரு விஷயத்தை அனைத்து முரப்பிகளும் எழுதி இருக்கின்றனர். அனைவரும் இல்லை என்றாலும் பொதுவாக எழுதப்பட்ட விஷயம் என்னவென்றால், கபர் எனும் ஒரு சொல்லை பிடித்துக் கொள்ளுங்கள்; அதன்படி செயல்படுங்கள் என்று மர்ஹூம் கூறி இருக்கிறார்கள். கபர் என்பதன் விளக்கம் - கஃப் என்பது குர்ஆனையும், பே என்பது புஹாரீ ஹதீஸையும், ரே என்பது ரூஹானீ கஸாயீனையும் குறிக்கும். நீங்கள் இவ்விஷயத்தில் புலமை பெற்றுவிட்டால், அவற்றை நீங்கள் பெற்று விட்டால், அவற்றின்படி செயல்பட முயற்சி செய்தால், அவற்றிலிருந்து அறிவை கற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்தால், அவற்றிலிருந்து ஆன்மிகத்தை கற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்தால், நீங்கள் உங்களது குறிக்கோளை அடைவதில் வெற்றி பெற்று விடுவீர்கள் என்று கூறியிருந்தார்கள்.

பொதுவாகவும் கபர் எனும் சொல் எப்படிப்பட்டதாக உள்ளது என்றால், மனிதன் அதனை நினைவில் வைத்திருந்தால், இறைவன் நினைவில் இருப்பான். இறைவன் நினைவில் இருப்பான் என்றால், பிறகு மனிதன் இறையச்சத்தின்படி நடப்பதற்கு முயற்சி செய்வான்.

எவ்வாறு இருப்பினும், கிலாஃபத்துடைய ஒரு மகத்தான உதவியாளராகவும், ஒத்துழைப்பாளராகவும் இருந்தார்கள். உயிரை தியாகம் செய்யக் கூடியவராக இருந்தார்கள். சொல்லுக்கு சொல் செயல்படக் கூடியவராக இருந்தார்கள். நன்றி உணர்வுள்ளவராக இருந்தார்கள். எவ்வாறான வல்லமை மிக்க உதவியாளராக இருந்தார்கள் என்றால், இப்படிப்பட்டவர்கள் குறைவாகத்தான காணக் கிடைக்கிறார்கள். செயல்படக் கூடிய ஆலிமாக இருந்தார்கள். இப்போது இவர்களைப் போன்ற எந்த ஓர் உதாரணமும் எனக்கு தென்படவில்லை. அல்லாஹ்வின் கருவூலத்தில் எந்த குறைபாடும் வருவதில்லை. இவ்வாறான முன்மாதிரிகளை அல்லாஹ் இனிமேலும் பிறக்க செய்வானாக! இவ்வாறான நன்றி உணர்வுள்ள, கலப்பற்ற, இறையச்சத்தின்படி நடக்கின்ற, உதவியாளர்களை அல்லாஹ் அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக! மர்ஹூமுடைய சந்ததிகளையும் அவர்களின் தந்தையுடைய துஆக்களில் பங்கெடுக்க கூடியவர்களாக ஆக்குவானாக! மர்ஹூமுடைய செயலின்படியும் அறிவுரையின்படியும் செல்லக் கூடியவர்களாக அவர்களை ஆக்குவானாக! அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

ஏற்கனவே நான் கூறியது போன்று, இரண்டாவது நற்குறிப்பு கடந்த நாட்களில் சிறைவாசத்தில் மரணமடைந்த ஓர் அஹ்மதியைப் பற்றியதாகும். மர்ஹூம் கராச்சியை சார்ந்த குலாம் ரஸூல் அவர்கள் ஆவார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மரணத்தின்போது மர்ஹூமுடைய வயது 71 ஆக இருந்தது. விபரத்தின் அடிப்படையில் சத்ர் மலைர் காலனி கராச்சியைச் சேர்ந்த மர்ஹூம் தாஹிர் மஹ்மூத் ஸாஹிப் மீதும், இஃஜாஸ் ஹுஸைன் ஸாஹிப், அயாஸ் ஹுஸைன் ஸாஹிப் என்ற இரு அஹ்மதிகளின் மீதும் மலேரி காலனி கராச்சியில் கட்டப்படும் பள்ளிவாசல் **தமது பள்ளிவாசலின் வடிவமைப்பில் கட்டப்படுதல், மற்றும் அங்கு ஜும்ஆ தொழுகை நிறைவேற்றுதல் போன்ற விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு** போலீஸ் அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை பதிவு செய்தது. பிறகு கைது நடவடிக்கை அமலுக்கு வந்தது. கைது நடவடிக்கைக்கு முதலில் ஜாமீன் கொடுக்கப்பட்டிருந்தது; ஆனால், பிறகு அவருடைய ஜாமீன் ரத்து செய்யப்பட்டது. அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஜாமீனுக்காக நீதிமன்றத்தில் இருந்தபோது எதிர்ப்பாளர்களின் கூட்டமும், எதிர்தரப்பில் இருந்த வக்கீல்களும் அவர்களை தாக்கியுள்ளனர். அவர்கள் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளார்கள். பயங்கரமான விளைவுகளைக் கொண்ட மிரட்டல்களும் கொடுக்கப்பட்டுள்ளன. எந்த அளவுக்கு என்றால், போலீஸ் அதிகாரி ஒருவர் கூட்டத்தைப் பார்த்து இவர்களை சுட்டு விடுங்கள் என்று கூறியுள்ளார். போலீஸ் ஸ்டேஷனிலும் இவர்கள் மீது கடுமை காட்டப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) மற்றும் கலீஃபாக்களுக்கு எதிராக தீய சொற்களை கூறுமாறு கட்டாயப்படுத்தபட்டார்கள். ஆனால், இவர்கள் உறுதியாக நின்றார்கள். அதற்கு பிறகு தீர்ப்பு வழங்கப்பட்டு இவர்கள் சிறைக்கு மாற்றப்பட்டார்கள். இரண்டு மாதம் சிறையில் இருந்தார்கள். சில நாட்களுக்கு முன்பு இவர்களுடைய சிறுநீரகத்தில் நோய் தொற்று ஏற்பட்டதன் காரணமாக உடல்நிலை மோசமானது. பிறகு அவர்கள் அங்கிருந்து மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்கள். ஆனால், சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மரணத்தின்போதும், மருத்துவமனையிலும் அவர்களுக்கு கை விலங்குகள் போடப்பட்டிருந்தன. இவர்கள் தாக்கப்பட்டதன் காரணமாகவும் இவர்களுக்கு மரணம் ஏற்பட்டிருக்கலாம். அவர்களுக்கு உள்காயங்களும் ஏற்பட்டிருக்கலாம். அதுவே மரணத்தின் காரணமாகவும் இருந்திருக்கலாம். இந்த வகையில் சிறைவாசத்தின் துன்பங்களை பொறுத்துக் கொண்டு தாக்குதலுக்கு இலக்காகி இருக்கின்றார்கள். நீதிமன்றத்தின் முன்பும் தாக்குதலுக்கு ஆளாகி இருக்கின்றார்கள். இவை எவ்வாறான சாட்சியங்கள் என்றால், இந்த வகையில் இவர்களுக்கு ஷஹாதத் எனும் அந்தஸ்து கிடைக்கிறது. இவர்கள் ஷஹீதுடைய வட்டத்தில்தான் வருவார்கள்.

வஸிய்யத் அமைப்பிலும் இணைந்துள்ளார்கள். சதராகவும், செகரட்டரி தஃவத்தே இலல்லாஹ்வாகவும் இருந்துள்ளார்கள். கிளை அமைப்புகளில் இன்னும் பல தொண்டுகளை செய்யக் கூடிய நல்வாய்ப்பு பெற்றுள்ளார்கள். இவர்களுடைய தந்தையின் மூத்த சகோதரர் ஹக்கீம் அஹ்மத் தீன் ஸாஹிப் அவர்கள் மூலமாக குடும்பத்தில் அஹ்மதிய்யத் தோன்றிது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபியான ஹஸ்ரத் மௌலவி இமாம் தீன் ஸாஹிப் அவர்கள் மூலமாக 1920 இல் இரண்டாவது கிலாஃபத்துடைய காலகட்டத்தில் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்தார்கள். அதற்குப் பிறகு மர்ஹூமுடைய தந்தையும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

மர்ஹூம் அவர்கள் மறைவாக ஏழைகளுக்கு உதவி செய்யக் கூடியவராக இருந்தார்கள். பல ஏழை பெண் பிள்ளைகளுக்கு திருமணம் நடத்தி வைத்திருக்கிறார்கள். சிறையிலும் உடனிருந்த தோழர்களுக்கு உதவி செய்திருக்கின்றார்கள். ஏதாவது கஷ்டம் உள்ளதா? என்று கேட்கப்பட்டபோது, என்ன கஷ்டம்? இங்கு நான் மார்க்கத்திற்காக வந்துள்ளேன்; எனக்கு தப்லீஃக்கிற்கான சந்தர்ப்பம் கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்றார்கள். அப்பொழுதும் எவ்வித அச்சமும் இன்றி துணிவுடன் தப்லீஃக் செய்து கொண்டிருந்தார்கள். மர்ஹூமுக்கு எதிராக 17 ஜனவரி 1988 அன்றும் மலேர் காலனி கராச்சி உடைய போலீஸ் ஸ்டேஷனில் ஒரு வழக்கு பதியப்பட்டிருந்தது. வழக்கு தொடர்ந்தவர் தன்னுடைய தம்பியை பைஅத் செய்ய வைத்து விட்டார் என்று வழக்கு தொடர்ந்திருந்தார். அப்பொழுதும் இவர்கள் சிறைவாசம் அனுபவித்தார்கள். இரண்டாவது முறையாக சிறைவாசத்திற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. எதிர்ப்பையும் எதிர் கொள்ள நேர்ந்தது. மூன்று முறை அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் தமது விவகாரத்தை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விட்டார்கள். தாக்குதல் நடத்திய ஒருவன் அல்லாஹ்வுடைய பிடியில் வந்து விட்டதாக இவர்கள் கனவு கண்டார்கள். அதற்கு பிறகு பகைமை கொண்டிருந்த அந்த நபர் தன்னுடைய ஏதோ ஒரு சண்டையில் சச்சரவில் கொல்லப்பட்டு விட்டான். அதைக் கண்டு மற்றவர்கள் மர்ஹூமுடைய வீட்டுக்குச் சென்று தம் செயலுக்காக மன்னிப்பு கேட்டார்கள். மர்ஹூம் அவர்கள் உடனடியாக அவர்களை மன்னித்து விட்டார்கள். எவ்வித வழக்கும் தொடரவில்லை.

மர்ஹூமுடைய மனைவி கூறுகிறார்: எங்களுடன் மர்ஹூம் அவர்கள் நடந்து கொண்ட முறை ஒரு முன்னுதாரணமாக இருந்தது. ஜமாஅத்திற்காக அர்ப்பணமாகி இருந்தார்கள். இரவு வீட்டுக்கு வரும்போது நான் ஒருபோதும் அவரிடம் எந்த முறையீடும் செய்தது கிடையாது. அவர்களை தடுத்தது

கிடையாது. ஏனெனில், எனது கணவருடைய இந்த செயலின் காரணமாக அல்லாஹ் மறைவிலிருந்து எங்களுடைய வேலைகளை செய்கிறான் என்று எனக்கு மன நிம்மதி இருந்தது.

மார்ஹூமுடைய பிள்ளைகளில் ஒருவர் வாழ்வை அர்ப்பணித்து ஜமாஅத்தின் முரப்பியாகவும் இருக்கின்றார். அவர் எழுதுகிறார்:

1980-ல் இறை வழியில் சிறைவாசம் அனுபவிக்கக் கூடிய நல்வாய்ப்பு கிடைத்தது. அப்பொழுது போலீஸார் சார்பாக இவர்கள் மீது மிகவும் கடுமை காட்டப்பட்டிருந்தது. இனிமேல் நீங்கள் முன்னெச்சரிக்கையாக இருங்கள் என்று யாராவது கூறினால், நான் இப்போது போலீஸூடைய அடியையும் வாங்கி விட்டேன். ஆகவே எனக்கு எவ்வித அச்சமும் கிடையாது. நான் எவ்வித தயக்கமும் இன்றி இப்போது அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் பணியை மேற்கொள்வேன் என்று உணர்ச்சிப்பூர்வமாக பேசுவார்கள்.

மார்ஹூம் அவர்கள் தமக்குப் பின்னால் தம்முடைய மனைவி மதிப்பிற்குரிய முபஷ்ஷிரா ஸாஹிபா அவர்களையும், ஒரு மகளையும், 3 மகன்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். முனீப் மஹ்மூத் ஸாஹிப் என்ற மகன் ஜமாஅத்தினுடைய முரப்பியாக பாகிஸ்தானில்தான் இருக்கிறார்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக! அந்துஸ்துகளை உயர்த்துவானாக! அவர்களின் சந்ததிகளையும் அவர்களுடைய அடிச்சுவட்டை பின்பற்றி செல்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! தொழுகைக்குப் பிறகு ஜனாஸா தொழுகை தொழ வைப்பேன்.

தமிழாக்கம்
மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

* * * * *

**முதல் பக்கத் தொடர்ச்சி..**
**(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பொன்மொழிகள்**

குருட்டுத்தன்மையும், கருமித்தனமும், கடுமையான காழ்ப்புணர்ச்சியுமே ஆகும். இத்தகைய மக்கள் இஸ்லாத்தில் இருப்பது இஸ்லாத்தின் இழிவிற்கு காரணமாக ஆகாதா? இந்த மனிதர்கள் ஆன்மிக நோய்களிலிருந்து ஏன் விலகவில்லை? ஏன் இந்த மக்கள் கல்லறைகளிலேயே வீழ்ந்து கிடக்கின்றனர்? என்ற ஆட்சேபனை எழாதா? ஒருவர் சூரிய வெளிச்சம் வருகின்ற தமது வீட்டிலுள்ள அந்த ஜன்னலை அடைத்து விட்டு இருள் நிறைந்த ஒரு மூலையில் அமர்ந்திருந்தால் சூரியனின் ஒளி அவர் வரை வராமல் இருப்பது சூரியனின் குறை கிடையாது. மாறாக, இது சுயமே அவ்வாறு செய்த அந்த நபரின் குறையாகும். இதைத் தவிர்த்து, இந்த மக்கள் எந்த அளவு தம்மை மறைப்பவர்களாகவும், உண்மையை விட்டு வெகு தொலைவில்(விலகி) செல்பவர்களாகவும் இருந்தாலும் கூட பகிரங்கமான ஓரிறைமையை இவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். எந்தவொரு மனிதனையும் அவர்கள் இறைவனாக ஆக்கவில்லை. ஓரிறைமையின் அருள்களால் தங்களிடம் ஓர் ஒளியை இவர்கள் கொண்டிருக்கின்றனர். ஓரளவு வாழ்விற்கான வெப்பம் அவர்களிடம் காணப்படுகிறது. எனவே இவர்கள் அபாயகரமான நிலையில் இருக்கின்றார்கள் என்று நாம் கூறினாலும், அவர்கள் முற்றிலுமாக மரணித்து விட்டனர் என்று நம்மால் கூறமுடியாது.

ஒரு கிறிஸ்தவரோ அல்லது ஓர் இந்துவோ நம்மிடமிருந்து முகத்தை திருப்பியவாறு இத்தகைய ஆட்சேபனையை செய்பவராக இருந்தால், அவர் கடுமையான காழ்ப்புணர்ச்சி கொண்டவராகவோ அல்லது பெரும் அறிவீனராகவோ இருக்கின்றார். தோட்டத்தில் முற்கள் இருப்பது அவசியமானதாகும். எங்கு மலர்கள் இருக்குமோ அங்கு முற்களும் இருக்கும். ஆனால், எதிரி பிரிவினரிடம் முழுக்க முழுக்க முற்களின் குவியலே தென்படுகின்றது. ஈஸா (அலை) ஆன்மிகமான மறுமை ஆவார்; அவர் மூலமாகவே நாங்கள் உயிர் பெற்றுள்ளோம் என்று கிறிஸ்தவர்கள் கூறுவது முழுக்க, முழுக்க வீணான விஷயமாகும். இன்னும் கூறப்போனால், அவர்கள் மரணித்த அனைவரையும் விடவும் அதில் முதல் தரத்தில் உள்ளவர்களாகவும் இருக்கின்றனர். குறுகிய, இருள் நிறைந்த கல்லறைகளில் வீழ்ந்து கிடப்பவர்களாகவும் அவர்கள் இருக்கின்றனர். இணை வைத்தலின் குழியில் அவர்கள் வீழ்ந்து கிடக்கின்றனர். ஈமானின் ஆன்மா அவர்களிடம் இல்லை. ஈமானிய ஆன்மாவின் அருள்களும் அவர்களிடம் இல்லை. மாறாக, படைப்பினங்களை வணங்குவதிலிருந்தும் விலகி நிற்கின்ற மிக தாழ்ந்த நிலையில் உள்ள ஓரிறைமை கூட அவர்களின் பங்கில் இல்லை. தன்னைப் போன்ற ஒரு சாதாரண, எவ்வித சக்தியும் அற்ற ஒருவரை படைத்தவன் என்று கருதிக் கொண்டு அவரை வணங்கிக் கொண்டிருக்கின்றனர்.

(ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானீ கஸாயீன், பாகம் 5, பக்கம் 221 -222)

* * * * *

**20-ம் பக்கத் தொடர்ச்சி...**
**(ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை)**

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னிலையில் எந்தவொரு தயக்கமும் இன்றி இவ்வாறு சாட்சி அளித்தார்: என்னுடைய தாய், தந்தை தங்கள் மீது அர்ப்பணம் ஆகட்டுமாக! தாங்கள் மிக்க பொறுமையாளரும், மிகுந்த சகிப்புத்தன்மையை பெற்றவரும், மிகவும் உயர்வான பண்புகளை கொண்டவரும், உறவினர்களிடம் இணக்கமாகவும், மென்மையாகவும் நடந்து கொள்பவருமாக விளங்குகின்றீர்கள். இறைவனைத் தவிர வேறு ஒரு வணக்கத்திற்குரிய ஒருவர் இருந்திருந்தால் அவர் எங்களுக்கு கண்டிப்பாக உதவி செய்திருப்பார். (இப்னு ஹிஷாம்)

மேலும் மக்கத்து இணை வைப்பாளர்களுடன் மக்கா வெற்றியின் போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் மென்மையுடனும், கருணையுடனும் நடந்து கொண்டார்கள். ஆம்! அந்த இணை வைப்பாளர்கள் மக்காவில் 13 ஆண்டுகள் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அன்னாரின் குடும்பத்தார் மீதும், ஸஹாபா பெருமக்கள் மீதும் எப்படிப்பட்ட கொடுமைகள் இழைத்து வந்தனர் என்றால், அதை படித்து கேட்டு, உடல் மெய்சிலிர்த்து விடுகின்றது. அது மட்டுமல்லாமல் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்ற பிறகும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும், அன்னாரின் தோழர்களையும் அமைதியுடனும், நிம்மதியுடனும் அவர்கள் வாழவிடவில்லை. இந்த அனைத்து கொடுமைகளின் வேதனை மிக்க சம்பவங்களையும் முன்னிறுத்தியவாறு இந்த ரஹ்மத்துல் லில் ஆலமீன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து மக்கா வெற்றியின் போது வெளிப்பட்ட நல்லொழுக்கம் மற்றும் அழகிய முன்மாதிரியை சீர்தூக்கிப் பாருங்கள்!

அமைதி மற்றும் சமாதானத்திற்கான அரசர் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் கொடுமையாளர்களான அந்த மக்கத்து காஃபிர்களிடம், தற்போது உங்களிடம் நான் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள் என்று கேட்டபோது, அவர்கள் நீங்கள் விரும்பினால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; ஆனால், தங்களைப் போன்ற கண்ணியத்திற்குரிய மனிதரிடமிருந்து நாங்கள் நன்னடத்தையையே எதிர்பார்க்கின்றோம். ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்கள் தங்கள் சகோதரர்களுடன் நடந்து கொண்டது போன்று தாங்கள் எங்களுடன் நடந்து கொள்வீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம் என்று கூறினார்கள்.

கண்ணியத்திற்குரிய விருந்தினர்களே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த வெற்றியானது மக்கா மாநகரம் மற்றும் மக்கா வாசிகளுக்குரிய வெற்றி மட்டும் அல்ல. மாறாக, அன்னாரின் மகத்துவம் வாய்ந்த நற்பண்புகளுக்கு கிடைத்த வெற்றி ஆகும். அதை எதிரியும் ஆமோதிக்கின்றான். இவ்வாறு இருப்பினும், எதிரிகள் எதிர்ப்பையும் மீறி ரஹ்மத்துல் லில் ஆலமீன் (அகில உலகங்களுக்கும் ஓர் அருட்கொடை) அவர்கள், அந்த மக்களுடன் கருணையுடன் நடந்து கொண்டார்கள். அனைத்தையும் அநீதியாளர்களையும் கண்டும் காணாமல் மன்னித்து விட்டுவிட்டவாறு, நீங்கள் செல்லலாம்; நீங்கள் விடுதலை செய்யப்பட்டு விட்டீர்கள் ; இன்று உங்களுக்கு எவ்வித தண்டனையும் வழங்கப்பட மாட்டாது. மேலும் எவ்வகை நிந்தனையும் செய்யப்பட மாட்டாது; நான் மட்டும் உங்களை மன்னிக்கவில்லை ; மாறாக,என்னுடைய இறைவனிடமும் உங்களுக்காக பாவ மன்னிப்பு வேண்டுகின்றேன். அல்லாஹ்(வும்) மன்னித்து விடுவான். (இப்னு ஹிஷ்ஷாம்)

மேலும், அமைதிக்கான உத்தரவாதம் அடங்கிய இந்த பகிரங்க அறிவிப்பையும் செய்தார்கள்.

இன்று மஸ்ஜித் ஹராமில் நுழையக் கூடிய ஒவ்வொரு நபருக்கும் பாதுகாப்பு வழங்கப்படும். அபூ ஸுஃப்யானின் வீட்டிற்குள் நுழைந்து விடுபவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும். தமது ஆயுதங்களை எறிந்து விடுபவர்களுக்கும் தமது வீட்டின் கதவுகளை மூடிவிட்டு அதனுள் இருப்பவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும். ஹப்ஷி இனத்தைச் சேர்ந்த பிலால் (ரலி) அவர்களின் கொடியின் கீழ் வந்து நிற்பவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும்.

கண்ணியத்திற்குரிய விருந்தினர்களே!

இன்றைய நாட்களில் நம் அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹூல்லாஹ்) அவர்களும் பல போர்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்து வருகின்றார்கள். அதில் ஒரு போர் பற்றி கூறுகையில் ஹுஸூர் (அய்யதஹூல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எவருடனும் தனிப்பட்ட விரோதம் இருந்ததில்லை, அதாவது அன்னாருடைய உள்ளத்தில் அந்த இணை வைப்பாளர்களுக்கு எதிராக எந்தவொரு தனிப்பட்ட விரோதமும் இருக்கவில்லை. மாறாக, எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மார்க்கத்தை அழிக்க வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு எதிராகவே அந்த தற்காப்புப் போர்கள் நிகழ்ந்தன. அதுமட்டுமல்ல அன்னார் (ஸல்) போருக்கான விதிமுறைகளையும் நிர்ணயித்திருந்தார்கள். அடிப்படை ஒப்பந்தங்களையும் செயல்படுத்தினார்கள். மேலும் அந்த சட்டத்திட்டங்களின்படி அன்னார் (ஸல்) தீவிரமாக செயல்பட்டார்கள். இன்றைய உலகத்தைப் போன்று அல்ல. எண்ணற்ற சட்டத் திட்டங்கள் மற்றும் விதிமுறைகளை ஏற்படுத்துகிறார்கள். ஆனால், அதன்படி எவரும் செயல்படுதில்லை. மாறாக இன்றைய உலகவாதிகளிடம் இரட்டை நிலைபாடே இருக்கின்றது.

(ஜூமுஆ பேருரை, டிசம்பர் 1, 2023)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த தூய முன்மாதிரிகளை எப்பொழுதும் தங்கள் முன் வைத்து செயல்படுவதற்கு இன்றைய இந்த முஸ்லிம் அமைப்புகளுக்கு அல்லாஹ் நற்பேறை வழங்குவானாக! ஆமீன்!

தமிழாக்கம்
மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்

* * * * *

## துஆக்களை செவியேற்பவன் எனும் பண்பின் ஒளியில் இறையிருப்பு

**மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மத் ஹமீத் கவ்ஸர் ஸாஹிப் (நாஸிர் தஃவத்தே இலல்லாஹ் வட இந்தியா, காதியான்)**

**(காதியான் ஜல்ஸா சொற்பொழிவு - 2024)**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

وَاِذَا سَاَلَكَ عِبَادِىْ عَنِّىْ فَاِنِّىْ قَرِيْبٌ ؕ اُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ فَلْيَسْتَجِيْبُوْا لِىْ وَلْيُؤْمِنُوْا بِىْ لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ

(சூரா அல்பக்கரா: 61)

وَقَالَ رَبُّكُمُ ادْعُوْنِىْٓ اَسْتَجِبْ لَكُمْ

(சூரா அல் மூஃமின்: 187)

اَمَّنْ يُّجِيْبُ الْمُضْطَرَّ اِذَا دَعَاهُ وَيَكْشِفُ السُّوْٓءَ وَيَجْعَلُكُمْ خُلَفَآءَ الْاَرْضِ ءَاِلٰهٌ مَّعَ اللّٰهِ قَلِيْلًا مَّا تَذَكَّرُوْنَ

(சூரா அந் நமல்: 63)

துஆக்களை செவியேற்பவன் என்ற அல்லாஹ்வின் இந்தப் பண்பின் மூலம் நாம் அவனை அடையாளம் கண்டு கொள்ளும் பொருட்டு, அவனது இந்தப் பண்பின் அடிப்படையில் இறையிருப்பைப் பற்றி நான் சற்று எடுத்துரைக்க இருக்கின்றேன்.

என்னை அழைத்திடுங்கள். நான் உங்கள் அழைப்புக்கு பதில் அளிப்பேன் என்று அல்லாஹ் கூறுகிறான். இன்றைய புதிய தலைமுறை மார்க்கத்தையும், அல்லாஹ்வையும் விட்டு விலகிச் செல்வதற்கான காரணம், அவர்களின் மதத் தலைவர்கள் அவர்களுக்கு அல்லாஹ்வைப் பற்றிய ஞானத்தைப் பெறுவதற்கும், அவனை அடையாளம் கண்டு கொள்வதற்கும் கூறும் வழிமுறைகள் விளைவைத் தரக் கூடியவையாக நிரூபணமாகுவதில்லை என்பதாகும்.

இதை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் புரியலாம். ஒரு மனிதன் தனது ஒரு தேவையை நிறைவேற்றுவதற்காக, ஒரு வீட்டின் கதவை வீட்டுக்காரர் தனக்கு உதவி புரிவார் என்ற நம்பிக்கையில் தட்டுகிறார். ஆனால், மீண்டும் மீண்டும் தட்டியும் கதவு திறக்கவில்லை என்றால், அவர் வீட்டுக்குள் யாரும் இல்லை ; இருந்தால் பதில் அளித்திருப்பார் என்ற முடிவுக்கு வருவதில் அவர் பக்கம் உண்மை இருக்கும். அவர் நம்பிக்கையிழந்து இறைவனது இருப்பே இல்லை எனக் கருதுகிறார். அதற்கு நிகராக ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

தேடுபவர் காணப் பெறுகிறார். கேட்பவருக்கு வழங்கப்படுகிறது. தட்டுபவருக்குத் திறக்கப்படுகிறது. (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயீன், பாகம் 4, பக்கம் 429-430)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது கவிதையில் கூறுகிறார்கள்:

இறை அவையை விட்டும் நீ இவ்வாறு அவநம்பிக்கை அடைந்து இருந்து விடாதே!

சிரமங்களைத் தீர்ப்பவனுக்கு முன் இந்த சிரமங்களுக்கு என்ன மதிப்பு இருக்கின்றது?

பலவீனமான மனிதர்கள் எங்கேயிருந்து உன் தேவைகளை நிறைவேற்றப் போகின்றனர்.

தேவைகளை நிறைவேற்றுபவனுக்கு முன்னால் எல்லாத் தேவைகளையும் எடுத்துரைத்து விடு.

இந்தக் கவிதைகளில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் இவ்வாறு அறிவுரை கூறுகிறார்கள்:

நீ உனது இந்த பௌதீக வாழ்வில் நிரந்தரமாகவும், கட்டாயமாகவும் துன்பம், துயரம், அவநம்பிக்கை, வேதனை, கவலை, இன்னல் மற்றும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிவரும். அதற்கான சிகிச்சையாவது, நீ இறை அவையை விட்டும், அதாவது அல்லாஹ்விடம் அவநம்பிக்கை அடைந்து விடாதே! சிரமங்களை தீர்ப்பவனுக்கு முன் உன்னுடைய சிரமங்களை எடுத்துரைத்துக் கொண்டே செல்! உன்னுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காக அவனது வாசலிலேயே சாய்ந்திரு! சிரமங்களைத் தீர்க்கும் அவனே உன்னுடைய தேவைகளை நிறைவேற்றுவான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தின் லட்சக்கணக்கான மக்கள் இந்த ஆன்மிக உத்தியை மேற்கொண்டுள்ளார்கள்.துஆக்களை செவியேற்பவனான அல்லாஹ்வின் கதவுகளை தட்டினார்கள். அவர்களுக்காக இறைவனின் அவை திறக்கப்பட்டது. இவ்வாறே ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களது அழகிய முன்மாதிரியின் மூலமாகவும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அழகிய முன்மாதிரியின் மூலமாகவும் தெரியவருவதாவது, ஒவ்வோர் இன்னல் வரும்போதும், ஹுஸுர் (அலை) அவர்கள் துஆக்களை செவியேற்பவனான அல்லாஹ்வின் கதவுகளைத் தட்டினார்கள். கருணையும், பரிவும் மிக்க இறைவன் அன்னாருடைய துஆக்களை ஏற்றுக் கொண்டான்.

இந்தக் கருத்தை இன்னும் விளக்கிக் கூறுவதற்காக இந்த சில எடுத்துக்காட்டுகள் முன் வைக்கப்படுகின்றன. ஒரு கணிப்பின்படி, ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்கு முதல் வஹீ கி.பி 610 ஆகஸ்ட் 20 அன்று வந்தது. துவக்கத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெரிதும் எதிர்க்கப்படவில்லை. ஆனால், இஸ்லாத்தில் நுழைபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைப் பார்த்து மக்கத்தினர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கடுமையாக எதிர்க்கத் துவங்கி விட்டனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை இஸ்லாத்தைப் பரப்புவதிலிருந்தும் தடுப்பதற்காக ஆகுமான மற்றும் ஆகுமற்ற முயற்சிகள் என அனைத்தையும் செய்தனர். இந்த எதிர்ப்புகளும் தடைகளும் எல்லையை எட்டிய பிறகு ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் துஆக்களை செவியேற்பவனான இறைவனின் கதவைத் தட்டியவாறு மிகவும் வேதனையுடன் இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ أَعِزَّ الْإِسْلَامَ بِأَبِي جَهْلِ بْنِ هِشَامٍ أَوْ بِعُمَرَ بْنِ الْخَطَّابِ

பொருள்: அல்லாஹ்வே! அபூ ஜஹ்ல் அல்லது உமர் பின் ஃஹத்தாப் மூலமாக இஸ்லாத்திற்கு உதவியையும் ஆதரவையும் அளிப்பாயாக! (மிஷ்காத் கிதாபுன் ஃபித்ன்-5787)

ஒருபுறம் ஹுஸுர் (ஸல்)அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள். மறுபுறம் அன்றைய நாள்களில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கடும் எதிரியாகவும், பகைவராகவும் இருந்து வந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தில்,ஏன் இந்த மார்க்கத்தை தோற்றுவித்தவரையே கொன்று விடக் கூடாது? என்ற சிந்தனை பிறந்தது. இந்த சிந்தனை வந்ததுமே அவர்கள் வாளைக் கையில் ஏந்திக் கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கொல்வதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டார்கள். வழியில் ஒருவர், உமரே ! எங்கே செல்கிறீர்? எனக் கேட்டார். அதற்கு, அவர்கள் நான் முஹம்மத் (ஸல்) அவர்களைக் கொல்வதற்காக செல்கிறேன்! என பதில் அளித்தார்கள். அப்போது, அந்த நபர் சிரித்துக் கொண்டே "முதலில் உமது வீட்டைப் பற்றி செய்தி அறிந்து கொள்ளும்! உம் சகோதரியும், சகோதரியின் கணவரும் முஸ்லிம் ஆகிவிட்டனர்!" என்று கூறினார். இதைக் கேட்டதுமே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம் சகோதரி மற்றும் சகோதரியின் கணவர் வீட்டுக்குச் சென்றார்கள். அவர்கள் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருப்பதை வெளியிலிருந்து செவியுற்றார்கள். வீட்டுக்குள் நுழைந்த உடனேயே தம் சகோதரியின் கணவரை அடிப்பதற்குச் சென்றார்கள். அன்னாருடைய சகோதரி தம் கணவரைக் காப்பாற்றுவதற்காக நடுவில் வந்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கை ஓங்கி விட்டிருந்தார்கள். அன்னாருடைய சகோதரி திடீரென்று நடுவில் வந்து விட்டார்கள். எனவே, அவர்களால் கையை தடுக்க முடியவில்லை. அன்னாரது கை ஓங்கி அவர்களது மூக்கில் பட்டது. அதிலிருந்து ரத்தம் வழியத் தொடங்கியது.

சகோதரியின் ரத்தம் வடிவதைக் கண்டதுமே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்த துஆவின் தாக்கம் வெளிப்படத் துவங்கியது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நீங்கள் என்ன படித்துக் கொண்டிருந்தீர்கள்? கூறுங்கள்! எனக் கேட்டார்கள். உமர் (ரலி) அவர்களிடம் மென்மைக்கான உணர்வுகள் உருவாகி விட்டதை சகோதரி புரிந்து கொண்டார்கள். போய் விடுங்கள்; உங்களைப் போன்ற



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

மனிதரின் கையில் நான் அந்தத் தூய பொருளைத் தர ஆயத்தமாக இல்லை என்று அவர்கள் கூறினார்கள். பிறகு நான் என்ன செய்யட்டும்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, அதோ தண்ணீர் இருக்கிறது; குளித்து விட்டு வாருங்கள்! என்று சகோதரி கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குளித்து விட்டு திரும்பி வந்தார்கள்.

அன்னார் (ரலி) செவியேற்ற, திருக்குர்ஆனின் அந்தப் பக்கங்களை சகோதரி அன்னாரின் கையில் கொடுத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. எனவே திருக்குர்ஆன் வசனங்களைப் படித்ததுமே அவர்களுக்குள் உருக்கம் உருவானது. அன்னார் (ரலி) அந்த வசனங்களை ஓதி முடித்ததும், தம்மையும் அறியாமல் اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا

اللّٰهُ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰهِ

என்று கூறினார்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்கே இருக்கின்றார்கள்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வினவினார்கள். ஹுஸுர் (ஸல்) அவர்கள் தாரே அர்கமில் இருக்கின்றார்கள் என்று கூறப்பட்டது. ஹஸரத் உமர் (ரலி) அவர்கள் உடனடியாக அதே நிலையில் அங்கு சென்றடைந்து கதவைத் தட்டினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு எதிர்பாராத விதமாக வந்தார்கள். முஸ்லிம்கள் அச்சமடைந்தனர். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் புதிதாக நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அவர்கள் போர் வீரரின் இயல்புடைய மனிதராக இருந்தார்கள். எனவே, திறந்து விடுங்கள்; அவர் என்ன செய்கிறார்? என்று நான் பார்க்கிறேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். எனவே ஒருவர் சென்று கதவைத் திறந்து விட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முன்னோக்கி வந்ததும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், உமரே எதற்காக வந்துள்ளீர்? என்று கேட்டார்கள். அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நானே தங்களுக்கு அடிமை ஆக வந்துள்ளேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். இதைக் கேட்டதுமே முஸ்லிம்களிடத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தது. அவர்கள் உணர்ச்சி பொங்கி தக்பீர் முழக்கத்தை உயர்த்தினார்கள்.

(தஃப்ஸீரே கபீர்,தொகுதி 6, பக்கம் 141 - 142)

சற்று ஆழ்ந்து கவனம் செலுத்துங்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கடுமையான எதிர்ப்பை எதிர் கொண்டார்கள். ஹுஸுர் (ஸல்) அவர்கள் துஆக்களை செவியேற்பவனான இறைவனின் கதவைத் தட்டினார்கள். அல்லாஹ் அன்னாரது துஆவை ஏற்றுக் கொண்டான். இஸ்லாத்தின் பக்கம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தை திறந்து விட்டான். அல்லாஹ்வால் மட்டுமே இவ்வளவு பயங்கரமான எதிரியை இஸ்லாத்தை ஏற்பதற்கு இணங்க வைக்க முடியும். வேறு எவரும் இந்த மாற்றத்திற்கான ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை என்பது இந்த நிகழ்விலிருந்து நிரூபணமாகிறது.

இதே போன்ற ஒரு நிகழ்வு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய வாழ்விலிருந்து கிடைக்கிறது. ஹுஸுர் (அலை) அவர்கள் தமது அரபு வாக்கியம் ஒன்றில் கூறுகிறார்கள். அதன் சுருக்கம் இதுவாகும்;

நான் இரவு பகலாக அழுது மன்றாடியவாறு, என் இறைவா! அடியார்களில் என் உதவியாளர் யார்? அல்லாஹ்வே! நான் வலுவிழந்த மனிதன் ஆவேன்; என்று வேண்டிக் கொண்டிருந்தேன். நான் துஆவுக்காக தொடர்ச்சியாக கையை உயர்த்திக் கொண்டிருந்தபோது, துஆக்களால் விண்ணின் சூழல் நிரம்பியதும், எனது துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது. அனைத்துலகங்களையும் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வின் கருணை பொங்கியெழுந்தது. கருணையுள்ள இறைவன் எனக்கு உண்மையான தோழரை வழங்கினான். அவரது ஒளிமிகுந்த இயல்பைப் போன்று அவர் பெயரும் நூருத்தீன் (மார்க்கத்தின் ஒளி) ஆகும்.(ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம் என்ற நூலின் அரபி வரியின் சுருக்கம், ரூஹானி கஸாயீன், தொகுதி 5, பக்கம் 581 - 582)

ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் நடைபெற்ற தமது முதல் சந்திப்பைப் எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:

நான் ஜம்முவிலிருந்து பட்டாலாவுக்கு வந்தேன். அங்கிருந்து குதிரை வண்டி மூலமாக காதியானுக்கு வந்து சேர்ந்தேன். காதியானில் இப்பொழுது முபாரக் பள்ளிவாசலின் கிழக்கில் பெரிய கேட் இருக்கும் இடத்தை வந்தடைந்து குதிரை வண்டி ஓட்டுபவரிடம், மிர்ஸா ஸாஹிப் அவர்களின் வீடு எது? என்று கேட்டேன். அதற்கு அவர் மிர்ஸா இமாம்தீனை அறிமுகப்படுத்தி வைத்து விட்டார். அவரைப் பார்த்ததும், நான் இந்த மனிதரை ஒன்றும் சந்திக்க வரவில்லையே என்று எனது உள்ளம் மிகவும் கனத்தது. நீங்கள் மிர்ஸா குலாம் அஹ்மத் ஸாஹிப் அவர்களை சந்திக்க வேண்டும் என்றால், அவர் வீடு பின்பக்கம் இருக்கிறது என்று அந்த நபரே கூறினார். அவர் கூறியதைக் கேட்டதும், அப்பாடா! இப்பொழுது நான் தேடுகின்ற அந்த மிர்ஸா எனக்கு கிடைத்து விடுவார் என்று எனக்கு உயிரே வந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அஸ்ர் தொழுகைக்குப் பிறகு முபாரக் பள்ளிவாசலுக்கு வடமேற்கு திசையிலுள்ள சிறிய மாடிப் படிகள் வழியாகக் கீழே வருகை தந்து கொண்டிருந்தார்கள். மவ்லானா நூருத்தீன் ஸாஹிப் அவர்களது பார்வை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய முகத்தின் மீது பட்டதுமே, இவர்கள்தான் மிர்ஸா ஆவார்கள்; நான் முழுவதுமே இவர்களுக்கு அர்ப்பணம் ஆகிவிட வேண்டும் என்று அவர்கள் தமது மனதில் கூறினார்கள்.

(தாரிகே அஹ்மதிய்யத், தொகுதி 1, பக்கம்- 212)

அல்லாஹ்வின் இருப்பு இருக்கிறது. அது வேதனையுடன் துஆ செய்யும் ஒவ்வொருவருடைய துஆவையும் ஏற்றுக் கொள்கிறது என்பது இந்த நிகழ்விலிருந்து பட்டப்பகல் சூரியனைப் போன்று தெளிவாகிறது. ஆனால், நிபந்தனை என்னவென்றால், அந்த துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகளின்படி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இஸ்லாமிய வரலாற்றில் முதன்முதலாக நடைபெற்ற போர் பத்ர் யுத்தம் ஆகும். இந்த யுத்தம் ஹிஜ்ரீ 2-ம் ஆண்டு ரமலான் பிறை 17, அதாவது கி.பி 624 ஆம் ஆண்டு மார்ச் 14 அன்று பத்ர் எனும் மைதானத்தில் நடந்தது. மக்கத்து காஃபிர்களிடம், ஏறத்தாழ ஆயிரம் அனுபவசாலி போர் வீரர்களைக் கொண்ட படை இருந்தது. அது அக்காலத்தின் புத்தம் புதிய ஆயுதங்களையும், போர்த்தளவாடங்களையும் ஏந்தி வந்திருந்தது. மறுபுறம் முஸ்லிம்களின் எண்ணிக்கையானது 313 நபர்களை உள்ளடக்கியிருந்தது. அது அவர்களை எதிர்கொள்வதற்காக நின்று கொண்டிருந்தது. இவர்களில் பெரும்பாலான மக்கள் அனுபவமற்றவர்களாக இருந்தனர். போர்த் தளவாடங்களும் இல்லாததற்குச் சமமாக இருந்தன. இவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து வந்து 3 ஆண்டுகள்தான் ஆகியிருந்தன. அவர்களிடம் உணவுப் பொருட்களும் இருக்கவில்லை ; தங்குவதற்குமே குறிப்பிட்ட தங்குமிடம் என்று ஏதும் இருக்கவில்லை என்ற நிலை இருந்தபோது, அவர்கள் போருக்கான ஆயத்தம் எப்படி செய்வார்கள்? இந்த இரண்டு பக்கத்தின் படைகளும் எதிரெதிரே நின்று கொண்டிருந்தன.

இந்தக் காலத்தில் நடுநிலையான ஒருவர் இரு பக்கத்தில் உள்ளவர்களையும் ஆய்வு செய்தால், மக்கத்து காஃபிர்களின் படை முஸ்லிம்களை சில நிமிடங்களிலேயே அழித்து நாசமாக்கி விடும் என்ற முடிவுக்கு வரும் நிர்பந்தத்திற்கு ஆளாகி விடுவார். ஏனெனில், இது ஒரு சமநிலையற்ற போராக இருந்தது. ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் இந்த வெளிப்படையான வலுவின்மையை கணித்(து அறிந்)திருந்தார்கள். எனவே, ஹுஸுர் (ஸல்) அவர்கள் துஆக்களை செவியேற்பவனான இறைவனின் வாயிலைத் தட்டியவாறு மிகவும் உருக்கமாக இவ்வாறு பணிவுடன் வேண்டினார்கள்.

اَللّٰهُمَّ اِنَّكَ اِنْ تُهْلِكْ هٰذِهِ الْعِصَابَةَ

مِنْ اَهْلِ الْاِسْلَامِ لَا تُعْبَدُ فِي الْاَرْضِ

பொருள்: அல்லாஹ்வே! முஸ்லிம்களின் இந்தக் கூட்டம் அழிக்கப்பட்டு விட்டால், பிறகு மண்ணில் உன்னை உண்மையாக வணங்கக் கூடியவர் எவரும் இருக்க மாட்டார்.

அல்லாஹ் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அழைப்புக்கு செவிமடுத்தான். மேலும், அனுபவம் பெற்றிருந்த போர் வீரர்கள் மீது கைஅளவு முஸ்லிம்களுக்கு மாபெரும் வெற்றியை வழங்கினான். அபூ ஜஹ்ல் உட்பட மக்கத்து காஃபிர்களின் 24 தலைவர்கள் கொல்லப்பட்டனர். முஸ்லிம்கள் அவர்களுடைய 70 நபர்களை சிறைபிடித்தனர்.

துஆக்களை செவியேற்பவனான எந்த இறைவன் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் துஆவை செவியேற்றானோ இன்றும் அவன் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தொண்டர்களின் துஆக்களை செவியேற்கிறான். அவர்களுக்காகவும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான கதவுகளைத் திறக்கின்றான்.

தற்காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களையும் ஏற்றுக் கொண்டு, எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் அல்லாஹ்வின் இருப்பு உள்ளது; அவனே சிரமங்களை அகற்றுபவனாகவும், தேவைகளை நிறைவேற்றுபவனாகவும் இருக்கின்றான் என்பதை உலகிற்குத் தெள்ளத் தெளிவாகக்

காட்டி விட்டான். இது தொடர்பாக ஒரு சம்பவம் எடுத்துரைக்கப்படுகிறது:

எவ்வாறு ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் சிறிய தந்தை அபூலஹப் என்பவனும், நெருங்கிய உறவினர்களும் இஸ்லாத்தைப் பரப்புவதற்கான எல்லா வழிகளையும் அடைப்பதற்கு முயற்சி செய்தார்களோ அதேபோன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சிறிய தந்தை வழி சகோதரர்களும் அஹ்மதிய்யத்தின் தப்லீஃக்கைத் தடுக்கக் கூடிய எல்லாத் தடைகளையும் ஏற்படுத்த முயற்சி செய்தனர். ஜனவரி 5, 1900 அன்று மிர்ஸா இமாமுத்தீன் மற்றும் நிஸாம் தீன் ஆகியோர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாருடைய ஸஹாபிகளுக்கு துன்பம் கொடுப்பதற்காக முபாரக் பள்ளிவாசலுக்குக் கீழ்ப்பக்கமாக அக்ஸாவை நோக்கி செல்லும் வழியில் சுவர் எழுப்பி வழியை அடைத்து விட்டனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மாவட்ட அரசு அதிகாரிகளையும், குர்தாஸ்பூரின் துணை ஆணையாளரையும் தொடர்பு கொண்டு இந்தச் சுவரை அகற்ற முயற்சி செய்தார்கள். ஆனால், அவர்களது அணுகுமுறை முற்றிலும் எதிரானதாக இருந்தது. இன்னும் கூறுவதாயின் ஆக்கிரமிப்பு மிக்கதாக இருந்தது.

இறுதியில், ஹுஸூர் (அலை) அவர்கள் குர்தாஸ்பூரின் மாவட்ட நீதிபதியின் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்தார்கள். ஆனால், அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும்போதும், ஆரம்பகட்டத்தில் நம்பிக்கை பொங்கும் எந்த சூழலும் தென்படவில்லை. இந்த ஆபத்தான சூழ்நிலையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துஆக்களை செவியேற்பவனின் கதவைத் தட்டினார்கள். அப்பொழுது மேலான அல்லாஹ் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் மூலமாக இந்த நற்செய்தியை வழங்கினான்..

اَلرَّحٰی۔ تَدُوْرُ وَیَنْزِلُ الْقَضَاءُ۔اِنَّ
فَضْلَ اللهِ لَاٰتٍ وَلَیْسَ لِاَحَدٍ اَنْ یُّرُدَّ مَا
اَتٰی۔

பொருள்: ஆட்டுரல் சுற்றும்; இறை நியதி இறங்கும்! அதாவது, வழக்கின் நிலை மாறிவிடும். இது இறைவனின் வாக்குறுதியாகும். எதைக் குறித்து வாக்குறுதி அளிக்கப்பட்டதோ அது கண்டிப்பாக வந்தே தீரும்! அதை மறுப்பதற்கு எவருக்கும் துணிச்சல் கிடையாது. (அஹ்மதிய்யத்தின் வரலாறு, தொகுதி 2, பக்கம் 73)

துஆக்களை செவியேற்பவனான இறைவன் புறமிருந்து நற்செய்தி கிடைத்த பிறகு நீதிபதி தனது எதிர்ப்புத் தோரணை இருந்தும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு கூறினார். மேலும், சுவரை இடிக்க ஆணையிட்டார். மிர்ஸா இமாம் தீன் மீது வழக்கு செலவுகள் போக, கூடுதலாக 100 ரூபாய் அபராதம் விதித்தார். மேலும் ஆகஸ்ட் 12,1901-அன்று அந்த சுவரைக் கட்டிய அதே கைகள் அந்த சுவரை இடித்து தரைமட்டமாக்கின.

எவ்வாறு ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள்

رحمة للعلمين

(அகில உலகங்களுக்கும் அருட்கொடை ) ஆக இருந்தார்களோ அவ்வாறே ஹுஸூர் (ஸல்) அவர்களின் இரண்டாவது வருகையின் வெளிப்பாடான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கருணையின் முழு வடிவமாகத் திகழ்ந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் தம்முடைய இந்தக் கடுமையான எதிரிகளின் இழப்பீட்டுத் தொகையை மன்னித்து விட்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை எதிர்த்ததன் காரணமாக இந்தக் குடும்பத்திற்கு முடிவுரா இன்னல்களின் ஒரு தொடர் ஆரம்பமாகி விட்டது. அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகும் தொடர்ந்தது. எனவே இந்த இன்னல்களால் நொந்து போய் அவற்றிலிருந்து தப்பிப்பதற்காக மிர்ஸா நிஸாம் தீன் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இல்லத்திற்கு வந்தார். மேலும் வாயிலில் தலையை வைத்து தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார். மேலும், மவ்லவி ஸாஹிப் அவர்களே, எங்களது இன்னலுக்கு சிகிச்சை ஏதும் இல்லையா?என்று கேட்டார். அதற்கு, பதில் கூறியவாறு, மிர்ஸா ஸாஹிப், இறைநியதியை எப்படி என்னால் மாற்ற முடியும்? என்று ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கேட்டார்கள். (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 3, பக்கம் 654, அறிவிப்பு எண்: 720)

இந்த நிகழ்வை ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பதன் மூலம், அஹ்மதிய்யத்தின் எதிரிகள் மற்றும் அஹ்மதிய்யத்தின் பகைவர்களுக்கு இதில் ஒரு வகையில் இப்படியான ஓர் எச்சரிக்கையும் அச்சுறுத்தலும் இருப்பதாகத் தெரிகிறது. அதாவது, அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் மற்றும் தப்லீஃக்கின் வழிகளில் தடைகளை எழுப்புகின்ற அஹ்மதிய்யத்தின் பகைவர்கள் நினைவில் கொள்ளட்டும்!

விரைவாகவோ, தாமதாகவோ

اَلرَّحٰی۔ تَدُوْرُ وَیَنْزِلُ الْقَضَاءُ

அதாவது, துஆக்களை செவியேற்பவனான இறைவனின் ஆட்டுரல் சுற்றும்; எதிரிகள் மீது இறை நியதி இறங்கும்.

அப்பொழுது இந்தத் தடைகளை எழுப்புகின்ற எதிரிகள் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வாயிலில் தலையை வைத்து எங்களுடைய இன்னல்களுக்கு சிகிச்சை எதுவும் இல்லையா? என்று கேட்பார்கள். அப்பொழுது காலத்தின் கலீஃபா அவர்கள் தமது தீர்ப்பைக் கூறுவார்கள்.

அஹ்மதிய்யா ஜமாஅத் அஹ்மதிய்யத்தின் எதிரிகளிடம் அறிவுரையாக இவ்வாறு கூறுகிறது:

எந்த இறைவன் கடந்த காலத்தில் தடைகளை எழுப்பியவர்களுக்குப் பாடம் கற்பிக்கும் தண்டனையை வழங்கினானோ அதே துஆக்களை செவியேற்பவனான இறைவன் நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் தண்டனை அளிப்பதற்கான ஆற்றல் பெற்றிருக்கின்றான். எனவே ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (நஸரஹுல்லாஹ்) அவர்களின் அறிவுரையைக் கேளுங்கள். மேலும் தவ்பா செய்தவாறு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து விடுங்கள்.

وما علينا الا البلاغ

(தூதுச் செய்தியை எட்ட வைப்பதைத் தவிர எம் மீது வேறு எந்தப் பொறுப்பும் இல்லை)

காதியானிலிருந்து ஏறத்தாழ 70- கி.மீ தொலைவில் கபூர்தலா என்ற ஒரு நகரம் உள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் இங்கு ஒரு கலப்பற்ற ஜமாஅத் இருந்தது. முன்ஷீ ஹபீபுர் ரஹ்மான் ஸாஹிப் (ரலி) அவர்களின் குடும்ப பள்ளிவாசல் ஒன்று இருந்தது. அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அது அஹ்மதி மக்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. அவர்களே அதில் தொழுவார்கள்; அங்கேயே ஜமாஅத் நிகழ்ச்சிகள் நடந்து வந்தன.

இந்தப் பள்ளிவாசல் அஹ்மதி அல்லாத முஸ்லிம்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று அஹ்மதிய்யத்தின் எதிரிகள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து விட்டனர். இந்த வழக்கு பல்வேறு நீதிமன்றங்களையும், வாய்தாக்களையும் கடந்து வந்தவாறு தனது இறுதி கட்டத்தை எட்டியது. அப்பொழுது தீர்ப்பு வழங்கும் நீதிபதியும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கடுமையான எதிரி ஆவார் என்பது அஹ்மதி மக்களுக்குத் தெரிய வந்தது. அவர் நீதிமன்றத்தில் வாசித்துக் காட்டப் போகின்ற அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிரான அந்தத் தீர்ப்பை தீர்ப்பு எழுதிவிட்டார்.

இந்த நிலையில், கபூர்தலா ஜமாஅத் பதற்றமடைந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குக் கடிதங்கள் எழுதியது. துஆவிற்காக விண்ணப்பித்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்களிடம், நான் உண்மையானவன் என்றால், பள்ளிவாசல் உங்களுக்குக் கிடைத்து விடும் என்று கடிதம் எழுதினார்கள். ஆனால், நீதிபதி வழக்கப்படி எதிர்ப்பு அணுகுமுறையை நிலைநாட்டினார். கடைசியில் அஹ்மதிகளுக்கு எதிராக தீர்ப்பு எழுதி விட்டார்.

தீர்ப்பு கூற இருந்த அன்று காலை வேளையில் ஆடை அணிந்து கொண்டு தனது கோட்டை வீட்டின் வராண்டாவுக்கு வந்தார். தன் பணியாளரிடம் பூட் அணிவிக்குமாறு கூறிவிட்டு இவர் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டார். பணியாளர் பூட் அணிவித்து லேஸ் கட்டி விட ஆரம்பித்தபோது, திடீரென்று அவருக்கு ஏதோ சப்தம் கேட்க, அவர் கை வைத்து பார்த்தபோது, இவர் இறந்து கிடந்தது தெரிய வந்தது. ஆக, ஒரேயடியாக இதயத் துடிப்பு நின்றுபோய் உயிர்போய்விட்டது. அதற்குப் பிறகு, அந்த நீதிபதியின் இடத்தில் ஓர் இந்து நீதிபதி நியமிக்கப்பட்டார். அவர் புதிதாக விசாரணை நடத்தி முந்தைய நீதிபதியின் தீர்ப்பை விட்டு விட்டு அஹ்மதிகளுக்கு சாதகமாகத் தீர்ப்பு கூறினார். (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, பக்கம் 79, அறிவிப்பு எண்: 57)

ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்! தீர்ப்பை மாற்ற வைப்பது எந்த அஹ்மதியின் கட்டுப்பாட்டிலும் இருக்கவில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையை நிரூபிப்பதற்காகவும், பள்ளிவாசல் அஹ்மதிகளுக்குக் கிடைப்பதற்காகவும் எதிராக தீர்ப்பு எழுதிய நீதிபதியை இல்லாமல் அழித்து ஒழித்து விடுவது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் ஆதிக்கத்தில் மட்டுமே இருந்தது. துஆக்களை செவியேற்பவனான இறைவன் தற்காலத்தில் தன்னுடைய நல்லடியார்களின் துஆக்களை ஏற்றுக் கொண்டு தனது இருப்பிற்கான சான்றை அளிக்கின்றான் என்பதைத் தனது செயல் ரீதியான சாட்சியத்தின் மூலம் நிரூபித்து விட்டான்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அரபுக் கல்வியை எந்தவொரு கல்லூரியிலிருந்தோ,

பல்கலைக்கழகத்திலிருந்தோ பெற்றிருக்கவில்லை. மாறாக, ஹுஸூர் (அலை) அவர்கள் சிறுவயதில் அரபு இலக்கணத்தின் சில நூல்களை ஓர் ஆசிரியரிடம் கற்றார்கள். இது தவிர, ஹுஸூர் (அலை) அவர்கள் எந்த அரபுக் கல்வியும் கற்றிருக்கவில்லை. அல்லாஹ் ஹுஸூர் (அலை) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகவும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியாகவும் உம்மத்தீ நபியாகவும், ரஸூலாகவும் ஆன்மிக அந்தஸ்தில் நிலைத்திருக்கச் செய்தபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் உருதுவிலும், ஃபார்ஸியிலும் நூல்கள் எழுதத் துவங்கினார்கள். 1893 இல் ஹுஸூர் (அலை) அவர்கள் ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம் என்ற நூலை எழுதிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த நூலின் சில பகுதிகளை அரபு மொழியில் எழுதுமாறு கேட்டுக் கொண்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் எளிமையாகவும், அப்பாவித்தனமாகவும் எனக்கு அரபு தெரியாது என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிரா குகையில்,

مَا اَنَا بِقَارِئٍ

எனக்குப் படிக்கத் தெரியாது என்று ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு அளித்த பதிலில் இருந்த அதே பொலிவு இருந்தது. இதைக் கேட்ட ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் ஸாஹிப் (ரலி) அவர்கள், ஹுஸூர் (அலை) அவர்களுக்கு அரபு தெரியும் என்று நான் எங்கு கூறுகிறேன். தாங்கள் தூர் மலைக்கு சென்று அங்கிருந்து ஏதேனும் கொண்டு வாருங்கள் என்று கூற விரும்புகிறேன் என்று கூறினார்கள். இதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ( அலை) அவர்கள் நான் துஆ செய்வேன் என்று கூறினார்கள்.

துஆக்களை செவியேற்பவனான இறைவன் ஹுஸூர் (அலை) அவர்களின் துஆவை ஏற்றுக் கொண்டான். ஹுஸூர் (அலை) அவர்கள் தமது நூலான அஞ்சாமே ஆத்தமில் இவ்வாறு கூறுகிறார்கள்:

علمت اربعين الفا من اللغات العربية

பொருள்: எனக்கு 40 ஆயிரம் அரபு அகராதி சொற்கள். அதாவது மூலச் சொற்கள் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு ஏறக்குறைய 20 அரபு நூல்களை இயற்றினார்கள். சூரா ஃபாத்திஹா விளக்கவுரை அரபு மொழியில் இயற்றினார்கள். மேலும் தமது நூலான இஃஜாஸுல் மஸீஹில் மிகவும் அறுதியிட்டு அறிவிப்பு செய்தார்கள்.

அன்னாருக்கு நிகராக உலகம் முழுவதிலும் உள்ள அறிஞர்கள், மார்க்கச் சட்டம் பயின்றவர்கள், சிறியவர், பெரியவர் அனைவரும் ஒன்றுதிரண்டு இது போன்ற விளக்கவுரை எழுத விரும்பினாலும் அவர்களால் ஒருபோதும் எழுத முடியாது. (அஹ்மதிய்யத்தின் வரலாறு, தொகுதி 2, பக்கம் 168)

பிறகு, நவம்பர் 15, 1902 இல் ஹுஸூர் (அலை) அவர்கள் இஃஜாஸே அஹ்மதி எனும் நூலை வெளியிட்டார்கள். அதில் உருதுக் கட்டுரை மட்டுமின்றி, லுத் விவாதம் தொடர்பாக 533 அரபுக் கவிதைகளை அரபு மொழியில் இயற்றினார்கள். பிறகு, நான் இந்த நூல்களை 533 அரபுக் கவிதைகளை வெறும் 5 நாள்களில் எழுதியுள்ளேன். எதிரி அறிஞர்கள் 12 நாள்களில் இத்தகைய கஸீதாக்களை எழுதினால், தயக்கமின்றி 10 ஆயிரம் ரூபாய் அவர்களுக்குக் கொடுத்து விடுவேன் என்று கூறினார்கள். 122 ஆண்டுகள் கழிந்து விட்டன. எவரும் பதில் எழுதத் துணியவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோ மவ்லவி அப்துல் கரீம் ஸாஹிப் (ரலி) அவர்களிடம், எனக்கு அரபு தெரியாது ; நான் துஆ செய்வேன் என்று கூறினார்கள்.

கேள்வி என்ன எழுகிறது? என்றால், துஆக்களை செவியேற்பவனான இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களை ஏற்றுக் கொண்டவாறு 40 ஆயிரம் வினைச் சொற்களைக் கற்றுக் கொடுக்கவில்லை என்றால், பிறகு இந்த வினைச் சொற்களை ஹுஸூர் (அலை) அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தது யார்? பிறகு எப்படி ஹுஸூர் (அலை) அவர்கள் அரபு மொழியில் கருத்துச் செறிவுமிக்க நூல்களையும், கவிதைகளையும் இயற்றினார்கள்? ஹுஸூர் (அலை) அவர்கள் இப்படிக் கூறியுள்ளது உண்மையே!

வல்லமையின் மூலம் தனது இருப்பிற்கான சான்றை அந்த உண்மையாளன் அளிக்கின்றான்; அடையாளமற்ற அவன் இப்படித்தான் தனது முகத்தைக் காட்டுகின்றான்.

இந்த நிகழ்விலிருந்து நிரூபணமாவது என்னவென்றால், அஹ்மதிய்யா ஜமாஅத் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் போதனைகளுக்கு ஏற்ப அல்லாஹ்வைப் பற்றிய ஞானம், அவனை அடையாளம் கண்டு கொள்ளுதல், அவன் வரை எட்டுதல், அவனை சென்றடைதல் குறித்து எந்த வழிகளையும், வழிமுறையையும் எடுத்துக் கூறுகிறதோ அது முற்றிலும் உண்மையானது; சரியானது என்பது ஆயிரக்கணக்கான அஹ்மதி மக்களின் அனுபவத்தால் நிரூபணமாகிறது.

அதை மேற்கொண்டு இன்றும் ஒவ்வொரு மனிதனும் துஆக்களை செவியேற்பவனான இறைவன் முன்னிலையில் துஆக்கள் செய்து அவனது இருப்பை அடையாளம் கண்டு கொள்ள முடியும். மேலும், தனது ஈமானை வலுப்படுத்திக் கொள்ள முடியும்.

ஹஸ்ரத் மவ்லானா குலாம் ரஸூல் ஸாஹிப் ராஜ்கீ (ரலி) அவர்கள் தமது ஒரு நிகழ்வை எடுத்துக் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் மவ்லானா ஸாஹிப் (ரலி) அவர்கள் காதியானில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்தித்த பிறகு தமது ஒரு கிராமத்திற்கு திரும்பிச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் கப்பல் மூலமாக சனாப் நதியைக் கடப்பதற்காக கரையை அடைந்தபோது, கப்பல் மாலுமி தூசி படிந்த வானத்தின் காரணத்தினால், கப்பல் ஓட்ட மறுத்து விட்டார். ஆனால், ஒரு திருமண ஊர்வலத்தினர் வற்புறுத்தியதனால் அவர் கப்பல் ஓட்ட ஆயத்தமாகி விட்டார்.

ஹஸ்ரத் மவ்லானா ஸாஹிப் (ரலி) அவர்களும், படகில் ஏறிக் கொண்டார்கள். படகு நதிக்கு நடுவில் சென்று சேர்ந்தது. சூரியன் மறைய இருந்த போது புயல் வீசத் துவங்கியது. அதனால் மாலுமி, இறைவனைத் தவிர வேறு யாராலும் உங்களைக் காப்பாற்ற முடியாது என்று கூறினார். நதி சலசலத்துக் கொண்டிருந்தது. படகில் ஏறியிருந்த மக்கள் அனைவரும் நம்பிக்கையிழந்த நிலைமையைக் கண்டதும், அப்பொழுது எல்லாரும் தங்களையும் அறியாமல், பீர் புஹாரீ அவர்களே! ஃஹாஜா ஃஹிஸ்ர் அவர்களே! பீர் ஜீலானி அவர்களே! என்று கத்த ஆரம்பித்து விட்டார்கள். ஆனால், சூழ்நிலை மாறவில்லை.

ஹஸ்ரத் மவ்லானா ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அந்த மக்கள் அழுது புலம்புவதைக் கண்டதும் நானும் அப்பொழுது துஆ செய்யத் துவங்கி விட்டேன். என்னிடம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில நூல்கள் இருந்தன. எனவே நான் இறைவன் முன்னிலையில் அந்த நூல்களை முன்னிறுத்தி இவ்வாறு துஆ செய்தேன்:

கருணையுள்ள இறைவா! நாங்கள் அனைவரும் நதியில் மூழ்கடிக்கப்படுவதற்குத் தகுதியானவர்கள் என்றால், எந்த அமலும் நாங்கள் தப்பிப்பதற்குக் காரணம் ஆக முடியாது என்றால், பின்னர் நீ உன் தூய அன்பிற்குரிய மஸீஹ் அவர்களின் மூலமாக மக்களின் நேர்வழி மற்றும் ஈடேற்றத்திற்காக வெளியிடச் செய்த இந்த நூல்களுக்காக அந்தப் புயலை வீச விடாமல் தடுத்து விடுவாயாக! மேலும் எங்களை நலமுடன் கரை சேர்த்து விடுவாயாக!

ஹஸ்ரத் மவ்லானா ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஓரிரு முறைதான் இந்த துஆ சொற்களை மீண்டும், மீண்டும் கூறினேன். புயல் ஒரேயடியாக ஓய்ந்து விட்டது. மேலும் நாங்கள் நலமாக கரை சேர்ந்து விட்டோம். (ஹயாத்தே குத்ஸீ, பக்கம் 34)

இந்த நிகழ்விலிருந்து தெளிவாவது என்னவெனில், தற்காலத்திலும் அல்லாஹ்வின் இருப்பு இருக்கின்றது. மேலும் அது துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் மூலமாக அடையாளம் காணப்படுகிறது. நல்லியல்புள்ள எவரும் அதை மறுக்க முடியாது.

ஹுஸூர் (அலை) அவர்கள் அல் வஸிய்யத் நூலில் நுபுவ்வத்தை முதல் வல்லமை என்றும், கிலாஃபத்தை இரண்டாவது வல்லமை என்றும் எழுதியுள்ளார்கள். அதாவது, மேலான அல்லாஹ் முதல் வல்லமை மூலமாகவும், தனது இருப்பிற்கான சான்றைத் தருகின்றான். இரண்டாம் வல்லமை மூலமாகவும் தருகின்றான். ஆக, தற்காலத்தில் இரண்டாம் வல்லமையின் வெளிப்பாடான ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஈமானுக்கு வலுவூட்டக் கூடிய நிகழ்வுகளிலிருந்து அல்லாஹ் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் மூலமாக உலகத்திற்குத் தனது இருப்பிற்கான சான்றை எட்ட வைக்கின்றான் என்பது தெரிய வருகிறது.

மதிப்பிற்குரிய அப்துல் மாஜித் தாஹிர் அடிஷனல் வக்கீலுத் தப்ஷீர் லண்டன் அவர்கள் கூறுகிறார்கள்:

மே, 2006 இல் அது ஒரு வியாழக்கிழமை ஆகும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஃபார் ஈஸ்ட் நாடுகளுக்கான தமது சுற்றுப் பயணத்தின் போது, ஃபிஜீயில் உள்ள நான்தீ என்ற இடத்தில் இருந்தார்கள். இரவு கிட்டத்தட்ட ஒரு இரண்டரை மணி, மூன்று மணி இருக்கும். அப்பொழுது ரப்வா, லண்டன் மற்றும் உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்து தொலைபேசி அழைப்புகள்

வரத் துவங்கின.

(ஹுஸூர்) இப்பொழுது டி.வியில் வந்து கொண்டிருக்கும் செய்திகளின்படி, ஒரு மிகப் பெரிய சுனாமி ஃபிஜீக்குப் பக்கத்தில் இருக்கும் தீவான டோன்கா வில் வந்துள்ளது. மேலும் சூறாவளி ஆற்றல் அடிப்படையில் லட்சக்கணக்கான பேரை மூழ்கடித்து விட்டிருந்த, உலகத்தின் பல நாடுகளில் அழிவை ஏற்படுத்தியிருந்த இந்தோனேஷிய சுனாமியை விடப் பெரியது.

டி.வி-யை போட்டபோது, இந்த சுனாமி தனது தீவிரத்திலும், ஆற்றலிலும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கிறது. காலையில் ஃபிஜீயின் நாந்தீ எனும் முழுப் பகுதியும் மூழ்கி விடும். மேலும், அக்கம்பக்கத்து தீவுகளும் மூழ்கி விடும்; ஆஸ்திரேலியாவின் ஒரு பகுதியும் மூழ்கி விடும்; மேலும் இது நியூஸிலாந்தின் ஒரு பெரும் பகுதியும் மூழ்கி விடும் என்ற செய்திகள் வந்து கொண்டிருந்தன.

காலை நாலரை மணிக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஃபஜர் தொழுகை தொழுவதற்காக வருகை தந்த போது, அந்தப் புயல் பற்றிய அறிக்கை ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் மேலான பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டது. எந்தத் தூதுச் செய்திகள் நலம் விசாரிப்பதற்காக ஃபோனில் கிடைத்துக் கொண்டிருந்தனவோ அவை குறித்தும் கூறப்பட்டது. ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஃபஜர் தொழுகையை தொழ வைத்தார்கள். மேலும், மிக நீண்ட ஸஜ்தா செய்தார்கள். மேலும், இறைவன் முன்னிலையில் அழுது மன்றாடினார்கள். தொழுகை முடிந்ததும் மஸீஹின் கலீஃபா அவர்கள் ஜமாஅத் மக்களைப் பார்த்து, கவலைப்படாதீர்கள் அல்லாஹ் அருள் புரிவான். ஒன்றும் ஆகாது என்று கூறினார்கள். அதற்குப் பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹோட்டலுக்குத் திரும்பி சென்றார்கள். நாங்கள் திரும்பி வந்து டி.வியை போட்ட போது, டி.வியில் இந்த சுனாமியின் வலு உடைகிறது; சிறிது சிறிதாக அதன் தீவிரம் முடிவுக்கு வருகிறது என்ற செய்திகள் வரத் துவங்கி விட்டன. பிறகு, 2, இரண்டரை மணிக்குப் பிறகு இந்த சுனாமியின் சுவடே அழிந்து விட்டது என்ற செய்திகள் வந்தன.

எனவே அன்றைய நாள் உலகம் வினோதமான காட்சியைக் கண்டது. அதாவது, எந்த சுனாமி அடுத்த சில மணி நேரங்களில் லட்சக்கணக்கான மக்களை மூழ்கடித்தவாறு அந்த முழுப் பகுதியையும் இல்லாமல் ஆக்க இருந்ததோ, அது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துஆவால் சில மணி நேரங்களில் சுயமே இல்லாமல் போனது. அன்று ஃபிஜீயின் செய்தித்தாள்கள் சுனாமி அகன்றது எந்த அற்புதத்தை விடவும் குறைவானதில்லை என்ற செய்திகளை வெளியிட்டன.

மதிப்பிற்குரிய அப்துல் மாஜித் தாஹிர் ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்:

நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். மேலும் இந்த அற்புதம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துஆ பரக்கத்தால் வெளிப்பட்டது என்ற விஷயத்திற்கு நான் சாட்சி ஆவேன்.

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், நவம்பர் 21, 2024, பக்கம் 15 -16)

காலத்தின் கலீஃபா அவர்களின் துஆக்களும் அவர் வழங்கிய (அருளுக்குரிய அன்பளிப்பு எனும்) தபர்ருக்கும் பலர் குணமடைவதற்குக் காரணமாக அமைகிறது. அதன் மூலமாக அல்லாஹ் தனது இருப்பிற்கும், துஆக்களை செவியேற்பவனாக இருப்பதற்கும் சான்றளிக்கின்றான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஒருமுறை ஸீஸரின் தலையில் கடுமையான வலி ஏற்பட்டது. எல்லா வகையான சிகிச்சை செய்தும் அவனுக்கு நிம்மதி கிடைக்கவில்லை. ஒருவர் அவனிடம், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு தங்களது நிலையை எழுதி அனுப்பி விடுங்கள்; மேலும் அவர்களிடமிருந்து தபருக்காக ஏதாவது பொருளை வரவழையுங்கள். அவர்கள் தங்களுக்காக துஆவும் செய்வார்கள். (அருளுக்குரிய அன்பளிப்பு எனும்) தபருக்குயும் அனுப்பி வைப்பார்கள். அவர்களது துஆவால் தங்களுக்கு கண்டிப்பாக குணமாகி விடும் என்று கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அவன் தனது தூதுவனை அனுப்பினான்.

இவர்கள் ஆணவம் கொண்ட மக்கள் ஆவர்;அவன் எங்கே என்னிடம் வர இருந்தான்? இப்பொழுது அவன் இன்னலில் ஆழ்ந்த பிறகு அவன் தன் தூதுவனை என்னிடம் அனுப்பியுள்ளான். நான் அவனுக்கு வேறு ஏதாவது தபர்ருக் அனுப்பினால் அவன் அதை அற்பமாகக் கருதி பயன்படுத்தாமல் போகலாம். எனவே நான் தபர்ருக்காகவும் இருக்கக் கூடிய அவனது ஆணவத்தையும் தவிடுபொடியாக்கக் கூடிய ஏதாவது ஒரு பொருளை நான் அனுப்ப வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நினைத்தார்கள். எனவே அன்னார் (ரலி) ஆங்காங்கே கறைபடிந்து, அழுக்கினால் கருப்பாகிவிட்டிருந்த தமது பழைய தொப்பி ஒன்றை அவனுக்கு தபர்ருக் ஆக அனுப்பி விட்டார்கள். அவன் இந்தத் தொப்பியைப் பார்த்த போது, அவன் மிகவும் வருந்தினான். எனவே அவன் தொப்பியை அணியவில்லை. ஆனால், இறைவன் இப்பொழுது உனக்கு ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலமாகவே பரக்கத் கிடைக்கப் பெற முடியும் என்று கூறி இருந்தான்.

ஆக, அவனுக்கு எவ்வளவு பயங்கரமான தலைவலி ஏற்பட்டது என்றால், அவன் தன் பணியாளரிடம், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அனுப்பி வைத்த அதே தொப்பியைக் கொண்டு வா நான் என் தலையில் வைக்கிறேன் என்று கூறினான். எனவே அவன் தொப்பி அணிந்தான். அவன் தலை வலி நீங்க ஆரம்பித்தது. அவனுக்கு 8,10 நாளுக்கு ஒருமுறை தலை வலி ஏற்பட்டு வந்தது. எனவே அவனுக்கு இது வழக்கமாகி விட்டது. அதாவது அவன் அரசவையில் அமரும் போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அதே அழுக்குப்படிந்த தொப்பியை அவன் தனது தலையில் வைத்திருப்பான். (ஸேரே ரூஹானி, பக்கம் 326)

துஆ மற்றும் (அருளுக்குரிய அன்பளிப்பு எனும்)தபர்ருக் மூலமாக குணமடையக் கூடிய நிகழ்வுகள் ஐந்தாவது கிலாஃபத்திலும் வெளிப்பட்டன. நேரத்தின் அருமையைக் கருத்தில் கொண்டு அவற்றில் ஒன்றை மட்டும் முன் வைக்கின்றேன். தீவுகளில் உள்ள நாட்டைச் சேர்ந்த புதிதாக பைஅத் செய்த பெண்மணி நாஸியா காஸ்மீ ஸாஹிபா அவர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்தித்த போது, தம் தாயார் புற்று நோயிலிருந்து குணமடைவதற்கு துஆவிற்காக விண்ணப்பித்தார். அதற்கு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அல்லாஹுத்தஆலா அவருக்கு உடல் நலம் அளிப்பான்; அருள் புரிவான் என்று கூறினார்கள். அத்துடன் சேர்த்து ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள்

اَلَیۡسَ اللّٰہُ بِکَافٍ عَبۡدَہٗ

மோதிரத்தையும் வழங்கினார்கள். அதை அவர்களின் தாயார் அணிந்து கொண்டார்கள்.

சில காலங்களுக்குப் பிறகு அவர்களின் தாயார் உடல் பரிசோதனைக்காகச் சென்றபோது, மருத்துவர்கள் இப்பொழுது அவர்களுக்கு எவ்வித பரிசோதனையோ, கீமோதெராப்பியோ செய்ய வேண்டிய தேவையில்லை ; ஏனெனில், இப்பொழுது அவர்களது உடல்நலம் புற்றுநோய் ஏற்படுவதற்கு முன்னிருந்த உடல்நலத்தைக் காட்டிலும் மிகவும் நல்லதாகவும், சிறந்ததாகவும் இருக்கின்றது என்று கூறினர்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த அடையாளம் அவர்களின் முழு குடும்பத்தினரின் உள்ளங்களை மாற்றி விட்டது. மேலும், இந்த அடையாளத்தைப் பார்த்து 36 பேரை உள்ளடக்கிய குடும்பம் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டது. (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், நவம்பர் 2014, பக்கம் 14)

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

உண்மை என்னவென்றால், நம் இறைவனோ துஆக்களால் அடையாளம் காணப்படுகின்றான்; பேசக் கூடிய இறைவன் ஒருவனே. அவன் இஸ்லாத்தின் இறைவன் ஆவான். அவனைத் திருக்குர்ஆன் முன் வைத்துள்ளது. அவன்

اُدۡعُوۡنِیۡۤ اَسۡتَجِبۡ لَکُمۡ

பொருள்: நீ என்னை அழைத்திடு; நான் உனக்கு பதில் அளிப்பேன் என்று கூறியுள்ளான். ஒருவர் நீண்ட காலம் வரை உண்மையான நிய்யத் மற்றும் தூய்மையுடன் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டு, கடுமையாகப் போராடி, துஆக்களில் மூழ்கியிருந்தால் கடைசியில் அவர் செய்த துஆக்களுக்கு அவருக்கு கண்டிப்பாக பதில் அளிக்கப்படும் என்பது முற்றிலும் உண்மையான விஷயம் ஆகும். (மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 1984)

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தைப் பார்த்துக் கூறுகின்றார்கள்:

இந்த ஜமாஅத்தை அதன் முன்மாதிரியினால் மக்களுக்கு இறைவன் நினைவுக்கு வருகின்ற ஜமாஅத்தாக ஆக்க இறைவன் விரும்புகின்றான்.

(மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி 3, பக்கம் 504, 1989-ம் ஆண்டு பதிப்பு)

எந்த சமுதாயத்தின் முன்மாதிரியால் மக்களுக்கு இறைவன் நினைவுக்கு வருவானோ அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக அல்லாஹ் நம்மில் ஒவ்வொருவரையும் ஆக்கிவிடுவானாக! ஆமீன்! அல்லாஹும்ம ஆமீன்!

தமிழாக்கம்
மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

* * * * *

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை
## (போர்களில் அன்னார் (ஸல்) மேற்கொண்ட நற்பண்புகளின் ஒளியில்)

மவ்லானா முஹம்மது இனாம் ஸாஹிப் கௌரி, நாஸிர் ஆஃலா காதியான்

(காதியான் ஆண்டு மாநாட்டு உரை - 2024)

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

لَقَدْ كَانَ لَكُمْ فِيْ رَسُوْلِ اللّٰهِ اُسْوَةٌ حَسَنَةٌ

பொருள்: உங்களுக்கு அல்லாஹ்வின் திருத்தூதரிடத்தில் மிக மேலான முன்மாதிரி உண்டு.
(அல் அஹ்ஸாப்: 33:22)

وَاِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ

நிச்சயமாக நீர் மிகவும் உயர்வான நல்லொழுக்கத்தைப் பெற்றுள்ளீர் (அல் கலம் :68:5)

அவையோர்களே! ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உயரிய நல்லொழுக்கத்தின் குறிப்பிடத்தக்க நற்பண்பு என்னவென்றால், அன்னார் (ஸல்) முடிந்த வரை போர் மற்றும் சண்டை சச்சரவுகளை தவிர்த்தே வந்தார்கள். மேலும் எப்போதும் அமைதியின் வழியையே மேற்கொண்டு வந்தார்கள். அன்னார் (ஸல்) மற்றும் அன்னாரின் ஸஹாபிகளின் 13 ஆண்டு கால மக்காவின் காலகட்டமானது கொடுமைகள் மற்றும் மக்கத்து காஃபிர்களின் இன்னல்கள் வேதனை அளிக்கக் கூடிய துன்பங்கள் போன்ற சம்பவங்களினால் நிரம்பி இருக்கின்றது. மேலும் அளவுக்கு அதிகமான கொடுமைகள் மற்றும் இன்னல்களை சகிக்க முடியாத காரணத்தினால் ஸஹாபா பெருமக்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று முறையீடு செய்யும் போதெல்லாம்,

اِنِّيْ اُمِرْتُ بِالْعَفْوِ فَلَا تُقَاتِلُوْا

என்று கூறினார்கள்:

பொருள்: நான் மன்னிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று தான் எனக்கு கட்டளை இடப்பட்டுள்ளது. அதனால் நீங்கள் சண்டையிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்.

மக்கத்து காஃபிர்களின் கொடுமைகள் எல்லையை மீறின. மேலும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் வருகையின் நோக்கமான ஏகத்துவத்தை நிலை நாட்டுதலுக்கான அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டன. அப்போது அல்லாஹ் அன்னாருக்கு ஹிஜ்ரத் செய்வதற்கான அனுமதி வழங்கினான். மேலும், அல்லாஹ் தன்னுடைய கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பின் நிழலின் கீழ் தன்னுடைய தோழமையில் அன்னாரை யஸ்ரப் என்று அழைக்கப்பட்ட மதீனா வரை சென்றடைய செய்தான். அதன் மூலம் அன்னார் (ஸல்) சுதந்திரமான முறையில் ஏக இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது. ஆனால், மக்கத்துக் காஃபிர்கள், பெருமனார் (ஸல்) அவர்கள் இறை பணியை நிறைவேற்றுவதில் வெற்றி பெறக் கூடாது என்பதற்காக அவர்களால் முடிந்த அளவிற்கு அனைத்து முயற்சிகளையும் செய்தனர். ஆனால், தற்போது அந்த தூதுச் செய்தியானது மதீனாவிலிருந்து வெளியேறி முழு அரபு நாடுகளிலும் பரவுவதை அவர்களால் எவ்வாறு சகித்துக் கொள்ள முடியும்?

எனவே தங்களுடைய யூகத்தின் அடிப்படையில் இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனரையும், மதீனாவிலிருந்து வெளியேற்றி நிரந்தரமாக தீர்த்து கட்டி விட வேண்டும் என்ற துடிப்புடன் பகிரங்கமான இவ்வுலக காரணிகளுடன் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக ஆயத்தமானார்கள். அப்போது எல்லாம் வல்ல அல்லாஹ் அநீதி இழைக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு தன்னுடைய பாதுகாப்பு மற்றும் மார்க்க சுதந்திரத்தை நிலை பெறச் செய்வதற்காக வாளுக்கு எதிராக வாளை எடுப்பதற்கான அனுமதியை வழங்கினான்.மேலும், முஸ்லிம்களிடம் அல்லாஹ் இவ்வாறு வாக்குறுதி அளித்திருந்தான்:

وَاِنَّ اللّٰهَ عَلٰى نَصْرِهِمْ لَقَدِيْرُ

பொருள்: மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். (22:40)

மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து ஓராண்டு கழிந்த நிலையில் ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ரமலான் மாதத்தில் மக்கத்து காஃபிர்கள் ஓராயிரம் போர் வீரர்களைக் கொண்ட படையுடன் தாக்குதல் நடத்தினார்கள். இந்த மக்கள் அந்த நேரத்தில் பொதுவான போர் தளவாடங்களுடன் நன்கு அணிவகுத்திருந்தனர். எனவே இராணுவத்தில் எழுநூறு சவாரி ஒட்டகங்களும், நூறு குதிரைகளும் இருந்தன. மேலும் குதிரைப்படைகளும் காலாற்ப்படைகளும், கவசங்களும் இருந்தன. மேலும் வாள், வில் மற்றும் அம்புகள் உள்ளிட்ட பிற போர் தளவாடங்களும் போதுமான எண்ணிக்கையில் இருந்தன. அவற்றுடன் காஃபிர்கள் அணிவகுத்திருந்தனர்.

மறுபக்கம் பெருமானார் (ஸல்) அவர்கள் 310 அல்லது 313 ஸஹாபிகள் மட்டுமேதான் இருந்தார்கள். அவர்கள் சிறு வயதைக் கொண்ட இளைஞர்களாக இருந்தார்கள். மேலும் 2 குதிரைகள் மட்டுமே இருந்தன. ஒட்டகங்களின் எண்ணிக்கை 70 ஆக இருந்தது. அதில் தான் அவர்கள் ஒருவர் பின் ஒருவராக சவாரி செய்து வந்தனர். மேலும் ஆயுதம் ஏந்துபவர்கள் ஆறு அல்லது ஏழு பேர் மட்டுமே இருந்தனர். மீதமுள்ள போர் தளவாடங்களும் மிகக் குறைவாகவே இருந்தன.

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! பத்ர் போர் தொடர்பாக விரிவாக எடுத்துரைப்பது என்னுடைய தலைப்பு அல்ல. வாருங்கள்!

தற்போது இந்த முதல் போரில் எதை திருக்குர்ஆன் யவ்முல் ஃபுர்கான் என்று கூறியுள்ளதோ அதில் எம்பெருமானார்(ஸல்) அவர்களுடைய எத்தகு உயரிய நல்லொழுக்கங்கள் வெளிப்பட்டன என்பதை நாம் காண்போம்!

எல்லாவற்றிற்கும் முதலாக, அந்த காட்சியை நினைவில் கொண்டு வாருங்கள்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் மைதானத்தில் அமைக்கப்பட்டு இருந்த விதானத்திற்குள் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் முன்னிலையில் அழுதவாறு எந்த அளவிற்கு தீவிரமாக மன்றாடி வேண்டிக் கொண்டிருந்தார்கள் என்றால், அன்னாரின் தோளின் மீது இருந்த துண்டு மீண்டும், மீண்டும் கீழே விழுந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதை சரி செய்து கொண்டே இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிகுந்த உருக்கம் மற்றும் தீவிர மன்றாடலை பார்த்து விட்டு மிகவும் கவலைக்குள்ளாகி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தற்போது நீங்கள் நிறுத்தி விடுங்கள்; அல்லாஹ் தன்னுடைய உதவி மற்றும் வாக்குறுதியை உங்களுக்கு அளிக்கவில்லையா என்ன ? என்று வினவினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிச்சயமாக அவன் வாக்குறுதி அளித்துள்ளான். ஆனால், நமது முயற்சிகளிலும், திட்டமிடலிலும் ஏதேனும் குறைபாடு ஏற்பட்டு விட்டால் இறை உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டு விடக் கூடாது என்று கருதி அவனுடைய தன்னிறைவு என்ற பண்பை எண்ணி நான் அஞ்சுகிறேன் என்று கூறினார்கள். ஆனால், இறைவனின் முன்னிலையில் மன்றாடி துஆக்களை அதன் எல்லை வரை எட்ட வைத்து விட்டார்கள். மேலும் இறைவனின் உதவியை ஈர்ப்பதற்காக அவனின் தன்மான உணர்வை செயல்பட வைப்பதற்காக மிகுந்த உருக்கத்துடன் இறைவனின் முன்னிலையில் இவ்வாறு வேண்டினார்கள்.

اَللّٰهُمَّ اِنِّيْ اَنْشُدُكَ
عَهْدَكَ وَوَعْدَكَ اَللّٰهُمَّ اِنْ تُهْلِكْ هٰذِهِ
الْعِصَابَةَ مِنْ اَهْلِ الْاِسْلَامِ لَا تُعْبَدْ فِي
الْاَرْضِ

பொருள்: அல்லாஹ்வே! உன்னுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவாயாக! என்னுடைய எஜமானனே! முஸ்லிம்களின் இந்த ஜமாஅத் இன்று இந்த மைதானத்தில் அழிக்கப்படுவார்கள் என்றால், இதன் பிறகு உலகில் உன்னை வணங்கக் கூடிய மக்கள் எவரும் எஞ்சி இருக்க மாட்டார்கள். அதன் பிறகு இறைவன் மீது முழுமையாக நம்பிக்கை கொண்டவாறு விதானத்திலிருந்து வெளியே வந்தார்கள்.

மேலும் இறை நற்செய்தியான “அந்தப் படை விரைவில் தோற்கடிக்கப்படும். அவர்கள்

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

புறமுதுகு காட்டி வெகுண்டோடுவர்."
(54: 46) என்பதை அறிவித்தார்கள்.

பின்னர் ஒரு கைப்பிடி மண் மற்றும் சிறு கற்களை எடுத்து காஃபிர்களின் படையை நோக்கி ஊதியவாறு,

شَاهَتِ الْوُجُوْهُ

என்று ஆக்ரோஷத்துடன் கூறினார்கள்.

பொருள்: எதிரிகளின் முகம் சீர்குலைந்து விடும்.

அந்த ஒரு கைப்பிடி மண்ணானது எப்படிப்பட்ட அற்புதத்தை வெளிப்படுத்தியது என்றால், ஒரு புயல் உருவாகி அது காஃபிர்களின் கண்கள், முகம் மற்றும் மூக்கை மண்ணால் நிரப்பியது. பிறகு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஆணைக்கு இணங்க முஸ்லிம்களின் படையானது ஒரே முனையாக தாக்குதல் தொடுத்ததில் பார்த்துக் கொண்டிருக்கும்போதே குறைஷியர்களின் தலைவர்களான அபூ ஜஹல், உத்பா, ஷீபா போன்றவர்கள் அழிவிற்குள்ளாகி மண்ணோடு மண்ணாகி விட்டனர். இறுதியில் மக்கத்து காஃபிர்கள் தங்களுடைய 70 கொலையுண்டவர்களையும், 70 கைதிகளையும் மட்டும் பத்ர் போர்க் களத்தின் திறந்த வெளியில் விட்டுவிட்டு தோற்கடிக்கப்பட்டு மீதமுள்ள தமது போர் படையுடன் ஏமாற்றம் மற்றும் தோல்வியை தழுவியவாறு மக்காவிற்குத் திரும்பிச் சென்று விட்டனர்.

இந்த சந்தர்ப்பத்தில் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் ஒரு மகத்தான நற்பண்பு நல்லொழுக்கத்தை நம்மால் காண முடிகிறது. அது என்னவென்றால், காஃபிர்களின் படை தன்னுடைய இறந்தவர்களின் சடலத்தை திறந்த வெளி மைதானத்தில் விட்டு விட்டு ஓடிவிட்டது. ஆனால், அங்குள்ள சம்பிரதாய வழக்கத்தின்படி எதிரிகளின் சடலத்தை முஸ்லா ( துண்டு, துண்டாக வெட்டி சிதைத்து விலங்குகளுக்கு இரையாக்குவதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் விரும்பவில்லை. மாறாக அன்னார் (ஸல்) ஒரு குழியைத் தோண்டி அதில் 24 இணை வைப்பாளர்களின் தலைவர்களை நல்லடக்கம் செய்தார்கள். அதை கலீபே பத்ர் என்று கூறுவார்கள். (புஹாரி கிதாபுல் மகாஸீ)

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! எம்பெருமானார் (ஸல்) மற்றும் முஸ்லிம்களுக்கு கிடைத்த இந்த மகத்துவம் வாய்ந்த முதல் வெற்றியானது மக்கத்து காஃபிர்களின் முதுகெலும்பை முறித்து விட்டது. ஆனால், இந்த வெற்றியின் மூலம் அன்னாரோ, அன்னாரின் ஸஹாபிகளோ எந்தவொரு மகிழ்ச்சியையும் கொண்டாடவில்லை. மாறாக, தம்முடைய இறைவனின் மகத்துவத்தின் முழக்கத்தையே போற்றிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அபூஜஹலை கொலை செய்து மேலும், அவனை இறுதியாக தாக்கி வீழ்த்தியதற்குப் பிறகு எம்பெருமானார் (ஸல்) அவர்களுடைய சமூகத்தில் வந்து அபூஜஹல் அழிந்து விட்டான் என்ற தகவலை அறிவித்த போது,அன்னார் (ஸல்) அந்த தருணத்திலும் தவ்ஹீதின் முழக்கத்தை முழங்கினார்கள். மேலும் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவருமில்லை தானே? என்று கேட்டார்கள். அதற்கு நான் ஆம்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்று கூறினேன். அதன் பிறகு ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூஜஹலின் சடலத்திற்கு அருகில் சென்று நின்றவாறு, அல்லாஹ்வின் எதிரியான உன்னை அழித்த அந்த இறைவனுக்கே எல்லாப் புகழும் என்று கூறினார்கள். அதன் பிறகு, இவன் இந்த உம்மத்தின் ஃபிர்அவ்ன் ஆவான் என்று கூறினார்கள். (முஃஜமுல் கபீர் லித் திப்ரானீ, தொகுப்பு 9, பக்கம் 81 பெய்ரூத்)

கண்ணியத்திற்குரிய சபையோர்களே! நினைவில் கொள்ளுங்கள்! ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தன்னுடைய ஸஹாபிகளுக்கு போரின் ஒழுங்கு முறைகள் மற்றும் நிரந்தரமான வழிகாட்டலை வழங்கியவாறு இவ்வாறு முன்பே அறிவித்திருந்தார்கள்:

போரின் போது எந்த முதியோரையும், குழந்தைகளையும், பெண்களையும் கொல்லக் கூடாது.

எதிரிகளின் மீது இரவு உறங்கிக் கொண்டிருக்கும்போது தாக்குதல் தொடுக்கக் கூடாது.

பழம் தரக் கூடிய பசுமையான மரங்களை வெட்டக் கூடாது. மேலும் எந்தவோர் உயிரினத்தையும் நெருப்பினால் எரிக்கக் கூடாது.

எதிரிகளின் சடலங்களை இழிவுபடுத்தும் நோக்கத்தில் சிதைக்கக் கூடாது. மேலும் விலங்குகளுக்கு இரையாக்கும் விதமாக திறந்தவெளியில் விட்டுவிடக் கூடாது.

சுருக்கமாக, எதிரிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி இக்கட்டான சூழ்நிலையில் இறை அறிவிப்பிற்கு ஏற்ப தற்காப்பிற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வாள் ஏந்த வேண்டிய அவசியம் ஏற்பட்ட போது போரின் சூழலில் எங்கு உலகில் பொதுவாக அனைத்தும் ஆகுமானதாக கருதப்படுகிறதோ அங்கு முதல் முறையாக உலகிற்கு போரின் நெறிகளை அன்னார் (ஸல்) ஒளிரச் செய்தார்கள். இந்த ஒழுங்கு முறையான நன்னடத்தை உடன் அன்னார் (ஸல்) போருக்காக புறப்படுவார்கள். ஆனால், அதன் பிறகு அன்னாரின் அனைத்து நம்பிக்கையும் உறுதியும் இறைவனின் இருப்பின் மீதே இருக்கும்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏதாவது போருக்காக புறப்படும்போது, இந்த துஆவை ஓதுவார்கள்.

اَللّٰهُمَّ اَنْتَ عَضُدِیْ
وَاَنْتَ نَصِیْرِیْ وَبِكَ اُقَاتِلُ

பொருள்: அல்லாஹ்வே! நீயே என் துணை! நீயே எனக்கு உதவி செய்பவன்! உனது நம்பிக்கையுடன் நான் போராடுகிறேன்.

தற்போது உஹது போரின் இக்கட்டான சூழலின்போது, ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் வெளிப்படுத்திய நல்லொழுக்கங்களில் இருந்து இரண்டை மட்டும் நான் எடுத்து வைக்கின்றேன். ஒன்று, தன்னுடைய உயிருக்கு ஆபத்து இருந்துபோதும் கூட இறைவனுடைய தன்மானத்தை எந்த ஒரு தயக்கமும் இன்றி வெளிப்படுத்தியது தொடர்பானதாகும். உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் வலியுறுத்தி கூறியிருந்த பிறகும் கூட முஸ்லிம்களின் அந்த பாதுகாப்புப் பாசறையை விட்டு விட்டதன் காரணமாக வெற்றி கொள்ள வேண்டிய போரானது தற்காலிகத் தோல்வியில் மாற்றப்பட்டது. மேலும் காலித் பின் வலீத் அவர்களுடைய தலைமையில் காஃபிர்களின் படையானது பின்புறம் இருந்து அதிரடியாக தாக்குதல் தொடுத்த காரணத்தினால் முஸ்லிம்களின் படை சிதறிவிட்டது. மேலும் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் சில ஸஹாபிகளுடன் முற்றுகையிடப்பட்டார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அன்னாருக்கு காயம் ஏற்பட்டது. மேலும் ஒரு பள்ளத்தின் நடுவில் அன்னார் (ஸல்) ஸஹாபிகளுக்கு மத்தியில் மேலிருந்து கீழே விழுந்த காரணத்தினால் அன்னார் (ஸல்) ஷஹீதாகிவிட்டார்களோ என்ற சந்தேகம் எழுந்தது. அப்போது அபூ ஸுஃப்யான் அந்த பாசறைக்கு அருகில் நின்று கொண்டு இவ்வாறு உரத்த் குரலில் கூறினார்: முஸ்லிம்களே! உங்களில் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கின்றாரா? அப்போது அன்னார் (ஸல்) ஸஹாபிகளுக்கு எந்தவொரு பதிலும் அளிக்க வேண்டாம் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கட்டளை இட்டிருந்தார்கள். அதன் பிறகு அவர் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி), ஆகியோர் தொடர்பாகவும் இதே கேள்வியை கேட்டார். அதற்கும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு ஏற்ப ஸஹாபிகள் பதில் அளிக்கப்படவில்லை. பதில் அளிக்கப்படாததன் காரணமாக அபூஸுஃப்யான் அனைவரும் மரணித்து விட்டதாக கருதி உரத்த குரலில்

اُعْلُ هُبَلْ

என்று கூறினார். ஹுபுல் சிலையே ! உன்னுடைய மகத்துவம் ஓங்குக! என்று முழக்கமிட்டார். அப்போது எம்பெருமானார் (ஸல்) அவர்கள் நீங்கள் இப்போது ஏன் பதில் அளிக்கவில்லை என கேட்டார்கள். அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் என்ன பதில் கூறவேண்டும்? என ஸஹாபிகள் கேட்டார்கள். அப்போது அன்னார் (ஸல்)

اَللّٰهُ اَعْلٰى وَاَجَلّ

என்று கூறினார்கள்:

பொருள்: அல்லாஹ்வே! உயர்ந்தவன் மேலானவன்! அனைத்து மகத்துவமும், கண்ணியமும் அல்லாஹ்விற்கே உரியது! என கூறுங்கள் எனக் கூறினார்கள். அதற்கு அபூ ஸுஃப்யான் எங்களுடன் உஸ்ஸா சிலை இருக்கிறது; உங்களுக்கென்று எந்தவொரு உஸ்ஸாவும் இல்லை என கூறியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம்

لَنَا الْعُزّٰى وَلَا
عُزّٰى لَكُمْ اَللّٰهُ مَوْلَانَا وَلَا مَوْلٰى لَكُمْ

என்று கூறுமாறு கட்டளையிட்டார்கள்.

பொருள்: உஸ்ஸா சிலை ஒரு பொருட்டா என்ன? எங்களுடன் எங்களுடைய உதவியாளனான அல்லாஹ் இருக்கின்றான்; உங்களுடன் எந்தவொரு உதவியாளனும் இல்லை!

இரண்டாவது சம்பவம், இதே சந்தர்ப்பத்தில் அனைத்து உலகிற்கும் அருட்கொடையான ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் தன்னுடைய உயிரை பறிக்க வந்த எதிரிகளுக்கான பாவமன்னிப்பு மற்றும் நேர்வழி கிடைக்க துஆ செய்த சம்பவமாகும்.

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

தற்போது கூறியது போன்று, அந்த போர்க் களத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இணை வைப்பாளர்கள் சார்பாக காயம் ஏற்பட்டது. மேலும், அன்னாரின் கவசத்தில் இருந்த ஓர் ஆணி அன்னாரின் முகத்தை துளைத்து விட்டது. அதன் காரணமாக அன்னாருடைய இரண்டு அருளுக்குரிய பற்கள் உடைந்து விட்டன. இந்த ஆழ்ந்த வேதனை மற்றும் துக்கத்தின் சந்தர்ப்பத்தில் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மிக வேதனையுடன், எந்த சமுதாயம் தன்னுடைய நபியை அவர் இறைவன் பக்கம் அழைத்தார் என்ற காரணத்தினால் அந்த நபியின் முகத்தில் ரத்தம் வழிய செய்ததோ அப்படிப்பட்ட சமுதாயம் எவ்வாறு ஈடேற்றம் அடையும்? என்று கூறினார்கள். அதன் பிறகு சிறிது நேரம் அமைதியாகி விட்டு கருணையின் உணர்வுகள் உள்ளத்தில் பொங்கி எழுந்தவுடன் மீண்டும்

اَللّٰهُمَّ اغْفِرْ لِقَوْمِيْ فَاِنَّهُمْ لَا يَعْلَمُوْنَ

என்று கூறினார்கள்.

பொருள்: அல்லாஹ்வே! நீ என்னுடைய சமுதாயத்தை மன்னித்து விடுவாயாக! ஏனெனில், அவர்களுடைய இந்த செயலானது அறிவீனம் மற்றும் அறியாமையினால் நிகழ்ந்ததாகும். (புஹாரீ, கிதாப் ஆஹாதீஸுல் அன்)ம்பியா)

பத்ர் மற்றும் உஹது போருக்கு பிறகு மக்கத்துக் காஃபிர்களின் காயமானது முஸ்லிம்களுடன் வன்மத்தை மேலும் அதிகரிக்கச் செய்து விட்டது. அதனால், முஸ்லிம்களை நாட்டை விட்டு வெளியேற்றி விட்டனர். யூத கோத்திரமான பனூ நளீர் அரபு நாட்டில் உள்ள பிற கோத்திரங்களை தூண்டி விட்டவாறு மக்கத்து குறைஷியர்களின் பொறாமையின் நெருப்பில் எரிபொருளை ஊற்றுவதற்கான பணியை செய்து கொண்டிருந்தது. எனவே அபூ ஸுஃப்யான் தலைமையில் இந்த படை மக்காவிலிருந்து புறப்பட்டபோது பிற கோத்திரங்களான ஃகத்ஃபான், பனூ அஸத், ஃபஸாராஹ், ஷஜஃ, பனூ மரா ஆகிய கோத்திரங்களும் அத்துடன் இணைந்து கொண்டன. இவ்வாறாக அரபு நாட்டின் ஒட்டுமொத்த கோத்திரங்களின் போர் படையின் இந்த எண்ணிக்கையானது மதீனாவை எட்டிய போது, 10000 ஆக இருந்தது.

எதுவரை இஸ்லாத்தை உலகிலிருந்து அழித்துவிடவில்லையோ அதுவரை திரும்பி செல்ல மாட்டோம் என்ற உறுதியுடன் ஒரு மிகப் பெரிய வெள்ளப் பெருக்கைப் போன்று மதீனாவிற்குள் படையெடுத்து வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புலனாய்வு அமைப்பு எவ்வாறு உறுதி வாய்ந்ததாகவும், வலுவானதாகவும் இருந்தது என்றால் குறைஷிகளுடைய படை மக்காவில் இருந்து வெளியேறிய அத்தருணமே அன்னாருக்கு அதன் செய்தி கிடைத்து விட்டது. அதன் அடிப்படையில் அன்னார் (ஸல்) ஸஹாபிகளை ஒன்று திரட்டி ஆலோசனையை பெற்றார்கள். அப்போது ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்கள் மதீனாவின் பாதுகாப்பற்ற பகுதிக்கு முன்பு ஒரு நீண்ட மற்றும் ஆழமான அகழைத் தோண்டி நாம் நம்மை பாதுகாத்துக் கொள்வோம் என்று கூறிய ஆலோசனையை அன்னார் (ஸல்) ஒப்புக் கொண்டார்கள். எனவே எப்படிப்பட்ட நிலையில் அகழ் தோண்டுவதற்கான பணி ஆரம்பமானது என்றால், முஸ்லிம்கள் பல சமயங்களில், பட்டினியுடன் இருக்க நேர்ந்தது. ஸஹாபிகள் மட்டுமல்லாமல் ஈருலகத்தின் மன்னரான முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் சுயமே பசியின் வேதனையை தவிர்ப்பதற்கு வயிற்றில் கல்லைக் கட்டிக் கொண்டு இருந்தார்கள். அப்படிப்பட்ட நெருக்கடியான காலகட்டத்தில் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் வெளிப்படுத்திய நன்னடத்தைகளில் சிலவற்றை நான் கூறுகிறேன்.

அதில் ஒன்று கண்ணியத்திற்குரிய ஸஹாபா பெருமக்கள் கூலித் தொழிலாளிகளைப் போன்று அகழ் தோண்டுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். அந்தப் பணியில் நம்முடைய எஜமானர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கு பணியை கொடுத்து விட்டு வீட்டில் சென்று அமைதியாக அமர்ந்து விடவில்லை. மாறாக, ஸஹாபிகளுடன் அகழ் தோண்டினார்கள். மேலும் அத்துடன் ஸஹாபிகளின் இயல்பில் உத்வேகத்தை ஏற்படுத்தும் விதமாக இந்த கவிதையை கூறி வந்தார்கள்:

اَللّٰهُمَّ اِنَّ الْعَيْشَ عَيْشُ الْاٰخِرَةْ
فَاغْفِرْ لِلْاَنْصَارِ وَالْمُهَاجِرَ

பொருள்:

அல்லாஹ்வே! உண்மையான வாழ்வானது மறுமையின் வாழ்வே ஆகும். எனவே உன்னுடைய கருணையினால் அன்ஸார் மற்றும் முஹாஜிர்களை மன்னித்து விடுவாயாக!

இதுபோன்ற சில கவிதைகளை ஸஹாபிகளுடன் இணைந்து ராகத்துடன் படித்ததற்கான குறிப்பும் காணக் கிடைக்கிறது.

மற்றொரு நற்பண்பு ஆட்சியில் இருக்கின்ற அதிகாரிகள் மற்றும் ராணுவ தளபதிகளுக்கான கலங்கரை விளக்கமாக திகழ்கின்றது. அது அகழ் தோண்டப்படும்போது, ஒரு கற்பாறை இருந்தது. அந்த கற்பாறையை ஸஹாபிகள் கடும் முயற்சியுடன் உடைக்க முற்பட்டபோது, அது உடைபடவில்லை. ஸஹாபிகளின் நம்பிக்கையும், அவர்களின் புகலிடமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களாகத் தான் இருந்தார்கள். எனவே அன்னாருடைய சமூகத்தில் ஆஜராகி அந்த நிலையை எடுத்துக் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம் அதற்கான தீர்வு மற்றும் ஆலோசனையை மட்டுமே வழங்கிவிட்டு விலகி சென்றுவிடவில்லை. மாறாக, அன்னார் (ஸல்) சுயமே அந்த இடத்திற்கு சென்று கோடாரியை கையில் பிடித்து முதல் முறை அடித்தார்கள். இரண்டாவது முறையும் அடித்தார்கள். பிறகு மூன்றாம் முறை அடித்தபோது, அந்த கற்பாறை உடைந்து சிதறிவிட்டது.

இந்த உயர்ந்த நற்பண்பு கண்ணியத்திற்குரிய இறைவனுடைய முன்னிலையில் எந்த அளவிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருக்கின்றது என்றால், அன்னார் (ஸல்) ஒவ்வொரு முறையும் அடித்த போது அல்லாஹு அக்பர்! என்று முழக்கமிட்டார்கள். ஸஹாபிகள் அன்னாரிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே!




தாங்கள் அவ்வாறு கூறியதற்கான காரணம் என்ன? என்று கேட்டனர். அதற்கு, நான் முதல் முறை அடித்தபோது, அல்லாஹ் எனக்கு காட்டிய ஆன்மிகக் காட்சியில் ரோமானிய பேரரசில் உள்ள சிரியாவின் அரண்மனைகள் காட்டப்பட்டு அதன் சாவிகள் எனக்கு வழங்கப்பட்டன. இரண்டாவது முறை நான் அடித்த போது வெளியான ஒளியில், பாரசீக பேரரசில் உள்ள நகரங்களின் வெள்ளை மாளிகைகள் எனக்கு காட்டப்பட்டு அந்த பேரரசின் சாவிகள் எனக்கு வழங்கப்பட்டன. மூன்றாவது முறை வெளியான அந்த ஒளியில் ஸன்ஆவின் வாயில் எனக்கு காட்டப்பட்டு எமன் அரசின் சாவிகள் எனக்கு வழங்கப்பட்டன. எனவேதான் இறைத் தோற்றத்தின் வெளிப்பாடான ஒவ்வொரு காட்சிகளின் போதும் நான் அல்லாஹு அக்பர்! என்ற முழக்கத்தை முழங்கினேன்! என்று கூறினார்கள். என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியவனும், அழியாதவனும் ஆகிய அனைத்து விதமான பெருமைகளுக்கும் எஜமானனான இறைவன் நம்முடைய இந்த பலவீனமான நிலையில் நமக்கு எதிர்காலத்தின் வெற்றிகள் மற்றும் இஸ்லாத்தின் வெற்றிகளின் காட்சியை காட்டித் தந்து விட்டான்.

கண்ணியத்திற்குரிய விருந்தினர்களே! இது ஒன்றும் கதையோ அல்லது கற்பனையோ அல்ல. மாறாக, இந்த சம்பவங்கள் உண்மையானவை ஆகும் என்று உலகம் சான்று பகர்கின்றது. இந்த வாக்குறுதிகள் தத்தமது நேரத்தில் அதாவது சில சம்பவங்கள் எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்நாளின் இறுதி நாட்களிலும், இன்னும் அதிகமான சம்பவங்கள் அன்னாரின் கலீஃபாக்களின் காலகட்டத்திலும் பூர்த்தியானதன் மூலம் எதிர்காலத்தின் வெற்றிகளுக்கான காட்சிகளை மிகவும் பலவீனமான காலகட்டத்தில் அந்த இறைவனே காண்பித்தான் என்பது மெய்பித்துக் காட்டப்பட்டது.

அகழ் போரின் முடிவானது பொறுமையை சோதித்த 20 நாட்கள் முற்றுகைக்கு பிறகு எந்த ஒரு இரத்தக்களரி போரும் சண்டையும் இன்றி கண்ணியத்திற்குரிய ரஸூல் (ஸல்) அவர்களின் துஆ மற்றும் எல்லா வல்ல அல்லாஹ்வின் வியப்பூட்டும் வல்லமையினால் நிகழ்ந்தது. ஸஹாபா பெருமக்கள் அந்த முற்றுகையில் மிகுந்த துன்பத்திற்கு ஆளானார்கள். இறுதியில் பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நீங்கள் அல்லாஹ்விடம் அவன் தனது அருளைக் கொண்டு இந்த துன்பத்தை விலக்குவானாக! என துஆ செய்யுங்கள் என்று வேண்டினார்கள். மேலும், நாங்கள் இறைவனிடம் என்ன துஆ கேட்க வேண்டும்? என்பதை எங்களுக்கு கற்றுக் கொடுங்கள் என்றும் கேட்டார்கள். எனவே அன்னார் (ஸல்) ஸஹாபிகளுக்கு ஆறுதல் அளித்தவாறு நீங்கள் இறைவனிடம் இவ்வாறு துஆ செய்ய வேண்டும் என்று கூறினார்கள்; அதாவது அவன் உங்களின் பலவீனங்களின் மீது திரையிட வேண்டும் என்றும் உங்களுடைய உள்ளங்களை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் உங்களின் அச்சமான பதற்றமான நிலையை அகற்ற வேண்டும் என்றும் துஆ செய்யுங்கள் என்றார்கள். அதன் பிறகு அன்னார் (ஸல்) இவ்வாறு துஆ செய்தார்கள்:

திருக்குர்ஆனை இறக்கி உலகில் தன்னுடைய கட்டளையை பிறப்பிக்கும் இறைவனே! வேகமாக கணக்கை முடிப்பவனே! நீ உன்னுடைய அருளினால் நிராகரிப்பாளர்களின் இந்த கூட்டத்தை தோற்கடிப்பாயாக! மேலும் எங்களை அவர்கள் மீது வெற்றி பெறச் செய்வாயாக! அவர்களை நன்கு ஆட்டி அசைத்து வைப்பாயாக!

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! இந்த விளைவைப் பாருங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் விண்ணின் மற்றும் பூமியில் இருந்து எப்படிப்பட்ட காரணிகளை ஏற்படுத்தினான் என்றால், அவர்களின் கூட்டத்திற்குள் பிளவு ஏற்பட்டு விட்டது. மறுபுறம் இரவு வேளையில் எப்படிப்பட்ட வேகமான புயல் காற்று வீசியது என்றால், நிராகரிப்பாளர்களின் கூடாரங்களை அந்தப் புயல் பிடுங்கி எறிந்து விட்டது. தடுப்புக்காக கட்டப்பட்டிருந்த திரைகள் தடுப்பை உடைத்துக் கொண்டு பறந்து சென்றன. சட்டிகள் தலைகீழாக கவிழ்ந்து அடுப்பில் விழுந்து விட்டன. மேலும் மணல் மற்றும் கற்களினால் ஆன மழை எதிரிகளின் காதுகள் கண்கள் மற்றும் மூக்குகளை நிறைத்து விட்டது. எல்லாவற்றையும் விட மிகப் பெரிய கொடுமை என்னவென்றால், அரபு நாட்டின் தொன்று தொட்ட நடைமுறைக்கு ஏற்ப இரவு நேரத்தில் மிகவும் பிரத்தியேகமாக ஒளிவீசி எரிந்து கொண்டிருந்த சமுதாயச் சின்னமான அந்த தீயானது அணைய ஆரம்பித்தது.

இந்தக் காட்சியானது ஏற்கனவே நீண்ட முற்றுகையின் காரணத்தினால் பதற்றம் அடைந்திருந்த, யூகங்கள் மீது நம்பிக்கை கொண்டிருந்த உள்ளங்களை எவ்வாறு நடுநடுங்க வைத்தது என்றால், அந்தப் படையின் தளபதியான அபூஸுஃப்யான் குறைஷியர்களின் தலைவர்களை அழைத்து நம்முடைய சிக்கல் இன்னும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. எனவே தற்போது இங்கு இருப்பது சரியில்லை என்று கூறியவாறு தன்னுடைய சேனைகளை திரும்பி வருமாறு கட்டளையிட்டு அவரும் சுயமே தன்னுடைய ஒட்டகத்தின் மீது ஏறி அமர்ந்து விட்டார். மேலும் அபூ ஸுஃப்யான் எந்த அளவிற்கு பதட்டம் அடைந்து விட்டார் என்றால் ஒட்டகத்தின் கயிறைக் கூட கழற்ற வேண்டும் என்ற நினைவு கூட அவருக்கு இருக்கவில்லை. எவ்வாறு இருப்பினும், பார்த்துக் கொண்டிருக்கும்போதே, பத்தாயிரம் எண்ணிக்கையிலான போர்ப் படை அந்த போர்க்களத்திலிருந்து எவ்வாறு ஓடியது என்றால், காலை விடிவதற்கு முன்னரே மதீனாவின் கீழ்வானம் நிராகரிப்பாளர்களின் போர்ப் படையிலிருந்து எழுந்த புழுதி மற்றும் தூசியினால் தூய்மையாகி விட்டது. இந்தக் காட்சியைக் கண்ட எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனின் வல்லமை மற்றும் மகத்துவத்தை போற்றியவாறு




لَااِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ وَنَصَرَ عَبْدَهٗ
وَهَزَمَ الْاَحْزَابَ وَحْدَهٗ

என்று கூறினார்கள்:

பொருள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவனே தன் அடியார்களுக்கு உதவி புரிந்தான். மேலும் அவன் சுயமே அனைத்துப் போர்ப்படைகளையும் வீழ்த்தி விட்டான்.

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! பிற போர்களின் குறிப்புகளை விட்டுவிட்டு இறுதியில் இந்த எளியவன் மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்தின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எந்த ஒப்பற்ற மற்றும் ஒப்பில்லாத உயர்வான நல்லொழுக்கம் வெளிப்பட்டதோ அவற்றுள் சிலவற்றை குறிப்பிடுகின்றேன். ஆனால், அதற்கு முன்பு ஹுதைபியா சமாதான உடன்படிக்கை மற்றும் கைபர் போர் வெற்றியின் மீது பார்வையை செலுத்துவது அவசியம் என கருதுகிறேன். ஏனெனில், ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் சம்பவம் தான் இறுதியில் மக்கா வெற்றிக்கு வித்தாக அமைந்தது.

நினைவிற் கொள்ள வேண்டும்! ஹுதைபியா பயணமானது எந்த போர் மற்றும் சண்டை நோக்கத்துடனும் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னுடைய ஒரு கனவின் அடிப்படையில் பைத்துல்லாஹ்வை தவாஃப் செய்வதை ஒரு இறை அடையாளமாக கருதி ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு துல் கஃதா மாதத்தில் தன்னுடைய 1400 ஸஹாபிகளுடன் மக்காவை நோக்கி பயணத்தை மேற்கொண்டார்கள். ஆனால், அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப மக்காவிற்கு 9 மைல் தொலைவில் உள்ள ஹுதைபியா என்ற இடத்தில் அன்னாருக்கு முகாமிட நேர்ந்தது. ஏனெனில் மக்காவில் நுழைவதற்கு மக்கத்து குறைஷியர்கள் சார்பாக முஸ்லிம்களுக்கு தடை விதிக்கப்பட்டு இருந்தது. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் ஸஹாபிகள் துல்ஹலீஃபா என்ற இடத்திலேயே இஹ்ராம் அணிந்து கொண்டார்கள். மேலும் தவாஃப் செய்த பிறகு குர்பானி கொடுப்பதற்கான விலங்குகளையும் தன்னுடன் எடுத்துச் சென்றார்கள். அவ்வாறு இருந்தும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வாள் ஏந்தியவாறு மக்காவில் நுழைய வேண்டும் என்ற எந்தவொரு எண்ணமும் இருக்கவில்லை ; இதன் காரணமாகத் தான் மக்காவாசிகளுக்கு புரிய வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தன்னுடைய மருமகனான ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை தூதுவராக மக்காவிற்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால், அவர்கள் திரும்பி வருவதற்கு சிறிது தாமதம் ஆனபோது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டு விட்டார்கள் என்ற வதந்தி பரவியது.

இந்தச் செய்தியை கேட்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு கூடியிருந்த ஸஹாபிகளை கருவேல மரத்தின் கீழ் ஒன்று திரட்டினார்கள். மேலும் இந்த செய்தி உண்மையானது என்றால் இறைவன் மீது ஆணையாக! உஸ்மானின் மரணத்திற்கு நாம் பழிதீர்க்காத வரை இந்த இடத்தில் இருந்து விலகிச் செல்ல மாட்டோம் எனக் கூறினார்கள். வாருங்கள்! என்னுடைய கை மீது உங்கள் கையை வைத்து, எங்களில் எந்த நபரும் புறமுதுகை காட்டி ஓட மாட்டோம்; போர்க் களத்தில் தன் உயிரை பொருட்படுத்தாமல் மடிந்து விடுவோமே தவிர எந்நிலையிலும் எங்களுடைய இடத்தை விட்டு ஒருபோதும் விலக மாட்டோம் என்று நீங்கள் உறுதிமொழி செய்யுங்கள் எனக் கூறினார்கள்.

இதன் பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கத்து காஃபிர்களிடம் மிகத் தெளிவான சொற்களில் இந்த தூதுச் செய்தியை வழங்கினார்கள்.

எங்களுடைய நோக்கம் போர் புரிவதோ அல்லது சண்டையிடுவதோ அல்ல. நாங்களோ பைத்துல்லாஹ்வை தவாஃப் செய்கின்ற ஒரே நோக்கத்துடன் தான் வந்துள்ளோம். இந்த நோக்கத்தில் எவராவது தடை ஏற்படுத்தினால் குறைஷியர்கள் எங்களுடன் ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரை சமாதானத்திற்கான உடன்பாட்டை மேற்கொண்டாலே தவிர நிர்பந்தத்தின் அடிப்படையில் அவருடன் நாங்கள் போர் புரிவோம்.

இதன் அடிப்படையில், மக்கத்து குறைஷியர்களின் பிரதிநிதியான ஸுஹைல் பின் அம்ர் (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேற்கொண்ட உடன்படிக்கை தான் ஹுதைபியா சமாதான உடன்படிக்கை என்ற பெயரில் பிரசித்து பெற்றுள்ளது. இந்த உடன்படிக்கையின் சில நிபந்தனைகள் எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், ஸஹாபிகளுக்கு மிகுந்த துக்கமும், வருத்தமும் ஏற்பட்டது. மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களோ மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ அமைதி சீர்கெட்டு விடக் கூடாது என்றே விரும்பினார்கள். எனவே அன்னார் (ஸல்) எந்த இறைவனின் கையில் என் உயிர் உள்ளதோ, அந்த இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ்வின் கண்ணியத்தை நிலைநாட்டுவதற்காக மக்கத்து குறைஷியர்கள் எந்த கோரிக்கையை என்னிடம் வைத்தாலும் நான் கண்டிப்பாக அதை ஏற்றுக் கொள்வேன் என்றார்கள்.

எவ்வாறு இருப்பினும், இந்த ஒப்பந்த உடன்படிக்கை எழுதப்பட்டது. மேலும் கண்ணியத்திற்குரிய இறைவனாகிய அல்லாஹ் அந்த உடன்படிக்கைக்கு எப்படிப்பட்ட அங்கீகாரத்தை வழங்கினான் என்றால், இந்த உடன்படிக்கைக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை வெளிப்படையில் பார்க்கும்போது, விரும்பத்தக்கதாகவே இருந்தது. இந்த உடன்படிக்கையை முடித்து திரும்பும்போது, அல்லாஹ் அன்னார் (ஸல்) மீது மகத்துவம் வாய்ந்த ஒரு அதிகாரத்தை இறக்கினான். அந்த அதிகாரம் அல்ஃபத்ஹ் என்ற பெயரில் திருக்குர்ஆனில் உள்ளது. பிஸ்மில்லாஹ்விற்கு பிறகு உள்ள முதல் வசனத்திலேயே இந்த உடன்படிக்கையை தெளிவான வெற்றி என்று கூறியவாறு இவ்வாறு கூறுகிறான்:

اِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُّبِيْنًا

பொருள்: நாம் உமக்கு மிகத் தெளிவான ஒரு வெற்றியினை வழங்கியுள்ளோம். (அல்ஃபத்ஹ்: 48:2)

மேலும் இந்த உடன்படிக்கையின் சந்தர்ப்பத்தின்போது, விலங்குகளை அறுத்து பலியிடுவது தொடர்பான உடன்படிக்கையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கையில் செய்யப்பட்ட பைஅத் தொடர்பாக இறைவன் இவ்வாறு கூறுகிறான்:

اِنَّ الَّذِيْنَ يُبَايِعُوْنَكَ اِنَّمَا يُبَايِعُوْنَ اللّٰهَ
يَدُ اللّٰهِ فَوْقَ اَيْدِيْهِمْ ۔

பொருள்: உம்மிடம் உடன்படிக்கை செய்து கொள்பவர்கள் அல்லாஹ்விடமே

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol.10Thursday 26 JUNE- 03 JULY 2025 Issue No.26 & 27

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

உடன்படிக்கை செய்கின்றனர். அல்லாஹ்வின் கை அவர்களின் கைகளின் மேல் இருக்கிறது. (48:12)

எவருடைய கையை இறைவன் தன்னுடைய கை என்று கூறியுள்ளானோ அவர் எப்படிப்பட்ட மகத்துவம் வாய்ந்த தூதராக இருக்கின்றார்! அந்த நபித்தோழர்கள் எந்த அளவிற்கு நற்பேறு பெற்றவர்களாக திகழ்கிறார்கள்! அவர்கள் ஒருவிதத்தில் அல்லாஹ்வின் கையில் பைஅத் செய்துள்ளார்கள்.

எனவே இதே அதிகாரத்தில் 19-வது வசனத்தில் அந்த பைஅத் செய்தவர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டதாக சான்தழ் வழங்கியவாறு இவ்வாறு கூறுகிறான்:

لَقَدْ رَضِيَ اللّٰهُ عَنِ الْمُؤْمِنِيْنَ اِذْ يُبَايِعُوْنَكَ تَحْتَ الشَّجَرَةِ فَعَلِمَ مَا فِيْ
قُلُوْبِهِمْ فَاَنْزَلَ السَّكِيْنَةَ عَلَيْهِمْ وَاَثَابَهُمْ فَتْحًا قَرِيْبًا

பொருள்: நம்பிக்கையாளர்கள் மரத்திற்கடியில் உம்மிடம் உடன்படிக்கை செய்து கொண்டபோது, நிச்சயமாக அல்லாஹ் அவர்களைக் குறித்து மிக்க மகிழ்ச்சியடைந்து, அவர்களது உள்ளங்களிலிருந்த(நம்பிக்கை) தனை அறிந்து, அவர்களுக்கு சாந்தியை இறக்கி, அண்மையில் வரவிருக்கும் ஒரு வெற்றியினை அவர்களுக்கு வெகுமதியாக வழங்கினான். (48:19)

எவ்வாறு அல்ஃபத்ஹ் என்ற அதிகாரத்தின் ஆரம்பத்தில் மிகத் தெளிவான வெற்றியைக் குறித்த நற்செய்தியை வழங்கியிருந்தானோ., அந்த வெற்றியானது மக்கா வெற்றி மூலமாக முழுமை அடைந்தது. அது அல்லாமல் உடனடி மகிழ்ச்சிக்காக ஓர் அண்மையில் கிடைக்கின்ற வெற்றி தொடர்பான நற்செய்தியையும் கூறிவிட்டான். அந்த வெற்றியானது எந்தவொரு போரும், சண்டையும் இன்றி கைபர் வெற்றி வடிவில் கிடைத்தது.

தற்போது நான் கைபர் வெற்றி தொடர்பான சம்பவங்களை விட்டுவிட்டு அந்த வெற்றிக்குப் பிறகு வெளிப்படுத்தப்பட்ட ஒரு நற்பண்பு தொடர்பாக கூறிவிட்டு மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்தில் வெளிப்பட்ட நல்லொழுக்கங்கள் மற்றும் நற்பண்புகள் தொடர்பாக சுருக்கமாக கூறுவேன்.

ஹஸ்ரத் அர்பாஸ் பின் ஸாரியா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் கைபர் போரில் கலந்து கொண்டோம். கைபரில் கண்காணிப்பாளனாக உள்ள ஒரு நபர் மிகவும் அதிக பிரசங்கித்தனமானவர் ஆவார். அந்த நபர் வெற்றிக்கு பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, முஹம்மத் (ஸல்) அவர்களே! உங்களுக்கு எங்கள் விலங்குகளை அறுப்பதற்கும், எங்களுடைய பழங்களை உண்ணுவதற்கும் மேலும் எங்களுடைய பெண்களை அடிப்பதற்கும் உரிமை இருக்கின்றதா? எனக் கேட்டார். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் கோபம் அடைந்தவாறு அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் மூலமாக அறிவிப்பு செய்து தொழுகைக்காக மக்களை ஒன்று திரட்டினார்கள். அதன் பிறகு ஸஹாபிகளை நோக்கி உரை நிகழ்த்தியவாறு கூறினார்கள்: திருக்குர்ஆனில் அல்லாஹ் எதை ஹராம் என்று கூறியுள்ளானோ அதைத் தவிர வேறொன்றும் ஹராம் இல்லை என உங்களில் எவர் ஒருவர் தலையணை மீது சாய்ந்து அமர்ந்து கொண்டு அவ்வாறு எண்ணுவாரோ கேளுங்கள்; நானும் சில கட்டளைகளை வழங்கி உள்ளேன்; சில விஷயங்களில் இருந்து தடுத்துள்ளேன். அதுவும் குர்ஆனைப் போன்று தான் எல்லா வல்ல அல்லாஹ் உங்களுக்காக நீங்கள் வேதம் வழங்கியவர்களுடைய வீட்டிற்குள் அனுமதி இன்றி நுழைவதை ஆகுமானதாக ஆக்கவில்லை. மேலும் அவருடைய பெண்களை அடிப்பதற்கும் அனுமதி வழங்கவில்லை. அவர்களின் பழங்களை உண்பதற்கும் அனுமதி இல்லை. (உடன்படிக்கைக்கு ஏற்ப) அவர்களே சிறிது உங்களுக்கு கொடுத்தாலே தவிர. (ஈட்டுத் தொகையாக). (அபூ தாவூத்)

ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் கனிகளில் ஒன்று கைபர் வெற்றி. அதாவது அருகில் கிடைக்கக் கூடிய வெற்றி என்ற நற்செய்தியின் வடிவில் முழுமையடைந்தது. அதன் பிறகு இரண்டு வருடங்கள் கழித்து ஹிஜ்ரீ 8-ம் ஆண்டில் மக்கா வெற்றியின் காட்சியை உலகம் கண்டது. இந்த வெற்றியும் மக்கத்து குறைஷியர்கள் சார்பாக ஹுதைபியா சமாதான உடன்படிக்கையை முறிப்பதற்கான வழிவகையாக அமைந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 10,000 பரிசுத்தவான்களோடு மதீனாவிலிருந்து மக்காவை நோக்கி புறப்பட்டார்கள். இங்கு இதையும் கூறுவது அவசியம் ஆகும். இந்த அளவிற்கு அதிகமான எண்ணிக்கை கொண்ட படையை ஆயத்தம் செய்வதையும், அணிவகுத்து வழிநடத்துவதையும் மறைவாக வைப்பது என்பது வெளிப்படையில் சாத்தியமற்ற ஒன்றுதான். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு இக்கட்டான நிலையிலும் துஆ மற்றும் திட்டம் வகுத்து செயல்பட்டு வந்தார்கள். அன்னார் (ஸல்) இவ்வாறு துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ خُذِ الْعُيُوْنَ وَالْاَخْبَارَ عَنْ قُرَيْشٍ

பொருள்: அல்லாஹ்வே! குறைஷியர்களின் உளவாளிகளை தடுத்து வைப்பாயாக! மேலும், எங்களுடைய செய்திகள் அவர்கள் வரை எட்ட விடாதே!

இத்துடன் அன்னார் (ஸல்) இவ்வாறு திட்டம் வகுத்தார்கள். அதாவது மதீனாவிலிருந்து மக்காவை நோக்கி செல்கின்ற அனைத்து வழிகளிலும் காவலுக்கு ஆட்களை நியமித்தார்கள்.

எனவே அல்லாஹ் அன்னாரின் துஆக்களையும், திட்டங்களையும் எவ்வாறு ஏற்றுக் கொண்டான் என்றால், வியக்கத் தக்க வகையில் இந்த முக்கியத்துவம் வாய்ந்த படையானது எந்தவோர் அறிவிப்பும், தடையும் இன்றி மக்காவின் பள்ளத்தாக்கிற்குள் நுழைந்து விட்டது. அன்னார் (ஸல்) ஸஹாபிகளுக்கு பல குழுக்களாக பிரிந்து செல்லுமாறு கட்டளையிட்டார்கள். ஒவ்வொரு பாசறைக்கு முன்பும் தீப்பந்தம் இருக்க வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டு இருந்தார்கள். காட்டில் பத்தாயிரம் பேருக்காக அமைக்கப்பட்டு இருந்த பாசறைகளுக்கு முன் வைக்கப்பட்டிருந்த தீப்பந்தங்களின் ஒளி மிக பயங்கரமாக காட்சியளித்தது. மக்காவில் இரவு நேரத்தில் ரோந்து பணியை மேற்கொண்ட அபூ ஸுஃப்யான் மற்றும் அவருடைய நண்பர்கள் இந்த எண்ணற்ற ஒளிகளை கண்டு வியப்பிற்குள்ளானார்.

அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூ ஸுஃப்யானிற்கு பாதுகாப்பு வழங்குவதாக ஏற்கனவே அறிவித்திருந்தார்கள். எனவே ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அவருக்கு அடைக்கலம் அளித்தார்கள். காலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சமூகத்தில் ஆஜர்படுத்தியபோது, அன்னார் (ஸல்) அவரிடம் இவ்வாறு கூறினார்கள்:

அபூஸுஃப்யானே! தற்போதும் கூட அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவரும் இல்லை என்று சாட்சி கூறுவதற்கான நேரம் உமக்கு வரவில்லையா? என்று கேட்டார்கள். அப்போது, எந்த அபூஸுஃப்யான் உஹது போரில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஷஹீதாகிவிட்டார்கள் என்ற அறிவிப்பை கேட்டுவிட்டு மகிழ்ச்சியடைந்தவாறு ஹுபல் சிலை ஓங்குக! என்று முழக்கமிட்டாரோ தற்போது அதே அபூஸுஃப்யான்

தொடர்ச்சி 10-ம் பக்கம்...

**National Watch Company**
**Sales & Service**

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad